விலை ரூபா: 5.00 பக்கங்கள்:-எட்டு Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 சித்திரை 18 புதன்கிழமை (01.05.2002) தொலைபேசி 3378 ஒலி 133

02 MAY 2002






## நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக

# விடுதலைப்புலிகளின் தடையை நீக்குவதென முடிவு செய்துள்ளேன்!

## பிரதமர் ரணில் தெரிவிப்பு



(நமது நிருபர்)

**தமிழீழ விடுதலைப்புலிகள் மீது விதிக்கப் பட்டுள்ள தடையை நீக்காமல் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவது சாத்தியப்பட மாட்டாது. எனவே விடுதலைப்புலிகள் மீதா னதடையை நீக்கியோ அல்லது தடையை குறிப்பிட்ட காலத்துக்கு ஒத்திவைத்தோ அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தப் போவதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்துள்ளார்**

விக்கிரமசிங்கா நேற்று கலந்துரை யாடல் ஒன்றை நடத்தியிருந்தார். அக்கலந்துரையாடலில் விடுதலைப் புலிகள் அமைப்பின் மீது இலங்கை யில் விதிக்கப்பட்டுள்ள தடை சமா தான நடவடிக்கைகளை பாதிக்குமா என்பது குறித்து கருத்து வெளியிட்ட போதே பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

விடுதலைப் புலிகள் மீதான

(08ம் பக்கம் பார்க்க)

ப... கை ஆசிரியர்களை ... அவர்களுடன் விடுதலை ...கள் மீதான தடையை நீக்கு ... தொடர்பாக பிரதமர் ரணில்

## மே தினத்தையொட்டி கொழும்பில் பலத்த பாதுகாப்பு

(கொழும்பு)

கொழும்பில் இன்று நடைபெற வுள்ள மேதின நிகழ்வுக் கூட்டங் களையொட்டி கொழும்பு நகர் பூரண பாதுகாப்பிற்குட்படுத்தப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் மே தினக்கூட்டம் பிரதமர் ரணில் விக்கி ரமசிங்காவின் தலைமையிலும், ஜே.வி.பி.யின் மேதினக் கூட்டம் விமல் வீரவன்ச தலைமையிலும் கொழும்பில் நடைபெறவுள்ளது.

இம்மேதின கூட்டங்களை அடுத்து கூடுதல் பொலிஸார் பாது

(08ம் பக்கம் பார்க்க)

## அமெரிக்க ஆயுதக் கப்பல் கொழும்புத் துறைமுகத்தில்

(கொழும்பு)

அமெரிக்காவின் பாரிய கடற்படைக்கப் பலான யுஎஸ்எஸ் கேப்ப நேற்றுக்காலை 8.30 மணியளவில் கொழும்புத்துறை முகத்தை வந்தடைந்தது.

எரிபொருள் நிரப்புவதற்காக இந்தக் கப்பல் கொழும்புத்துறைமுகத்துக்கு வந் ததாகவும் இந்தக் கப்பலின் வருகை இல ங்கை-அமெரிக்க மக்களது நட்பின் அறிகுறியாகுமென்று இலங்கைக் கான அமெரிக்க தூதுவர் அஸ்லி வில்ஸ் தெரிவித்துள்ளார்.

ஏவுகணைகள் அடங்கிய இந்தக் கப்பலில் பணியாற்றுபவர் களில் 50வீதமானவர்கள் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (த)

## ...தாயகக் கோட்பாட்டை கைவிடும்வரை ...புலிகள் மீதான தடையை நீக்கக்கூடாது

### ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அறிக்கை

(கொழும்பு)

...விடுதலைப்புலிகள் தாயகக் ...ட்பாட்டை கைவிடும் வரை அவர் ...டன் எந்தவிதமான பேச்சு வார்த்தை ...யும் நடத்தக்கூடாதென ஸ்ரீலங்கா ...சுதந்திரக்கட்சி தெரிவித்துள்ளது.

...அரசுக்கும் புலிகளுக்குமிடையில் ...டைபெறவுள்ள சமாதானப் பேச்சு வார்த்தையில் தமது கட்சியின் நிலைப்பாடு தொடர்பாக விடுக்கப் பட்டுள்ள அறிக்கையிலேயே இவ் வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்க ப்பட்டுள்ளதாவது:-

- இடைக்கால நிர்வாக சபையை விடுதலைப்புலிகளிடம் வழங்கக்கூ டாது.
- புலிகள் மீதான தடையை உடனடியாக நீக்கக்கூடாது.
- தாயகக் கோட்பாட்டை கைவி டும்வரை அவர்களுடன் எந்தவிதமான பேச்சுவார்த்தைகளையும் நடத்தக் கூடாது. ஆகிய மூன்று கோரிக்கை

(08ம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி இவ்வாரம் அமெரிக்கா பயணம்!

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா இவ்வாரம் அமெரிக்காவுக்குச் செல்லவுள்ளார்.

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்சபை சிறப்புக் கூட்டத்தில் சிறுவர் உரிமை பற்றி உரையாற்றவே அங்கு அவர் செல்லவுள்ளதாக ஜனாதிபதியின் பேச்சாளர் ஹரீம் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் சிறுவர் உரிமை களுக்காக ஜனாதிபதி ஆற்றிய சேவைகளை கருத்திற் கொண்டே ஜனாதிபதியை இக் கூட்டத்தில் உரை யாற்ற வருமாறு அழைத்தனர் என்று

(08ம் பக்கம் பார்க்க)

## ...சுயநிர்ணய உரிமையை வலியுறுத்தி

...லாயம் நடத்தக்கூடாதென ஸ்ரீலங்கா ...சுதந்திரக்கட்சி தெரிவித்துள்ளது.

...அரசுக்கும் புலிகளுக்குமிடையில் ...டைபெறவுள்ள சமாதானப் பேச்சு

அறிக்கையில் மேலும் தெரிவிக்க ப்பட்டுள்ளதாவது:-

✦ இடைக்கால நிர்வாக சபையை விடுதலைப்புலிகளிடம் வழங்கக்கூ

டும்வரை அவர்களுடன் எந்தவிதமான பேச்சுவார்த்தைகளையும் நடத்தக் கூடாது. ஆகிய மூன்று கோரிக்கை

(08ம் பக்கம் பார்க்க)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா இவ்வாரம் அமெரிக்காவுக்குச் செல்லவுள்ளார்.

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்சபை சிறப்புக் கூட்டத்தில் சிறுவர் உரிமை பற்றி உரையாற்றவே

...தெரிவித்துள்ளார்.

இலங்கையில் சிறுவர் உரிமை களுக்காக ஜனாதிபதி ஆற்றிய சேவைகளை கருத்திற் கொண்டே ஜனாதிபதியை இக் கூட்டத்தில் உரை யாற்ற வருமாறு அழைத்தனர் என்று

(08ம் பக்கம் பார்க்க)

# சுயநிர்ணய உரிமையை வலியுறுத்தி யாழில் இன்று எழுச்சிமிகு மேதினம்

## மருதனார்மடத்தில் மாபெரும் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

...மிழ் மக்களின் அபிலாஷைகளை ...றியச் செய்து தமிழ்த் தேசிய ..., மரபு வழித் தாயகம், சுயநிர்ணய ...மையை வலியுறுத்தி தமிழ் ...ன் எழுச்சியை எடுத்துக் காட்டும் ...யில் இன்று மேதினம் கொண்டா ...ள்ளது.

...க் கூட்டம் நடைபெறவுள்ள மருத னார்மடம்இராமநாதன் கல்லூரி மைதானத் திற்கு இணுவிலில் இருந்து புறப்படும் மேதின எழுச்சிப் பேரணி சென்றடை யும்

இவ்வெழுச்சி ஊர்வலத்தில் மனிதநேய அமைப்புக்கள், பொதுசன அமைப்புக்கள், பல்வேறு வகைப்பட்ட தொழிற்சங்கங்கள், கூட்டுறவு ஊழியர் சங்கங்கள், தமிழர் தேசியக்கூட்டமைப்பினர் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

(08ம் பக்கம் பார்க்க)



...க்கு நிரந்தர நியமனம் தரக்கோரி உதவிக் கணக்காய்வாளர்கள் யாழ் கூ.அ.உ. ஆணையாளர் அலுவலகம் முன் மறியல் போராட்டத்தில் ஈடுபடும் காட்சி.

## 'ஏ' பொசிட்டிவ் இரத்தம் உடன் தேவை

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையின் இரத்தவங்கிக்கு "ஏ பொசிட்டிவ்" ($A^{+}$) வகை இரத்தம் அவசரமாக தேவைப்படுவதாக வைத்தியசாலையின்

(08ம் பக்கம் பார்க்க)

# சகல மக்களும் ஏற்றுக்கொள்ளும் சமாதானத் தீர்வே அவசியம்

## மேதினச் செய்தியில் ஜனாதிபதி

(கொழும்பு)

அரசாங்கம் தற்போது முன்னெ டுத்துவரும் சமாதான முயற்சிகளின் பெறுபேறானது கௌரவத்துடன் கூடிய ஒரு சமாதான முயற்சியாக அமைய வேண்டும் இச் சமாதான முயற்சி நாட்டில் உள்ள சகல மக்களாலும் ஏற்றுக்கொள்ளப்படக் கூடியதாகவும், ஜனநாயக உரிமை யை பாதுகாப்பதாகவும் இருக்க வேண்டும் என்று ஜனாதிபதி சந்தி ரிகா குமாரதுங்கா நாட்டு மக்களுக்கு விடுத்துள்ள மேதினச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க

(08ம் பக்கம் பார்க்க)

# திருமலையில் கடற்படையினர் திடீர் துப்பாக்கி வேட்டு இரு பெண்கள் காயம்

(திருகோணமலை)

திருகோணமலை நிலாவெளிப் பகுதியில் கடற்படையினர் மேற் கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஆழ்ந்த நித்திரையில் இருந்த இரு பெண்கள் படுகாயம் அடைந்துள் ளனர்.

நேற்று முன்தினம் இரவு இடம் பெற்ற இச் சூட்டுச் சம்பவத்தில் நிலாவெளியில் தங்கியிருந்த சந் தோசபுரம் மூதூரைச் சேர்ந்த சுந் தரலிங்கம் சுபாஷினி (வயது 19) மற்றும் நிலாவெளி கோபாலபுரத் தைச் சேர்ந்த மாரிமுத்து பேச்சி முத்து(வயது 43) ஆகிய இருவருமே படுகாயம் அடைந்த நிலையில் திருகோணமலை அரசினர் வைத்தி யசாலையில் அனுமதிக்கப்பட்டுள் ளனர்.

கடற்படையினர் மேற்கொண்ட இக் கண்மூடித்தனமான துப்பாக்கி பிரயோகம் தொடர்பாக திருகோண மலை யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரிடம் முறைப்பாடு செய்ய ப்பட்டுள்ளது.

இச் சம்பவம் குறித்து கண்காணி ப்புக்குழுவினர் இன்று விசாரணைக ளைமேற்கொள்ளுவர் என்று தெரி வித்துள்ளனர்.

(08ம் பக்கம் பார்க்க)

## சிறு விளம்பரம்

### திருமண சேவை

மணமகனா? மணமகளா? உள்நாடா? வெளிநாடா? எத்தகைய மணமக்களானாலும் எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள். திரு. எம். பொன்னுத்துரை ஹரேகிருஷ்ணா திருமணசேவை பெரியமதவடி கே. கே. எஸ். வீதி, சுன்னாகம்.

(5038)

### விற்பனைக்கு

R60, SINGAR குளிர்சாதனப் பெட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: S.ரஞ்சித் 54, 3ஆம்குறுக்குவீதி, யாழ்ப்பாணம்.

(5047)

# ஊழியரை சுரண்டும் விரோதிகளை விரட்ட மே நாளில் அணி திரள்வோம்

### வடமராட்சி ப தெ வ கூட்டுறவுச் சங்க கொத்தணி அழைப்பு

(யாழ்ப்பாணம்)

பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க அங்கத்தவர்களைச் சுரண்டி வாழ எத்தனிக்கும் சமூக விரோத சக்திகளுக்கு எதிராக ஜனநாயக வழியிலான போராட்டங்களையும், சாத்வீக வழியிலான ஆர்ப்பாட்டங்களையும், முன்னெடுத்துச் செல்வதற்கு ஓர்அணியில் திரண்டு குரல் கொடுக்க இம்மேதினத்தில் உறுதிகொள்வோமாக என்று வடமராட்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின்கொத்தணி மே தினத்தையொட்டி வெளியிட்ட செய்தியில் தெரிவித்துள்ளது.

உழைக்கும் பனை தென்னை வள அங்கத்தவர்களின் உற்பத்திப் பொருட்கள் சந்தைப்படுத்த முடியாது அகற்றப்படும் கொடுமையினை நீக்கும் வகையிலும் உழைப்பவர்களின் ஊதியத்தை உறுதிப்படுத்தும் வகையிலும் அன்றைய பாராளுமன்ற உறுப்பினர்களின் நிதி ஒதுக்கீட்டினால் உருவாக்கப்பட்டு கூட்டுறவு அமைப்புக்களின் நிர்வகிப்பில் ஒப்படைக்கப்பட்டது தான் திக்கம் வடிசாலை.

கூட்டுறவு நிறுவனங்கள் சிறப்பாக நிர்வகித்து வந்த இவ்வடிசாலை அபகரிக்கப்பட்டு அரச நிறுவனமான பனை அபிவிருத்திச் சபையினால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றது.

கடந்த ஆட்சிக் காலத்தில் இழந்த 600இலட்சத்திற்கும் மேற்பட்ட சொத்துக்களை கூட்டுறவு அங்கத்தவர் மீளப்பெறுவதற்கு பல்வேறுமுயற்சிகளை மேற்கொண்ட போதிலும் இன்று வரை தொழிலாளர் நிறுவனமாகிய பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி அமைப்பிடம் ஒப்படைக்காது மறுக்கப்படுகிறது.

இவ்வருடம் ஜூன் 1ஆம் திகதிக்கிடையில் ஒப்படைக்காது விட்டால் ஜனநாயக வழியிலான போராட்டங்களையும் ஆர்ப்பாட்டங்களையும் முன்னெடுத்துச் செல்வோம் என்றுமேலும்அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## ச.செ.ச கப்பல் பயணிகளுக்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் பதிவு செய்துமேலதிகசிகிச்சைக்காக சர்வதேச செஞ்சிலுவைச்சங்க கப்பலில் பிரயாணம் செய்யும் நோயாளர்களையும் அவர்களின் உதவியாளர்களையும் இனிமேல் காலை 7.00 மணிக்கே பயணம் செய்யும் ஆயத்தங்களுடன் பணிப்பாளர் பணிமனையில் சமுகமளிக்க வேண்டும் என்று மேற்படி வைத்தியசாலைப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (எ)

## சிற்றி மண்டபத்தில் மேதினக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தீர்வுவழங்கல் மற்றும்தொழிலாளர்களின் உரிமை ஆகியவற்றை வலியுறுத்திவடபிராந்தியதொழிற்சங்கங்களின் கூட்டமைப்பின் மேதினக்கூட்டம் யாழ்ப்பாணம் சிற்றிமண்டபத்தில் இன்றுகாலை 9.30 மணிக்கு சங்கத்தின் தலைவர் இ.தவராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் உள்ளூராட்சி எழுதுவினைஞர்சங்கம் சார்பாக செ.சண்முகராசா, வடபிராந்திய உட்பள ஊழியர் சங்கம் சார்பாக கே.பொன்னுத்துரை, வடபிராந்திய இலங்கைவர்த்தக கைத்தொழில்பொதுத் தொழிலாளர் சங்கம்சார்பாக ப.சேகர், இலங்கைஆசிரியர் சங்கம் சார்பாக கா.நடராசா வடபிராந்திய தொழிற்சங்க கூட்டமைப்பு சார்பாக சா.தியாகலிங்கம் உட்படபலர் உரை நிகழ்த்தவுள்ளனர். (த)

மறியற் போராட்டத்தால்

## யா.கூட்டுறவு திணைக்களம் முற்றாகச் செயலிழப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம்கூட்டுறவுஅபிவிருத்தி உதவி ஆணையாளர் எண்பார்வைப் பகுதியில் கடமை ஆற்றிய உதவிக்கணக்காய்வாளர் திணைக்களத்தின் முன் நேற்றுநடத்திய மறியல் போராட்டத்தை அடுத்து திணைக்களத்தின்செயற்பாடுகள் நேற்று முற்றுமுழுதாக செயலிழந்தது.

கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் எண்பார்வைப் பகுதியில்கடந்த5வருடகாலமாக உதவிக்கணக்காய்வாளர்களாககடமையாற்றிய சுமார் 28பேரும் தம்மை நிரந்தரமாக்கக் கோரி நேற்றுமறியற் போராட்டமொன்றை ஆரம்பித்திருந்தனர்.

இன்றுமேதினம்காரணமாக மறியற் போராட்டத்தை தொடராமல் நாளை மீண்டும் முதல்சாதகமான பதில் கிடைக்கும்வரை மறியற் போராட்டம் தொடரும் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.(வ)

## திருநாள் திருப்பலி

(யாழ்ப்பாணம்)

பண்டத்தரிப்பு புனித பத்திமா அன்னை யாத்திரைத் தல பெருவிழா எதிர்வரும் 4 ஆம் திகதி சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து ஒன்பது நாட்கள் ஆராதனைகள் இடம்பெற்று 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5.00 மணிக்கு நற்கருணை விழா நடைபெறும்.

பத்தாம் நாள் காலை 6.30 மணிக்கு முதற் திருப்பலியும், 7.30 மணிக்கு யாழ் ஆயர் தலைமையில் திருவிழாத் திருப்பலியும் அன்னையின் திருச்சொரூபபவனியும் இடம் பெறவுள்ளது.

தொடர்ந்து யாத்திரிகர்களின் நன்மை கருதி பகல் 12.00 மணிக்கும், மாலை 4.30 மணிக்கும் விசேட திருப்பலிகள் இடம்பெறவுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

(சே-7)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை கலைப்பீடம், முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீடம்

இரண்டாம்மொழி ஆங்கிலம் மீள் பரீட்சைகள்

**2002**

**ESL Level II, III** பரீட்சை நடைபெறும் திகதிகளில் பின்வரும் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. **Level II** பரீட்சை 16. 05. 2002 திகதிக்கும் **Level III** பரீட்சை 17. 05. 2002 திகதிக்கும் பிற்போடப்பட்டுள்ளது. **Level I** பரீட்சை திட்டமிட்டபடி 06 . 05 . 2002 திகதியன்று நடைபெறும். மாணவர்கள் இம் மாற்றத்தைக் கவனத்தில் கொள்ளுமாறு கேட்கப்படுகின்றார்கள்.

**பதிவாளர்**
30.04.2002

(கி-4030)

## சந்திக்குமாறு வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

க.பொ.த.உயர்தரவிடைத்தாள் மதிப்பீட்டு பணியில் பங்குபற்றும் பின்வரும் ஆசிரியர்கள் தமது பயணஒழுங்குகள் தொடர்பாக முடிவு செய்வதற்காக நாளைமுற்பகல் 10மணிக்கு யாழ்பல்கலைக்கழக உயர்பட்டப்படிப்புக்கள் பீட பணியகத்தில் கலாநிதி எஸ்.சிவலிங்கராஜாவைச் சந்திக்கும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

எஸ்.சிவகுமாரன், திருமதி சி. சண்முகநாதன், திருமதி ஜி.சுந்தரலிங்கம்,ஏ.ஒகஸ்ரின் கே.கதிரமலை, திருமதி எஸ்.அரியரட்ணம், திருமதி கே.பவசிங்கம், திருமதிஎம். ரி.ஜி.விமலதாஸ், செல்வி எஸ்.பொன்னையா, எஸ். ராஜகுலேந்திரன், கே.நவரட்ணம்,எஸ்.சயந்தன், செல்வி கே.கிருஷ்ணவேணி, செல்வி கே.முத்துக்குமாரன், எஸ்.சோதிலிங்கம், திருமதி எஸ்.தேவதாசன்.

(இ)

## இராசிபலன்

01.05.2002
(சித்திரை 18 புதன்)
பஞ்சமி பி. இ. 3.14
மூலம் காலை 7.30
நல்லநேரம் 4.27-5.57
இராகு காலம் 11.57-1.27
மரணயோகம்

**மேடம்**
முயற்சி தடங்கல், வியாபாரத்தில் நட்டம், தூர தேச பிரயாணம், எதிர்பாராத சச்சரவு.

**இடபம்**
பொருள் வரவு, போசன சுகம், நெடுநாள் பிரிந்திருந்த நண்பர்கள் உறவினர்கள் சந்திப்பு, பிரயாணம்.

**மிதுனம்**
காரிய வெற்றி, உறவினர் வருகை, சத்துரு ஜெயம், விருந்துபசாரம்.

**கடகம்**
தொழில் முன்னேற்றம், உறவினர் பற்றிய கவலை, சுயகௌரவம் பாதிப்பு, முயற்சி தாமதம்.

**சிங்கம்**
உடல் உபாதை, நிலை மாற்றம், கடின உழைப்பால் காரிய வெற்றி, மனப் பதற்றம்.

**கன்னி**
பணவரவு, தொழில் வெற்றி, புதிய நண்பர் சந்திப்பு.

**துலாம்**
தொழில் கஷ்ரம், காரிய தாமதம், பகைமை, கௌரவக்குறைவு.

**விருச்சிகம்**
முயற்சி ஜெயம், புதிய பொருள் வரவு, போசன சுகம், கடவுள் சிந்தை,உடல் ஆரோக்கியம்.

**தனுசு**
உடல் நலக்குறைவு' பிரயாணம், முயற்சி தாமதம், நல்ல வரவேற்பு.

**மகரம்**
பெரியோர் சந்திப்பு, நினைத்த காரியம் வெற்றி, கீர்த்தி.

**கும்பம்**
தொழில் விருத்தி, தூர தேசத்துச் செய்தி, பொருள் ஆசை, காரிய வெற்றி.

**மீனம்**
உடல் வியாதி, முயற்சி தாமதம், கட்டுப்பாடு, கஷ்ரமான தொழில்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.)

**வளவன்**

## நிரந்தர சமாதானத்தை வேண்டி அணிதிரள்வோம்

### புளொட் மே தினச்செய்தி

(யாழ்ப்பாணம்)

உலகத் தொழிலாளர் வர்க்கத்தின் உரிமைகளை வென்றெடுக்கவும் ஒற்றுமையை உலகிற்கு உணர்த்தவும் மேநாளில் இணைந்து தமிழ் மக்களின் உரிமைக்காக குரல் கொடுப்போம்.

இவ்வாறு ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி (புளொட்) தனது மேதினச் செய்தியில் தெரிவித்துள்ளது.

அச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

ஒடுக்கப்படும் மக்கள் தமது உரிமைக்காக அணிதிரளும் இந்நாளில் தமிழ் மக்களாகிய நாமும் வாழ்வியல் உரிமைகளை வென்றெடுக்கவும் உற்பத்தி உழைப்புக்கள் தடையின்றி நடைபெறவும் திணிக்கப்பட்ட யுத்தத்தால் அழிக்கப்பட்ட பொருளாதாரத்தைக் கட்டிஎழுப்பவும் நிரந்தரசமாதானம் ஏற்படவும் அணிதிரள்வோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## 12 புலி உறுப்பினர்கள் நேற்றுவவுனியா சென்றனர்

(வவுனியா)

இராணுவக் கட்டுப்பாட்டு வவுனியா பிரதேசத்தில் தமது அரசியல் நடவடிக்கைகளை விஸ்தரிக்கும் வகையில் இரண்டாவது கட்டமாக இரண்டு பெண்போராளிகள் உட்பட 12விடுதலைப் புலி உறுப்பினர்கள் நேற்று பிற்பகல் 2.30 மணிக்கு வவுனியாவுக்கு சென்றுள்ளனர்

நேற்று வவுனியா வந்து சேர்ந்த 12 விடுதலைப்புலி உறுப்பினர்களையும் ஓமந்தையிலுள்ள இராணுவ சோதனைச் சாவடியில் வைத்து வவுனியா மாவட்ட அரசியல்பொறுப்பாளர் சி. மேலவன் வரவேற்று வவுனியாவிற்கு அழைத்துச்சென்றார்.

(ம)

## வாகனப் பதிவுப்புத்தகம் கொண்டு வருதல் அவசியம்

### ஓமந்தை பொறுப்பதிகாரி தகவல்

(வவுனியா)

ஓமந்தைசோதனைச்சாவடியூடாக யாழ். குடாநாட்டுக்குள் நுழையும் சகல வாகன உரிமையாளர்களும் தமது வாகனத்தின்பதிவுப்புத்தகம், காப்புறுதிப் பத்திரம், வருமான அனுமதிப் பத்திரம்ஆகியவற்றை கொண்டுவருதல் வேண்டுமென ஓமந்தை சோதனைச் சாவடி பொறுப்பதிகாரி கப்டன் இளங்கோ ராஜபக்ஷ தெரிவித்தார்.

களவாடப்படும் வாகனங்கள் கொண்டு செல்லப்படுவதனைத் தடுக்கும் நோக்கத்துடனேயே இந்த நடைமுறை பின்பற்றப்படுவதாகவும் இதன்போது வாகன உரிமையாளர்கள் வாகன பதிவுப் புத்தகத்தின் நிழறபிரதி ஒன்றை சோதனைச்சாவடியில் சமர்ப்பிக்க வேண்டுமெனவும் அவர் கேட்டுள்ளார். (த)


மதுபான முகவர்களுடனான

## கலந்துரையாடல் கூட்டம்

எமது வலிகாமம் வடிசாலையில் உற்பத்திசெய்யப்படும் மதுபானவகைகளின் விநியோகம் தொடர்பில் மதுபான முகவர்களுடனான விசேட கலந்துரையாடல் கூட்டம் நாளை (02.05.2002) வியாழக்கிழமை முற்பகல் 9.30மணியளவில் கீழ்க்காண் முகவரியில் நடைபெறவுள்ளதால் சகல மதுபானநிலைய முகவர்களையும் தவறாது கலந்துகொள்ளும்படி அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

நன்றி

இங்ஙனம்
கூட்டுறவுச் சேவையிலுள்ள
**பொதுமுகாமையாளர்**

வலிகாமம் பனை தென்னைவள
அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின்
கொத்தணி,பிப்பிலிச் சந்தி,
மானிப்பாய்.

(கி-4031)

# உழைப்பவனுக்கே உலகம் சொந்தம் என்று உரிமை கொண்டாட ஏற்பட்ட 'மே' திருநாள்

மேதினி போற்றும் மேலான நாள் மே நாள். உழுதுழுது உலகை வாழவைக்கும் உழைப்பாளர் தம்உயிர்த் திருநாள். காடழித்துக் களனியாக்கி, மேடழித்து மேல் நிலமாக்கி மேதினியை வாழ வைக்கும் வித்தகர் தம் சித்தம் களிகூரவைக்கும் சிறப்பான நாள். எந்திரத்தின் கீழ் எலும்புடையப் பாடுபடும் ஏழை உழைப்பாளிகளின் இன்பத்திருநாள். ஆண்டிற்கு ஒரு நாள் தொழிலாளர், விவசாயிகள் ஆனந்தப் பண்பாடி ஆடி ஓடி மகிழ்ந்து நடக்கின்ற மகிழ்ச்சி பொங்கும் மாண்பு நாள். ஓரினத்துக்கு, ஒரு நாட்டுக்கு, ஒருகண்டத்துக்கு மட்டுமே உரிய நாள் என்று கருதாது, எல்லா இனத்தவரும் உள்ளப் பேருவகையுடன் கொண்டாடுகிற தனியொரு நாள். இன்பநாள், இதமளிக்கும் இனிய நாள், இம் மேதினி எங்கும் கொண்டாடப்படும் மேதிருநாள்.

அனைவருக்கும் பொது நாள்

அகில உலகமெங்கும் உள்ள உழைப்பாளர்கள் அனைவருக்கும் மே முதல் நாள் (மேதினம்) மேன்மை மிகு அன்புப் பெருநாளாக விளங்குகின்றது. கட்சிச் சார்பற்ற இவ் விழாவை தங்களுக்குத் தான் உரிய நாளென்று பொதுவுடைமை வாதிகளோ, சோஸலிஸ்டுகளோ இன்ன பிற இயக்கங்களோ உரிமை கொண்டாடி விடமுடியாது. பொதுவுடைமைக் கருத்துக் கொண்டோர், சக்திக்கேற்ற உழைப்பு, உழைப்புக் கேற்ற கூலி என்ற அடிப்படைச் சிந்தாந்தத்தில் சிரத்தையுடையோர் அனைவருக்கும் இந்நாள் ஏற்புடையதாகும்.

தொழிலாளர்கள் எங்கிருந்தாலும் இன, மதவேறுபாடின்றிவாழ்ந்து சகோதரத்துவம் பூண்டு வாழ்கிறார்கள். அவர்கள் தொழிலாளர்கள் என்ற கோட்பாடே அவர்களை இப்படி இணைத்து வைத்திருக்கிறது. பாடுபடும் பாட்டாளி, மாடாக உழைக்கும் தொழிலாளி, பொழுது புலர்வதன் முன் வயல்போய் பொழுது சாய்ந்தபின் வீடுதிரும்பும் விவசாயி, இவர்களது உரிமைப் போராட்டநாள். பொதுவுடைமை சமுதாயத்துக்கு அடிக்கால் நாட்டிய திருநாள்.

தொகுப்பு:

**மதிவாணர்**

முதலாளித்துவத்துக்கு சாவு மணியடித்த பொன் நாள் மேதினம். பட்டது போதும், இனிப் பட முடியாது இத் துயரம், எட்டுமணி வேலை, எட்டுமணி ஓய்வு என்று போர்க் குரல் எழுப்பிப் புரட்சி செய்த சிக்காக்கோ நாட்டுத் தொழிலாளர் மீது முதலாளித்துவ அரசு துப்பாக்கிகளைப் பேசவைத்தது. அதிகமான தொழிலாளர்கள் பிணங்களாக்கப்பட்டனர். அவர்கள் கொட்டிய குருதி வீதிகளைச் சிவப்பாக்கியது. இது தான் ஆண்டாண்டு தோறும் கொண்டாடப்படும் மேதினத்தின் வரலாறு. ''உலகப் பாட்டாளி மக்களே ஒன்று சேருங்கள்'' என்ற முழக்கத்தை இடியோசை போல் முழக்கிக் காட்டுகிறது, மார்க்ஸ்சொல்லிக் கொடுத்து, மாவீரர் லெனினும், ஸ்டாலினும்- இசைத்துக் காட்டிய வேத புத்தகம்.

உலகத்தின் அச்சாணி

வயலிலே செந்நெல், களனியிலே கரும்பு, மலையிலே தேயிலை, மண்ணுக்குள்ளே தங்கம், கடலிலே முத்து, சோலையிலே கனிகள், ஆலையிலே ஆடைகள், வேயா மாடங்கள், சாயாத கோபுரங்கள், பேசாத ஓவியங்கள், பேசுகின்ற சிற்பங்கள், இவற்றைத் தன் கை வண்ணத்தினாலும், செயல் வண்ணத்தினாலும் விளைவிப்பவன், வெட்டி எடுப்பவன், கட்டி முடிப்பவன் தான் தொழிலாளி. அவனது உழைப்பில், வியர்வையில், உதிரத்தில் தான் இவை உருவாகின்றன. காடு நாடாவதும், நாடு நகரமாவதும் அவனாலே தான். உலகத்தின் அச்சாணியே அவன் தான். அந்தத் தொழிலாளி தான் ஒரு காலத்தில், ஆமையாய், ஊமையாய், பஞ்சையாய் பராரியாய், ஏழையாய், கோழையாய், அடிமையாய், அனாதையாய், எடுப்பார் கைப்பிள்ளையாய், ஏதுமறியாத அப்பாவியாய் உழைத்து உழைத்து உருக்குலைந்து போய்க் கிடந்தான்.

அதே நேரத்தில், சீமான்களும், கோமான்களும், ஆலையதிபதிகளும், பண முதலைகளும் அவன் உழைப்பைச் சுரண்டி உல்லாச மாளிகைகளில் சல்லாபப் பேச்சுப் பேசி, சுகபோகத்தில் புரண்டு கிடந்தார்கள். இந்தச் சுரண்டலுக்கு அரசு ஆராத்தி எடுத்தது. மதம் ஆலவட்டம் வீசியது, அரசன் படைபலம். கொண்டு அடக்கினான் மதவாதி பாவ- புண்ணியம் பேசி, நரக- சொர்க்கம் காட்டிமடக்கினான். ஆனால் ஒரு நாள் குனிந்த வன்நிமிர்ந்தான், குருடன் பார்வை பெற்றான். ஊமையன் பேசினான். 1886ம் ஆண்டு மே முதல் நாள்! சிக்காக்கோ நகர வீதிகளில் ஆயிரத்துக்கு மதிகமானோர் அடித்து நொருக்கப்பட்டனர். மிதித்துத்து வைக்கப்பட்டனர். துப்பாக்கிகள் வேறு பேசின. ஆறு பேர் தூக்கிலிடப்பட்டனர். இருந்தும் போராட்டத்தை முறியடிக்க முடியவில்லை. கால வெளத்தில் முதலாளித்துவம் அடிபணிந்தது. தொழிலாளர் வெற்றி பெற்றனர். அந்த நாள் தான் இன்று தொழிலாளிகளின் உரிமைக்கு வித்திட்ட அவர்கள் பெருமைக்குக் கட்டியம் கூறும் மே நாளாகப் போற்றி ஏற்றப்படுகிறது.

உழைப்பவனுக்கே உலகம்

மே நாள் சுரண்டி வாழ்வோருக்கும். சுகபோகிகளுக்கும் உரிமைக் குரலை ஒடுக்கி விடுவோம், விடுதலை வேட்கையை அடக்கி விடுவோம் என்று ஆர்ப்பரிக்கும் அடக்கு முறையாளர்களுக்கும் மமதை பிடித்த ஆட்சியாளர்களுக்கும் அபாய அறிவிப்புக் கொடுக்கும் நாள் மே நாள் உழைப்பவனுக்கே இந்த உலகம் சொந்தம் என்ற உயர்ந்த உண்மையை உணர்த்தும் நாள். மே நாள் ஒருகுறிப்பிட்ட நாட்டுக்கோ இனத்துக்கோ உரியதல்ல. அது உலகத்தொழிலாளர் அத்தனை பேருக்கும சொந்தமான நாள். எனவே தான் அவ் வொப்பரிய பெருநாளை உழைப்பாளிகளின் உரிமை நாளை நம் வாழ்வின் திருநாளாகப் பெருமையோடும் மகிழ்வோடும் பூரிப்போடும் நாம் கொண்டாடுகிறோம். ●

## மேதினக் கவிதைகள்

### மே தினமே வருக!

காடு கொன்று நாடாக்கி
குளம் தொட்டு வளம்
பெருக்கி
வீடு சென்று பட்டினியில்
வீழாது காத்த மே தினமே

லோ. கமலவதனி

### அர்த்தமுள்ள மேதினம்

ஏருழவர்-
தொழிலாளர்-
எழுச்சியில்-
போர்மய மான
பூமியில்-
புன்னகை விளையட்டும்.

நீலக் கடலில்-
நெடும் பயணம்-
செல்லாது-
காலைக் கருக்கலில்-
கடலோடி-
வலையெறியும்-
மீனவர்கள்-
நாளைய பொழுதில்-
நன்மைகள் தவிக்கும்-
மேதினம்.

ஆசிரியர்கள்-
எழுதுவினைஞர்கள்-
அதிகாரிகள்-
பணியாளர்கள்-
வேளைக்கு-
வேலைக்கு வந்து-
விடியும் பூமிக்கு-
மண்ணில்-
தமிழர்வாழும் வரைக்கும்
சேவை செய்ய-
கண்ணில்-
மேதினம்
கடமைகள் வரையும்.

-நல்லை அமிழ்தன்

# கலைஞர்களின் தொழில் மற்றும் நலவுரிமையை நிலைநாட்டுவோம்

சலனசித்திரம் மேதின அறைகூவல்

கலைத்துறையில் இனவாத, ஜனநாயக விரோதச் சட்டங்களையும் செயற்பாடுகளையும் தோற்கடித்து கலை மற்றும் கலைஞரின் சுதந்திரத்தை நிலைநாட்ட இத் தினத்தில் எழுச்சிகொள்வோம். இனமொழி பேதங் கடந்து அனைத்துக் கலைஞர்களே, கலைஆர்வலர்களே ஒன்றுசேருங்கள்.

இவ்வாறு சலனசித்திரம் அமைப்பின் யாழ். மாவட்ட பொதுச் செயலாளரினால் விடுக்கப்பட்ட மேதின அறைகூவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ் வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

வடபிராந்திய தொழில்சங்கங்கள் ஒன்றிணைந்து மாபெரும் மேதினத்தை குடாநாட்டில் கொண்டாட ஏற்பாடு செய்துள்ளன. தமிழ் மக்களின் அடிப்படை அபிலாஷைகளை கோசங்களாக முன்வைத்து போராட முன்வந்திருக்கும் முக்கியமான இக் காலகட்டத்தில் தொழிற் கலைஞர்களும் ஒன்றிணைந்து தமது நலன்களுக்காகக் குரல் கொடுக்கவேண்டிய தேவை இருக்கிறது. இன்று குடாநாட்டில் மின்விநியோகம் சீரற்றிருப்பதால் பல தொழிலகங்கள் வர்த்தக ஸ்தாபனங்கள் தொழில் ரீதியாக வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றன. மின்சாரத்தின் தேவை தொழிலாளர் வர்க்கத்தின் உயிர்மூச்சாக நின்று இருக்கிறது. இந்த சீரற்ற மின்விநியோகம் காரணமாகப் பாதிக்கப்படும் தொழிலாளர்கள் இன்றைய நாளில் அதற்காகக் குரல் கொடுக்க முன்வரவேண்டும். உழைப்பவர் உரிமைகளை நிலைநாட்டவும் தொழிலாளர் உரிமையை வலியுறுத்தவும். புதிய கோரிக்கைகளை முன்வைக்கவும் நியாயமான உரிமைகளை வென்றெடுக்கவும் அரசியல் சலப்பற்ற ரீதியில் மேநாளில் ஒன்றுபடுங்கள். உள்நாட்டு வெளிநாட்டுப் பிற்போக்கு ஏகாதிபத்திய சக்திகளை எதிர்த்து தொழிலாளர் வர்க்கமும் உழைக்கும் மக்களும் நிரந்தர சமாதானத்திற்காகக் குரல்கொடுக்க முன்வாருங்கள் 'வெகுஜனப் போராட்டமும் எழுச்சியும் இனங்களின் உரிமை' பெண்களின் உரிமை, சிறுவர்களின் உரிமை, உண்மையான ஜனநாயகம் என்பன நிலைநாட்டப்பட வழிவகுக்கும் என உறுதி எடுத்துக்கொள்வோம்.

அரசாங்க ஊழியர்கள் மாத்திரமன்றி அனைத்து தொழிலாளர்களினதும் உரிமைகள் பேணப்படவும் நாட்டின் சகல சமூகங்களினதும் அடையாளங்கள் புரிந்து கொள்ளப்படவும் எமது கரங்களை ஒன்றிணைத்து சபதம் கொள்வோம்; இதேவேளை,

கலைஞர்களாகிய நாம் கலைஞர்களுடைய தொழில் மற்றும நலவுரிமை என்பன யாவும் உறுதிசெய்யப்பட வேண்டுமென்ற கோரிக்கையை சம்பந்தப்பட்டோருக்கு இன்றையநாளில் கோரிக்கை விடுக்கிறோம். உள்ளூர்ச் சினிமாக்கலை உயரவேண்டுமாயின் இலங்கைச் சினிமாத்துறையில் நிச்சயமானதும் நிரந்தரமானதுமான வளர்ச்சிக்காகச் செய்து முடிக்கப்பட வேண்டிய விடயங்கள் ஏராளம் உண்டு. அவற்றில் முக்கியமானவை பின்வருமாறு,

- திரைப்படத் தயாரிப்பிற்கு முழுமையான உதவி மற்றும் ஊக்கம் அரசினால் தரப்படவேண்டும்.
- தணிக்கை விதிகளில் கையாளப்படும் இரட்டைத் தன்மை நீக்கப்படவேண்டும்.
- உள்ளூர்த் திரைப்படத்தை அயல்நாடுகளில் வர்த்தக ரீதியாக திரையிடும் உரிமை அரசினால் பெற்றுத் தரப்படவேண்டும்.
- திரைப்படக் கூட்டுத்தாபனம் மும்மொழிகளிலும் கருமமாற்றக்கூடியதாக இயக்கப்படவேண்டும்.
- திரைப்படக் கூட்டுத்தாபன பணிப்பாளர்சபையில் தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட ஒருவர் நியமிக்கப்படவேண்டும்.
- திரைக்கலைச் சங்கம் தொடர்பான சட்டம் இயற்றப்படவேண்டும்.
- திரைப்பட தகவல் சேவைப்பிரிவுஒன்று ஆரம்பிக்கப்படவேண்டும்.

திரைப்படத்துறை தொடர்
(6 ஆம் பக்கம் பார்க்க)

### உழைப்பவர் உயரட்டும்

பேதினத்தில் எல்லோரும் ஒன்றுபடுவோம்
மேன்மை வாழ்வு கிடைக்க ஒன்றுபடுவோம்
நீதிகள் இங்கு நிலைத்திட ஒன்றுபடுவோம்
நீள்கின்ற துயரினை இனி வென்றுவிடுவோம்.

வியர்வை சிந்தி உழைப்பவன் ஒருவல்
வாழ்வினில் உயர்ந்து நிற்பவன் ஒருவன்
உயர்ந்தவன் சோம்பேறி! தாழ்ந்தவன் உழைப்பாளி
என்கின்ற நிலை இனிமேலும் வேண்டாம்!

இலங்குகின்ற தொழிலாளி துயரினை
விரட்டியடிப்போம்
கலங்கும் உள்ளங்களின் கவலைகளை
களைப்போம்
முழங்கு முழங்கு என்று முழங்கி நிற்போம்
முத்தான தொழிலாளர் வாழ்வு சிறக்க!

'கவிநேசன்' த. அஜந்தகுமார்

### பாட்டாளிகள் தினம்

அகிலம் போற்றும் மேதினம்
ஆற்றல் மிக்க தொழிலாளரின்
இணையில்லாப் பெரும் சேவையினை
இவ்வுலகம் உணர வைக்கும் நாள்.

உலகம் உய்யப்பணி செய்யும்
உழைக்கும் கரங்கள் உடையோரே
உறுதி கொண்ட வலிமையுடன்
உலகைப் பேணும் தொழிலாளர்கள்.

பார் போற்றும் நற்பாட்டாளிகள்
பாடுபட்டே நிதம் உழைப்பவர்கள்
பாருள்ளோர் அவர் பணி போற்ற
பாட்டாளிகள் தினம் கொண்டாடுவோம்.

தி. மயூரகிரி

# கடந்தகால கசப்பான அனுபவங்களை மறந்து அர்த்தமுள்ள சமாதானத்திற்காய் பாடுபடுவோம்

## மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சர் அழைப்பு

(தென்மராட்சி)

யுத்தம் மிகவிரைவில் நிரந்தர முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு நிரந்தர சமாதானம் ஏற்படுத்தப்படும்.

நாம் எமக்குள் இருக்கின்ற பிரச்சினைகளைத் திறந்த மனத்துடன் பேசி வடக்கு-கிழக்கில் நிலவுகின்ற பிரச்சினைகளுக்கு முடிவுகளைக் காணவேண்டும். இதில் இருந்து நாம் தவறுவோமாயின் இப்பிரச்சினை மென்மேலும் மோசமான நிலையை அடையும்.

நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்துக்கு இரு நாள் விஜயமொன்றை மேற்கொண்டு வந்திருந்த மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர்ஜனாப் எம். எச். மொகமட் யாழ். அரச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற கூட்டத்தில் உரை நிகழ்த்தும் போது இவ்வாறு குறிப்பிட்டார்.

யாழ். மாவட்ட அரச அதிபர். க. சண்முகநாதன் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் அமைச்சின் செயலாளர்கள்நாடு நகர அபிவிருத்தி அதிகாரசபையின் உயர் அதிகாரிகள் மற்றும் யாழ். மாவட்ட திணைக்களஅதிகாரிகளும் பங்குகொண்டிருந்தனர்.

அமைச்சர் முகமட் அங்கு தொடர்ந்து உரை நிகழ்த்தும் போது.

கடந்த காலங்களில் நடந்த கசப்பான அனுபவங்களை நாம் மறந்துவிடவேண்டும். அர்த்தமுள்ள சமாதானம் நாட்டில் ஏற்படுத்தப்படல் வேண்டும். தற்போது வடக்கு-கிழக்கில் நன்மையான, முற்போக்கான கருமங்கள் இடம் பெற்று வருகின்றன.

ஸ்திரநன்மைகள் மேலெழும்பி வந்துகொண்டிருக்கின்றன. எமக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் மீது அசைக்க முடியாத நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. நாம் ஒருவரையொருவர் இதயசுத்தியுடன் நம்பவேண்டியது மிகவும் முக்கியமாகும்.

யுத்தம் முடிவுக்குக்கொண்டுவரப்படல் வேண்டும் என்பதில் எமது பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மிகவும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டுவருகின்றார். இந்த விடயத்தில் நாட்டுமக்களாகிய நாம் எல்லோரும் ஒருங்கிணைந்து செயல்பட்டு குறித்த பிரச்சினையைத் தீர்க்கவேண்டும்.

பணத்தினால் மட்டும் பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டுவிடமுடியாது. எமது இதயசுத்தியான அணுகு முறையும் அர்ப்பணிப்பு உணர்வும் இதற்கு அத்தியாவசியம்.

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள நகரங்களையும் பட்டினங்களையும் திட்டமிட்ட முறையில் அமுல் செய்யவேண்டும்.

யாழ்ப்பாணம் வரும்வேளையில் அழிந்த நிலையில் இருக்கும் கட்டடங்கள் சந்தைகள மற்றும் வாடி வீடு போன்றவற்றினைப் பார்வையிட்டு அதிர்ச்சியடைந்துள்ளேன்.

பொது அமைச்சின் கீழ் இருக்கும் நகர அபிவிருத்தி அதிகார சபையினால் அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பதற்கான ஏற்பாடுகளை இங்கு ஆரம்பிக்கவுள்ளேன்.

அதற்கு உதவியாக யாழ். மாவட்ட அரச அதிபர் தலைமையில் ஒரு ஆலோசனைச் சபையை நியமிக்கவும்எண்ணியுள்ளேன் இதற்கு இங்குள்ள அனைவரது பூரணஒத்துழைப்பும் அவசியமாகும்.

வடக்கில் வாழ்ந்த முஸ்லிம் மக்களுக்கு ஏற்பட்ட பிரச்சினை தொடர்பாக தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன்கவலை தெரிவித்திருப்பது குறித்து திருப்தியடைகின்றேன்

நாட்டில் சாந்தியும் சமாதானமும் நிலைபெற மூத்த அமைச்சர்என்றவகையில்நான் எனது பங்களிப்பைச்செலுத்துவேன் எனக்குறிப்பிட்டார்.

யாழ். பல்கலைக் கழகத் துணை வேந்தர்பேராசிரியர். பொ. பாலசுந்தரம்பிள்ளை அங்கு கருத்துத் தெரிவிக்கையில்:

யுத்தத்தின் போது அழிக்கப்பட்ட நகரத்தினை நாம் மீள் நிர்மாணம் செய்ய வேண்டும். நாம் இங்கு பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றோம். நகரத்துக்கான குடிநீர் விநியோக திட்டம், ஒருங்கிணைக்கப்பட்ட கழிவு நீர் திட்டம், சரியான கால்வாய் திட்டம் ஒழுங்கானமின்சாரத் திட்டம் போன்றவை இல்லாமல் இருக்கின்றன. நகர அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்க உதவியாக இங்கு ஒரு முழுமையான பணிமனை ஆரம்பிக்கப்பட வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

அமைச்சர் முகமட் நேற்று முன்தினம் பிற்பகல் 2.30 மணிக்கு யாழ்ப்பாணம் வணிகர் மன்றத்தில் யாழ்ப்பாணம் வணிகர்களுடன் நடைபெற்ற கூட்டத்தில் வணிகர்களுக்கு ஏற்பட்ட வர்த்தக நஷ்டங்கள் பற்றி மிக விரிவாகக் கலந்துரையடியுள்ளார்.

அமைச்சருடன் 35க்கு மேற்பட்ட அதிகாரிகளும் யாழ்ப்பாணம் வந்துள்ளனர்.

மேலும் வட பகுதியில் தற்போது தங்கியுள்ள முஸ்லிம் மக்களது மீள் குடியேற்றம் தொடர்பாகவும் அமைச்சர் கலந்துரையாடினார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

(உ-77,6)

## மேதினக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

புதிய ஜனநாயகக்கட்சியின் மேதினக் கூட்டம் இன்று காலை 9.30 மணிக்கு யாழ். ப.நோ. கூ.சங்கதலைமையக மண்டபத்தில் கா. கதிர்காமநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது. (உ-3)

## அனுமதி அட்டைகளை பெற அழைப்பு

கோப்பாய் ஆசிரிய கலாசாலை ஆசிரிய மாணவர்கள் யாவரையும், எதிர்வரும் 03 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு ,இறுதிப் பரீட்சை அனுமதி அட்டைகளைப் பெறுவதற்காக தவறாது கலாசாலைக்கு சமுகமளிக்குமாறு அதிபர் அறிவித்துள்ளார். (உ-19)

## ஆதரித்து அறிக்கை

தொண்டர் ஆசிரியர்கள் மற்றும் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள்இணைந்து நேற்று முன்தினம் முதல் மேற்கொண்டுவரும் தொடர் மறியல்போருக்கு ஆதரவு தெரிவித்து ஜனநாயக மக்களவிடுதலை முன்னணி அறிக்கை ஒன்றினை வெளியிட்டுள்ளது. (உ)

# நாடு முழுமையும் இன்று எழுச்சிமிகு மேதின கூட்டங்களுக்கு ஏற்பாடு

(கொழும்பு)

நாட்டின் பலபாகங்களிலும் இம்முறை 20க்குமேற்பட்ட மேதினக் கூட்டங்கள் நடத்துவதற்கு அரசியல் கட்சிகள் ஏற்பாடு செய்துள்ளன.

அரசாங்கமும் ஜே.வி.பியும் கொழும்பிலும், சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் மேதினம் அப்புத்தளையிலும், இ.தொ காங்கிரஸின் மேதினம் அட்டனிலும், மலையக மக்கள் முன்னணி நுவரெலியாவிலும், புதிய ஜனநாயகக் கட்சி யாழ்ப்பாணத்திலும் றாகலையிலும் மேதினக் கூட்டங்கள் நடத்தவுள்ளன.

இதேவேளை லங்கா சமசமாசக்கட்சியும், கம்யூனிஸ்ட் கட்சியும் இணைந்து கொழும்பில் மேதினத்தைக் கொண்டாடவுள்ளன.

இது இவ்வாறு இருக்க இராணுவக் கட்டுப்பாட்டு பகுதியான வவுனியாவில் இம்முறை விடுதலைப்புலிகள் மேதினத்தைக் கொண்டாடுவது குறிப்பிடத்தக்கது. (ம)

## தோட்டப் பகுதியில் மீண்டும் மண்சரிவு

(கொழும்பு)

ஹாலியெல சாரணியம் தோட்டத்தில் நேற்று முன்தினம் ஏற்பட்ட மண்சரிவில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 5பேர் உயிரிழந்ததுடன் 06 பேர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

50அடி உயரமான மலையில் ஏற்பட்ட மண்சரிவு காரணமாக 2லயன் அறைகள் மண்ணில் புதையுண்டதாகவும், இதில் ஒரு அறையிலே பலியானஇந்த 5பேரும் இருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இப்பகுதியில் கடும்மழை பெய்து வருவதால் மேலும் மண்சரிவுகள் ஏற்படும் என்ற அச்சம் காரணமாக லயன் அறைகளில் வாழ்ந்துவரும் தொழிலாளர் குடும்பங்களைச் சேர்ந்தசுமார் 200பேர் சாரணியம்தோட்டப்பாடசாலைகளில் தஞ்சம் புகுந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, கடந்த சில நாட்களில் இம்மலைப் பிரதேசங்களில் அடிக்கடிமண்சரிவுகள் ஏற்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.(உ-95)

## இடம் பெயர்ந்தோருக்கு மீண்டும் நிவாரணம்

(கொழும்பு)

வடக்கு - கிழக்கிலிருந்து இடம்பெயர்ந்தோருக்கு மே மாத இறுதியிலிருந்து மீண்டும் உலர் உணவு வழங்கப்படும் என உலக உணவுத் திட்டநிறுவனத்தின் ஆசியப் பிராந்திய உதவிப் பணிப்பாளர் ஹென்டோஒசிடாரியோ தெரிவித்துள்ளார்

தற்போதைய அமைதிச்சூழ்நிலையை அடுத்து மீளக்குடியமரும்மக்களுக்கும்தொடர்ந்து நிவாரணங்கள் வழங்கப்படும் எனவும் தெரிவித்த அவர்,

மீளக்குடியமர முன்வராதவர்களுக்குசுயமாக உழைத்து வாழ்க்கை நடத்துவதற்கு ஏற்றஉதவிகள்செய்துகொடுக்கப்படும் எனவும் மேலும் தெரிவித்துள்ளார். (செ)

## ஏழாண்டுகளின் பின் யாழ். ஆஸ்பத்திரி வீதி களை கட்டுகிறது

(சுச்சமோட்டை)

யாழ். ஆஸ்பத்திரி வீதியிலுள்ள வர்த்தக நிலையங்கள் அவற்றின் உரிமையாளர்களால் மீள இயக்கும் பொருட்டுபுனரமைக்கப்பட்டு வருகின்றன.

கடந்த கால அமைதியற்ற சூழ் நிலை காரணமாக 7 வருடங்களுக்குமேலாக யாழ். ஆஸ்பத்திரி வீதி மக்கள் பாவனையின்றி இராணுவத்தினரால் மூடப்பட்டிருந்தது.

தற்போது ஏற்பட்டுள்ள அமைதி சூழலால் இப்பாதை மக்கள் போக்குவரத்துக்கு திறந்து விடப்பட்டதையடுத்து அப்பகுதியில் வர்த்தக நடவடிக்கைளை ஆரம்பிக்க வர்த்தகர்கள் ஆர்வம்காட்டி வருகின்றனர். (உ-59)

## இறுதியாண்டு பரீட்சைகள்

யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறை இறுதியாண்டு மாணவர்களுக்கான பரீட்சைகள் எதிர்வரும் 13 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன. (உ-226)

## கருத்தரங்கு

(மானிப்பாய்)

அரசாங்க சேவையில் பணிபுரியும் ஊழியர்களை எழுதுனர் சேவைக்கு பதவி உயர்த்துவதற்கான போட்டிப் பரீட்சைக்கு ஆயத்தம் செய்வதற்குரிய கருத்தரங்கு நல்லூர் சாதனா பாடசாலையில் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

இக் கருத்தரங்குகள் யாவும் சனி, ஞாயிறு தினங்களில் காலை 9.30 மணி தொடக்கம்மாலைவரைநடைபெற்று வருகிறது. (உ-232)

## தாலிக் கொடி களவு

(யாழ்ப்பாணம்)

நித்திரையில் இருந்த பெண்மணியின் தங்கத்தாலி களவாடப்பட்ட சம்பவம் நேற்றைய தினம் நீர்வேலி வடக்கில் இடம் பெற்றுள்ளது.

அமுதலிங்கம் புனிதம் என்பவருடைய 15 பவுண் எடை கொண்ட தாலிக் கொடியே விடிகால வேளை இவ்வாறு களவாடப்பட்டுள்ளது.

(உ)

# ஒருகல்லூரியின் வளர்ச்சியும் பல்துறைவிருத்தியும் அதுசார்ந்த சமூகத்தின் அர்ப்பணிப்பில் உள்ளது

## சாக் நிறுவன இயக்குநர் மத்திய கல்லூரியில் உரை

(தென்மராட்சி)

ஒரு கல்லூரியின் வளர்ச்சியும் அதன் பல்துறை விருத்தியும் கல்லூரி அதிபரின் அர்ப்பணிப்புத் தன்மையிலும் ஆசிரியர்களின் சேவை நோக்குடனான கடின உழைப்பிலும் பெற்றோர்களுடன் கொண்டுள்ளபிரிக்கமுடியாததொடர்பிலும் கல்லூரியை நன்றியுணர்வுடன் நோக்குகின்ற பழைய மாணவர்களின் பின்னிப் பிணைந்த உறவிலுமே தங்கியுள்ளது.

அத்தகைய முழுமைபொருந்தியகல்லூரிச்சமூகப்பிணைப்பு இக்கல்லூரியில் இருப்பதை நான் நேரடியாகக்காண்கின்றபோது மிகுந்த பூரிப்பையும் பெருமையையும் அடைகின்றேன்.

இவ்வாறு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் மூத்த பழைய மாணவரும் புகழ் பெற்ற துடுப்பாட்ட வீரரும் 'சாக்' சர்வதேச நிறுவனத்தின் இயக்குநருமானபொன். தங்கராசா, கல்லூரியில்5லட்சம் ரூபாசெலவில் பெற்றோர்களினால் அமைக்கப்பட்ட வகுப்பறைகளுக்கான ஒலிபெருக்கிச் சாதனத்தையும் மின் மணியையும் முதல் முதலாக இயக்கி வைத்து உரையாற்றும் போது குறிப்பிட்டார்.

கல்லூரி அதிபர் க. இராஜதுரை தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பொன். தங்கராசா தொடர்ந்து பேசுகையில்;

கடந்த 17 வருடங்களின் பின், நான் எனது தாய் மண்ணில் காலடிஎடுத்து வைக்கும் பாக்கியமும் நான் உருண்டு, புரண்டு விளையாடிய எனது கல்லூரித்தாயின் அரவணைப்பில் அவளின் மடியில் அமர்ந்திருந்து எமது முன்னைய நினைவுகளையும் பெருமைகளையும் மீட்கும் சந்தர்ப்பமும் கிடைத்தமைக்கு இறைவனுக்கு நன்றி செலுத்துகிறேன்.

யுத்தத்தினால் உடைந்தகல்லூரி இன்று புதுப் பொலிவுடன் நிமிர்ந்து மகாகவியின் மீண்டும்தொடங்கும்மிடுக்குப் போல் தமிழர் தம் பண்பாட்டுக்கு ஒப்பவும் அழகுணர்வை மாணவர்களுக்கு ஊட்டும் ஆலயம் என்ற உணர்வுடன் இயங்குவதைப் பார்க்கின்ற போது வலிமை பெற்ற எமது கரமும்- மனமும் இருக்கும் போது எமது வளர்ச்சியை யாருமே தடுத்துவிடமுடியாது என்ற உணர்வுக்கு உரமூட்டுவதை உணர்கின்றேன்' என்றார். (உ-77)

## இன்று ஒரு தகவல்

### பூதம் காத்த பணம்

ஓர் ஊரில் ஒரு மரம் இருந்தது. அந்த மரத்தில் ஒரு யக்ஷன் வாழ்ந்து வந்தான். ஒருநாள் அந்த மரம் இருந்த வழியாக ஒரு தொழிலாளி போய்க் கொண்டிருந்தான். அப்போது, 'உனக்கு ஏழு ஜாடி தங்கம் வேண்டுமா?' என்ற குரல்கேட்டது. தொழிலாளி சுற்று முற்றும் திரும்பிப் பார்த்தான். யாரும் அவன் கண்ணில் படவில்லை. என்றாலும் 'ஏழு ஜாடி தங்கம்' என்று காதில் பட்டதால் பேராசை அவன் உள்ளத்தில் முளைத்தது. 'ஆம், எனக்கு வேண்டும்' என்று பதில் சொன்னான். உடனே, 'நீ வீட்டுக்குப் போகலாம். உன் வீட்டில் ஜாடிகளைக்கொண்டு போய் வைத்துவிட்டேன்' என்று பதில் குரல் ஒலித்தது.

இதைக் கேட்டது தான் தாமதம், உடனே தொழிலாளி அது உண்மைதானா என்று பரிசோதித்துப் பார்க்க விரும்பினான். எனவே அவன் தன் வீட்டை நோக்கிக் குடல் தெறிக்க ஓட்டமாய் ஓடினான். உள்ளே நுழைந்ததும், அவன் தன்முன்னால் ஏழு ஜாடிகள் இருந்ததைக் கண்டான். அவசர அவசரமாக அவற்றை ஒவ்வொன்றாகத் திறந்து பார்த்தான். ஆறு ஜாடிகளில் தங்கம் வழிய வழிய நிறைந்திருந்தது. ஏழாவது ஜாடியில் மட்டும் தங்கம் பாதி அளவுக்குத்தான் இருந்தது. குறைவாக இருந்த ஏழாவது ஜாடியையும் நிரப்பி விட வேண்டும் என்ற தணியாத ஆவல் அவனுக்கு உண்டாயிற்று.

திருப்தி ஏற்படும் வகையில் குறைவான ஜாடியையும் நிரப்ப வேண்டும். இல்லாவிட்டால், தான் அனுபவிக்கும் இன்பம் முழுமையான இன்பமாக இருக்காது என்று அவன் நினைத்தான். எனவே, தன்னிடம் இருந்த பொன், வெள்ளி நகைகளை எல்லாம் விற்று அவற்றைப் பவுண் ஆக்கிக் கொண்டான். அதை அந்த ஏழாவது ஜாடியில் போட்டான். என்றாலும் அந்த மாய ஜாடி முன்பு போலவே அரைகுறையாக இருந்தது. இப்போது மேற்கொண்டு என்ன செய்வது என்று யோசித்தான். பிறகு அவன் தன்னையும் தன் குடும்பத்தார்களையும், பட்டினி கிடக்கச் செய்தான். சம்பாதிக்கும் பணத்தை எல்லாம் அந்த ஜாடியிலேயே கொண்டு போய்ப் போட்டுப் பார்த்தான். என்றாலும் அந்த ஜாடி நிரம்பியபாடில்லை. அவன் அரசனிடம் வேலை பார்த்து வந்தான். அரசனுக்கு இவன் மேல் அன்பு இருந்தது. ஒரு நாள் அவன் அரசனிடம் சென்று 'குடும்பத்தை நடத்தப் பணம் போதவில்லை. ஆகையால் சம்பளத்தை இரண்டு மடங்காக்கிப் போட்டுக் கொடுங்கள்' என்று கேட்டுக் கொண்டான். அந்த அரசன் மிகவும்நல்லவன். எனவே அவன் கோரியபடியே சம்பளத்தை இரண்டு மடங்கு ஆக்கினான். இப்போது அவனின் வருமானம் இரண்டு மடங்கு ஆகிவிட்டது. அப்படி அதிகமாக வந்த சம்பளத்தையும் அவன் குடும்பத்திற்குச் செலவு செய்யவில்லை. அதையும் அந்த ஜாடியிலேயே போட்டு வந்தான். ஆனால் அப்பொழுதும் அந்த ஜாடி நிரம்பவில்லை.

பிறகு, வேலையில்லாத காலங்களில் அவன் பிச்சை எடுக்க ஆரம்பித்தான். அப்படிப் பிச்சை எடுத்து வந்த பொருளையும், வேலையில் கிடைத்த சம்பளத்தையும் சேர்த்து பொன்னாக்கி ஜாடியில் போட்டான். என்ன மாயமோ, அந்த ஜாடி நிரம்பவில்லை. இப்படியே பல மாதங்கள் உருண்டு ஓடின அவனுடைய நிலைமை வர வர மோசமாகிப் பரிதாபகரமான நிலையை அடைந்தது. ஒரு நாள் அரசன் அத்தொழிலாளியினுடைய நிலைமையைப் பார்த்தான். 'அடே உனக்கு என்ன வந்தது. இப்போது உனக்கு கிடைக்கிற சம்பளத்தில் பாதிச் சம்பளம் கிடைத்தபோது, நீ மகிழ்ச்சியாகவும் திருப்தியாயும் இருந்தாய். இப்போதோ அதைவிட இரண்டு மடங்கு அதிகமாகச் சம்பளம் வாங்குகிறாய். அப்படி இருக்கும் போது நீ ஏன் வாடிய முகத்துடன் துன்பமும் கவலையும் கொண்டவனாக இருக்கிறாய்? ஏழு ஜாடி தங்கத்தை வாங்கிக் கொண்டாயா என்ன? என்று கேட்டான். தொழிலாளி வியப்படைந்து போனான். 'மகாராஜாவே! தங்களுக்கு இந்தச் செய்தியைச் சொன்னவர் யார்?' என்று கேட்டான். அரசனுக்கு விஷயம் விளங்கி விட்டது. அவன் தொழிலாளியிடம் 'யாரிடம் யக்ஷனுடைய செல்வம் வந்திருக்கிறதோ, அவர் இப்படிப்பட்ட நிலைக்கு வந்து விடுவான் என்பது தெரியாதா? யக்ஷன் ஒரு முறை இதே ஏழு ஜாடிகளை எனக்குத் தருவதாகச் சொன்னான். அது வரவுப் பணமா? செலவுப் பணமா? அதாவது அந்தப்பணத்தைச் செலவு செய்யவேண்டியதா? அல்லது புதைத்து வைக்க வேண்டியதா?' என்று அவனைக் கேட்டேன். உடனே, அந்த யக்ஷன் ஒரு பதிலும் சொல்லாமல் ஓடியே போய் விட்டான் அந்தப் பணத்தை ஒருவராலும் செலவழிக்க முடியாது என்பது உனக்குத் தெரியாதா? அது மேலும் மேலும் சேர்க்கவேண்டும் என்ற ஆசையைத் தான் தரும் உடனே அந்தப் பணத்தைத் திருப்பிக் கொடுத்துவிடு' என்று பதில் சொன்னான்.

தொழிலாளிக்குப் புத்தி வந்தது. அவன்யக்ஷன் வாழும் மரத்தடிக்குச் சென்று 'உன் பணத்தை நீயே வாங்கிக் கொள்' என்றான். 'நல்லது' என்று யக்ஷனிடமிருந்து பதில் வந்தது. தொழிலாளி வீட்டிற்கு வந்து பார்த்தான். மாயமாய் வந்த ஜாடிகள் ஏழும் மாயமாகவே போய் விட்டிருந்தன. அதோடு வாழ்நாள் முழுவதும் அவன் அரும்பாடுபட்டுத் தேடிய செல்வம் முழுவதும் போய்விட்டதையும் கண்டான். பேராசை பெருநட்டம். நீயாக உழைத்துப் பெற்றாலன்றி எதுவும் உனக்குச் சொந்தமாகாது. கடவுளின் இராஜ்சியத்திலும் சிலருடைய நிலைமை, கதையில் சொல்லப்பட்ட தொழிலாளியின் நிலையில் இருக்கிறது. உண்மையான வரவிற்கும் உண்மையான செலவிற்கும் வேறுபாடு தெரிந்து கொள்ளாதவர்கள் தாங்கள் பெற்றுள்ள அனைத்தையும் இழந்து விடுகிறார்கள்.

நன்றி
ஸ்ரீ ராமகிருஷ்ணர் சொன்ன கதைகள்

## கணனி அன்பளிப்பு

(மானிப்பாய்)

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரிக்கு,வலிதென் மேற்கு பிரதேச சபைத் தலைவர் வெலிச்சோர் அன்ரன் ஜோன் சனால் அண்மையில் கணனி ஒன்று அன்பளிப்பாக வழங்கப்பட்டது. (உ-232)

# யாருக்கும் அடிபணியாத சுதந்திர இனமாக நாம் வாழ வேண்டும்

### அரசியல் பணிமனை திறப்பு விழாவில் இளம்பரிதி

(திருநெல்வேலி)

தமிழ் மக்கள் அரசியல் உரிமைகளை வென்றெடுத்து, தமது பூர்வீக தாயகத்தில் யாருக்கும் அடிபணியாதசுதந்திர இனமாக வாழ வேண்டும் என்பதே எமது விருப்பமாகும்.

இவ்வாறு விடுதலைப்புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் இளம் பரிதி நேற்றுமுன்தினம் வல்வெட்டித்துறையில் அரசியல் பணிமனைத்திறப்பு விழாவில் உரையாற்றும் போது தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

தற்போது எமக்கு இடைக்கால நிர்வாக சபையைவழங்க அரசு தயாராகி வருகிறது. இந்த அரசில் எமக்கு நம்பிக்கை இருக்கின்றது.

இந்தநிலையில்,இடைக்கால நிர்வாக சபையை திறம்பட நடத்துவதற்கு எங்களுக்கு ஆளணி தேவையாக உள்ளது

எனவே இளைஞர் யுவதிகள் எம்முடன் இணைந்து எமது மக்களின் வாழ்க்கையை மேம்படுத்த முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

இந்நிகழ்வில் உரையாற்றிய தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் அரசுக்கும்-புலிகளுக்குமிடையில் ஏற்பட்டுள்ள சமாதான சூழ்நிலையைப்பயன்படுத்தி ஸ்ரீ லங்கா அரசாங்கம் இடைக்கால நிர்வாகசபையை விடுதலைப்புலிகளிடம் வழங்க முன்வரவேண்டும்.

அவ்வாறு முன்வராவிட்டால் தனித் தமிழீழம் அமைவதை யாராலும் தடுக்க முடியாது என்று தெரிவித்தார். (த-43)

### விசா கட்டுப்பாட்டை தளர்த்துக:

# மேற்கு நாட்டு இராஜதந்திரிகளிடம் உள்துறை அமைச்சர் விண்ணப்பம்

(கொழும்பு)

சட்டவிரோதமாக குடியேறுவதற்காக நாட்டை விட்டு வெளியேறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்கா தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் வெளிநாட்டு இராஜதந்திரிகளை சந்தித்தபோதே அவர்இதனை தெரிவித்துள்ளார்.

சட்டவிரோதகுடியகல்வைத் தடுப்பதற்காக புதிய சட்டமொன்று தயாரிக்கப்பட்டு வருவதாகவும்,

வெளிநாட்டு மோகம் கொண்டு சட்டவிரோதமாக கடல்வழிமார்க்கமாக மேற்கு நாடுகளிற்கு செல்வோரை தடுப்பதற்காக, மேற்கு கடற்பரப்பில் கடற்படையினர் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

போலி ஆவணங்களை பயன்படுத்தி நாட்டிலிருந்து வெளியேறுவோரை சுலபமாக கண்டுபிடிப்பதற்காக குடிவரவு குடியகல்வு திணைக்களத்தினால் தொழில்நுட்பதுடனான புதிய நடைமுறைகள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளதைச் சுட்டிக்காட்டிய அமைச்சர்,

இதே வேளை பிரான்ஸ், இத்தாலி, நோர்வே, பிரிட்டன், அவுஸ்திரேலியா நெதர்லாந்து ஆகிய இராஜதந்திரிகளை, வேலை வாய்ப்புக் கருதி வெளிநாடுகளுக்கு செல்லும் இலங்கையர்கள் மீதான விசா கட்டுப்பாட்டை தளர்த்துமாறும் இச் சந்திப்பின் போது கேட்டுக் கொண்டுள்ளார்.

கடந்த காலங்களில் மேற்கு கரையோரப் பிரதேசங்களிலிருந்து கைது செய்யப்பட்ட சட்டவிரோத குடியேற்றவாசிகள் மீது சட்டமாஅதிபர் வழக்குத் தொடர்ந்திருப்பதாகவும் குறிப்பிட்டார். (உ-8)

## முகாமிற்கு குடிதண்ணீர் நிறுத்தம்

(திருநெல்வேலி)

வடதும்பளை இடம்பெயர்ந்தோர் முகாமில்தங்கியுள்ள மக்களுக்கு இதுவரை காலமும் வழங்கப்பட்டு வந்த குடிதண்ணீர் கடந்த ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் நிறுத்தப்பட்டுள்ளது.

இதனால் தென்மராட்சி, வடமராட்சி கிழக்குப் பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்து அம்முகாமில் வாழ்ந்து வரும் மக்கள் குடிதண்ணீர் இல்லாது கஷ்டங்களை அனுபவித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (எ-43)

## தொண்டர் சேவைக்கு அழைப்பு

(சுதுமலை)

இன்று நடைபெறவுள்ள மே தின ஊர்வலத்தில் தொண்டர் சேவையில் ஈடுபடுவதற்கு பெயர்களைப் பதிவு செய்த யாழ். மாவட்ட மக்கள் நலன்புரிச் சங்க உறுப்பினர்களையும், விசேட படையணியினரையும் சீருடையுடன் இன்று மு.ப. 11.00 மணிக்கு யாழ். மத்திய கல்லூரிக்கு சமுகமளிக்கும்படி பயிற்சி ஒருங்கிணைப்பு ஆசிரியர் அறிவித்துள்ளார். (எ-252

## பிரேமதாஸ ஞாபகார்த்தமாக முத்திரை வெளியீடு

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி அமரர் ஆர். பிரேமதாஸாவின் ஒன்பதாவது சிரார்த்த தினத்தை முன்னிட்டு முத்திரைகள் பணியகத்தினால் முத்திரையொன்று வெளியிடப்பட்டுள்ளது.

கொழும்பு கலாபவனத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா நேற்று முன்தினம் இம் முத்திரையை வெளியிட்டு வைத்துள்ளார். (உ-8)

### போக்குவரத்துச் சபையில் நிலவும்

# பணியாளர் வெற்றிடங்கள் விரைவில் நிரப்பப்படும்

(கொழும்பு)

போக்குவரத்துச் சாலைகளில் நிலவிவரும் ஊழியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக மத்திய போக்குவரத்துச் சபைத் தலைவர் யு.எல்.எம்.பாரூக் தெரிவித்துள்ளார்.

போக்குவரத்துச்சாலைகளில் சாரதிகள்,நடத்துநர்கள் பொறியியலாளர்களுக்கு சுமார் 2ஆயிரம் வெற்றிடங்கள் உள்ளன.

இவற்றுக்கென சுமார் 17 ஆயிரம் பேர் விண்ணப்பித்துள்ளனர்.

அடுத்த ஒரு மாத காலத்தினுள் இவர்களுக்கான நேர்முகப்பரீட்சைகள் பூர்த்திசெய்யப்படும எனவும்,

புதிதாக ஆயிரத்து 500 சாரதிகள் தெரிவு செய்யப்பட்டு இவர்களுக்கு ஒரு மாத கால விசேட பயிற்சி வழங்கப்படும் எனவும,

இவ்வாறு நேர்முகப் பரீட்சையில் தெரிவு செய்யப்படுபவர்களுக்கு உடனடியாக நிரந்தர நியமனங்களை வழங்க கூடிய சாத்தியம் இல்லையெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-9)

## சிந்தனைக்கு விருந்து

### கந்தர் முதலில் வந்து கடைசி ஆள் ஆனார்

வெளிச் சிகிச்சை நோயாளர் பிரிவுக் கன்று
விடிகாலை முதலாளாய் வந்த கந்தர்
தெளிவாகக் 'கொப்பி' வைக் கும்இ டத்தில்
சென்றதனை வைத்திட்டுக் காத்தி ருந்தார்
தளர்வுதள் ளாமையொரு நோயுற் றாலும்
தாம்முதலாம் ஆளென்று புளுகம் கொண்டார்
விளைவு? பலர் அவர்பின்பு வந்து முன்னால்
வெளிச் சென்றார் கந்தரன்று கடையா ளானார்!

கடையாள்- கடைசிஆள்.

- பழையவன்

### ஐக்கிய தேசிய முன்னணியின்

# மேதினக் கூட்டத்தில் பங்கேற்க எதிர்க் கட்சிகளுக்கு ரணில் அழைப்பு

(கொழும்பு)

கொழும்பில் நடைபெறவுள்ள ஐக்கிய தேசிய முன்னணியின் மேதினக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு எதிர்க் கட்சிகளிற்கும், பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்த வகையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவிற்கும், ஏனையஎதிர்கட்சித் தலைவர்களிற்கும் அழைப்பு விடுத்துள்ளார். என தெரிவிக்கப்படுகிறது.

நாட்டில் சமாதான முயற்சிகள் பரவலாகமேற்கொள்ளப்பட்டு வரும் இந்நிலையில் அதற்கெதிரான வகையில் செயற்படும் கட்சிகளை மேதினத்தில் ஒன்றுபடுமாறு ரணில் அழைப்பு விடுத்திருப்பதானது அவரின் சமாதான ஆர்வத்தை வெளிக்காட்டியிருப்பதாக அரசியலாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இதேவேளைஅழைப்புவிடுக்கப்பட்ட மேற்படி கட்சிகளின் நிலைப்பாடுஇன்னமும்தெரிய வரவில்லை. (உ-8)

# மேதினத்தை ஒட்டி மறியல் போர் ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களும் தொண்டர் ஆசிரியர்களும் இணைந்து மேற்கொண்ட மறியல் போரினால் நேற்று இரண்டாவது நாளாகவும் மேலதிக மாகாணக் கல்விப் பணிமனையும் யாழ். வலயக் கல்வி அலுவலகமும் செயலிழந்தன.

காலை 7 மணிமுதல் 450 இற்கும் அதிகமான தொண்டர் ஆசிரியர்களும் பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களும் நிரந்தர நியமனம் கோரி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதேவேளை, மேதினத்தை ஒட்டி மறியல் போராட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (உ-6)

### ஒன்றுகூடி எழுச்சியை வெளிப்படுத்துக

# விநாயகமூர்த்தி எம்.பி. மேதின அறை கூவல்

(யாழ்ப்பாணம்)

கடந்த பல வருடங்களாக தமிழ்த்தேசிய இனத்தின்பிரச்சினைகள் தீர்க்கப்படாது இழுத்தடிப்புச் செய்துவந்த காரணத்தாலும், அமைதியின்மை இருந்தமையாலும் தமிழ்த் தொழிலாளர்களின் உரிமைகளைப் பற்றியோ, பிரச்சினைகளைப் பற்றியோ சிந்திக்க இயலாதவர்களாக இருந்தார்கள்.

தேசியத் தலைவர் வே. பிரபாகரன் தலைமையில் தமிழர் தாயகமாம் வடக்கு- கிழக்குப் பகுதிகளில் அமைதியும்,நிரந்தர சமாதானமும் ஏற்படும் என்ற நம்பிக்கை பிறந்திருக்கிறது. இது தமிழ்த்தொழிலாளர்களின் பிரச்சினை தீர்ந்து உரிமைகளுக்கு உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ளது போல் தெரிகிறது.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தலைவரும், கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினருமான அ. விநாயகமூர்த்தி விடுத்தமேதினச்செய்தியில்இவ்வாறுகுறிப்பிடப்பட்டுள்ளது.

அச் செய்தியில் மேலும்,

பல வருடங்களுக்குப் பின்பு யாழ்ப்பாணத்தில் பாட்டாளி மக்கள், விடுதலைப்புலிகளின் அரசியல்பிரிவின்தலைமையில் கோலாகலமாக தொழிலாளர் தினமாகிய மேதினத்தைக் கொண்டாடுகிறார்கள்.

வடக்கு,கிழக்கில் புலிகளின் அரசியல் பிரிவு நடத்தும் மேதின விழாவில்,பொங்கு தமிழ் நிகழ்ச்சிகளில்கலந்துகொண்டு சிறப்பித்த மாதிரி மக்கள் யாவரும் கலந்துகொண்டுஇவ் விழாவையும்சிறப்பிக்க வேண்டும் என நானும் எனது கட்சியும் தமிழ் மக்களை வேண்டுகிறோம். எமது பூரண ஆதரவினையும்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)

# புலனாய்வு அதிகாரி கைது

(கொழும்பு)

கல்கிசை பொலிஸ் நிலைய விசேட புலனாய்வு பிரிவின் பொறுப்பதிகாரி நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

லஞ்ச ஊழல் விசாரணைக் குழு நடத்திய விசாரணைகளையடுத்து இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் இவரை ஆஜர் செய்த போது, எதிர்வரும் 3 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. (உ-8)

### அதிபர் இன்மையால்

# சின்னமடு பாடசாலையை இயக்க முடியாத நிலை

(ஊர்காவற்றுறை)

யா/ஊர்காவற்றுறை சின்னமடு றோ. க. பாடசாலையினை அதிபர் ஒருவர் கிடைக்கும்பட்சத்தில், மீளத் திறக்க உரிய நடவடிக்கை எடுப்பதாக தீவகவலயக் கல்விப் பணிப்பாளர் ப. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் ஊர்காவற்றுறைப் பிரதேச கல்வி தொடர்பான பிரச்சினைகள் சம்பந்தமாக கல்விப்பணிப்பாளருடன் ஊர்காவற்றுறைப் பிரதேசமட்ட சிறுவர் அபிவிருத்திக்குழுவின் பிரதிநிதிகள் குழுஒன்று கலந்துரையாடிய வேளை தீவக வலயக் கல்விப்பணிப்பாளர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (உ-75)

---

### கலைஞர்களின்

பான தேசியக்கொள்கை ஒன்றை வரையறை செய்யுமுன்னர் திரைக்கலைச் சங்கங்களுடன் கலந்துபேசப்படவேண்டும்.

- பாடசாலைகளில் திரைக் கலைச் சங்கங்கள் ஏற்படுத்தப்படவேண்டும்.
- சர்வதேச திரைப்பட விழா இலங்கையில் நடத்தப்படவேண்டும் என்று அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ●

# சலுகைகளுக்காக விலைபோகாத நிலை இன்று யாழ்ப்பாணத்தில் மலையேறிவிட்டது

### மதமாற்றத்திற்கு இதுவே காரணம் என்கிறார் பேராசிரியர் சிற்றம்பலம்

(தென்மராட்சி)

நாட்டில் மதமாற்றம் நடைபெறுவதற்கு இந்துக்களாகிய நாம்தான் காரணம். எமது சமயத்தின் அருமை பெருமைகளை நாம் எமது மக்களுக்குப் புகட்டவில்லை. சமயப் பிரசாரம் செய்யவேண்டும். மக்களுக்குச் சமய போதனைகளை வழங்கவேண்டும். அத்துடன் நாம் எமது சமயத்தைப் பற்றி ஆலயங்கள் பற்றி மீள் பரிசீலனை செய்ய வேண்டும்.

கடந்த வெள்ளிக்கிழமை, நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தில் இந்துசமயப் பேரவையால், 'சைவ ஆலயக் கிரியைகளும் ஆலய பரிபாலனமும்' என்னும் பொருளில் கருத்தரங்கு நடத்தப்பட்டது.

இந்நிகழ்வில் யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவையின் உபதலைவரும், யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத் துறைத் தலைவருமான பேராசிரியர் சி. க. சிற்றம்பலம் 'சைவ ஆலய பரிபாலனம்' என்னும் விடயம்பற்றி கூறும் பொழுது இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்;

யாழ்ப்பாண சமுதாயத்தின் பின்னணியில் நாணயம் இருந்தது. எதற்கும் விலை போகாத நிலை இருந்தது. இன்று எதற்கும் விலை போகின்ற நிலைதான்காணப்படுகின்றது. பிரச்சினைகளுக்கு நாம் முகம் கொடுக்க வேண்டும். ஆலயங்கள் என்ன நோக்கத்திற்காக உருவாக்கப்பட்டதோ அந்த நோக்கம் ஈடேற்றப்படவில்லை. ஆலயத்துக்கு ஆகமம் மிக முக்கியம்.

நாம் பேசுவது போல, எழுதுவது போல வாசிப்பது போல நாம் ஒழுகுகின்றோமா? நாம் திரிகரண சுத்தியுடன் செயல்படுகின்றோமா? என்றால் இல்லை. என்பதே பதிலாகும். நாம் விசுவாசமாக இல்லை. நாம் சரியான ஆகமப்பிரகாரம் ஆலயங்களுக்குச் செல்ல வேண்டும்.

குடாநாட்டில் வெளிநாட்டுப் பணம் மிதமிஞ்சிப் போய்விட்டதால் ஆலயங்களிலுள்ள ஆண்டவனைக் கூட விலைக்கு வாங்கலாம் என்ற நிலையுள்ளது. இப்பொழுது கல்வி வெறும் கடதாசியாகப் போய்விட்டது. பட்டத்துக்கும் ஒழுக்கத்துக்கும் எவ்வித தொடர்பும் இல்லாமல் போய்விட்டது.

மனிதன் கல்வியால் பூரணத்துவம் பெறுகின்றான் என்று கூறுவது தவறானது. கல்விகற்றவன் பட்டம் பெற்றவன் மனச்சாட்சியை விற்று வளர்கிறான் என்பதே இன்று பொருத்தம் என்று குறிப்பிட்டார். (உ-77,19)

# யுத்தச் செலவீனம் 150 கோடியால் வீழ்ச்சி

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவும் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனும் செய்துகொண்ட சமாதான உடன்படிக்கையின் பயனாக இந்த மூன்று மாதங்களில் அரசின் யுத்த செலவீனத்தில் 150 கோடி ரூபா எஞ்சியுள்ளது.

மாத்தறை மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன இவ்வாறு கூறியுள்ளார்.

இலங்கையின் சமாதான உடன் படிக்கைக்கு இந்தியா, அமெரிக்கா,நோர்வே ஆகிய நாடுகள் பெரும் பங்களிப்புகளை வழங்கிவருகின்றன.

இதேபோல் வேறும் பல நாடுகளும் தமது பங்களிப்புக்களைவழங்கமுன்வந்திருப்பது சமாதானத்தின் உறுதிப்பாட்டுக்கு பெரிதும் உறுதுணை புரிகின்றது இன்று மாக்கந்துறை மத்திய மஹாவித்தியாலயத்தில்உரையாற்றும்போது அவர் மேலும் கூறியுள்ளார். (உ-3)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை.

வெளிவாரிப் பதிவுகள் பரீட்சைகள் அலகு

அறிவித்தல்

வணிகமுதற்தேர்வு -2000

மேற்படி வணிக முதற்தேர்வு 15.05.2002 தொடக்கம் யாழ்ப்பாணப்பல்கலைக்கழகத்திலும் வவுனியா வளாகத்திலும் ஆரம்பமாகவுள்ளது.

இத்தேர்வுக்கான பரீட்சை அனுமதி அட்டையையும் நேர அட்டவணையையும் 10.05.2002 தொடக்கம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளிவாரிப்பதிவுகள் பரீட்சைகள் அலகிலும் 13.05.2002 தொடக்கம் வவுனியா வளாகத்திலும் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு 021-3612 (யாழ்ப்பாணம்) 024-22265 (வவுனியா) என்ற தொலைபேசி எண்களுடன் தொடர்பு கொள்ளவும்.

பதிவாளர்

30.04.2002 (கி-4029)

### ஐ. நா. மனித உரிமை

# ஆணைக்குழுவில் மீண்டும் அமெரிக்கா அங்கம்

(வாஷிங்டன்)

ஐ நா. மனித உரிமை ஆணைக்குழுவில் அமெரிக்கா மீண்டும் இணைந்துள்ளது.

1947 இல் ஆணைக்குழு அமைப்பதற்கு உதவி அளித்த அமெரிக்கா கடந்த வருடம் ஆணைக்குழுவில் இருந்து தனது இடத்தை விட்டுக் கொடுத்தது.

ஐரோப்பிய ஒன்றிய நாடுகளான இத்தாலியும் ஸ்பெயினும் இம்முறை ஆணைக்குழுவில் இருந்து விலகியுள்ளதையடுத்து மேற்கு நாடுகளுக்கு என ஒதுக்கப்பட்ட இடத்தை அமெரிக்கா பிடித்துள்ளது.

கடந்த வருடம் மே மாதம் இடம்பெற்ற கூட்டத்தில் ஆணைக்குழுவில் இடம்பெற முடியாமல் போனதால் புஷ் நிர்வாகம் பெரும் ஏமாற்றமடைந்தது குறிப்பிடத்தக்கது (உ-7).

### இந்திய பிரமுகர்கள் அடங்கிய

# மனித உரிமைகளுக்கான குழு நான்கு நாள் இலங்கை விஜயம்

(கொழும்பு)

மனித உரிமைகளுக்கான தெற்காசிய அமைப்பின் குழுவொன்று நாளை மறுதினம் நான்கு நாள் விஜயத்தைமேற்கொண்டு இலங்கை வரஇருக்கிறது.

சமாதான முயற்சிகள் தொடர்பாக அரசிற்குத்தமது ஆதரவைத் தெரிவிப்பதோடு, அம்முயற்சிகளை பிராந்திய அடிப்படையில் வலுப்பெறச் செய்வதற்கான வாய்ப்புக்களை அக்குழுஇங்கு கண்டறியவுள்ளது.

அக்குழுவில் இந்தியாவின் முன்னாள் பிரதமர் ஐ. கே. குஜ்ரால், நேபாள முன்னாள் நிதியமைச்சர் தெய்வேந்திர பாக் பாண்டே, முன்னாள் இந்திய உயர்நீதி மன்ற நீதியரசர் நிர்மலா பாண்டே ஆகியோர் அடங்குவர்.

வடக்கு-கிழக்கு மாகாணங்களுக்கும் அக்குழு விஜயம் செய்யும் என்று தெரிவிக்கப்படுகிறது. (எ-5

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய் தொழில் வேற்றுமையான்
-குறள்

**வலம்புரி**

## உரிமைத் தினம்

அடக்கி ஒடுக்கப்பட்ட தொழிலாளர்களின் அடிமை விலங்கு உடைந்த நாளை எண்ணிப்பார்க்கின்ற தினம் இன்றாகும் இரத்தம் சிந்தி வியர்வையால் தோய்ந்து தம் உழைப்பை வழங்கிய தொழிலாளர் வர்க்கம் முதலாளித்துவத்தின் கோரப்பிடிக்குள் சிக்குண்டு கிடந்த காலம் போய் அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு என்ற பலத்தை தொழிலாளர் வர்க்கம் நிரூபித்து உரிமை பெற்ற மே நாள் வெறுமனே தொழிலாளர் தினமாக மட்டுமல்ல எங்கெங்கு அடிமைத்தனம் இருக்கிறதோ அங்கெங்கெல்லாம் உரிமைக் குரல் ஒலிக்க வேண்டிய தன் அவசியத்தை உணர்த்துகின்ற நாளாகவும் மே நாள் விளங்குகிறது.

மானிட வர்க்கம்யாவும் இந்த வையகத்தில் சம உரிமையோடு- சமபலத்தோடு வாழும் சுதந்திரம் உண்டு. இதனை மொழியாலோ- இனத்தாலோ- மதத்தாலோ- நிறத்தாலோ எவரும் கட்டுப்படுத்த முடியாது.

அவ்வாறு ஓர் இனம் இன்னோர் இனத்தைக் கட்டுப்படுத்த முனையுமாயின் அதுவே அடக்குமுறை அடிமைத்தனம் எனக் கூறப்படுகிறது. ஓர் இனத்தை இன்னோர் இனம் அடக்குகிறது. உரிமையை அனுபவிக்கத் தடை போடுகிறது எனக் கண்டறியப்பட்ட பின்பும் ஒருவன் மௌனமாக இருப்பானாயின் அதனை விட முட்டாள்தனம் இந்த உலகில் எதுவும் இருக்க முடியாது.

அடக்கப்பட்ட தொழிலாளர்கள் ஒன்று திரண்டு ஓரணியில் நின்று தமது எதிர்ப்பை வெளிக்காட்டிய போது முதலாளித்துவ வர்க்கம் எவ்வாறு அடிபணிந்துதொழிலாளர்களின் உரிமைகளை வழங்கியதோ அதே போன்று அடக்கப்பட்ட இனங்கள் தமது எதிர்ப்பை போராட்ட வடிவில் வெளிப்படுத்தி சுதந்திரம் பெற்றதாகவே வரலாறுண்டு.

அத்தகையதோர் வரலாறு ஈழத்தமிழர்களின் விடயத்திலும் ஏற்படும் காலம் மிகத்தொலைவில் இல்லை என்பதை இன்று நடக்கின்ற மே தினம் எடுத்தியம்புகிறது.

அதற்காக தமிழர்களெல்லோரும் ஓரணியில்- ஓர் தலைமையின் கீழ் ஒன்று திரளும் காலம் வந்துவிட்டது.!

# இன்ப வாழ்க்கைக்கு இடையூறுவிளைவிப்பதுடன் எமது சமுதாயத்தையும் சீரழிப்பது 'சீதனமே'

கா. கணேசதாசன்
சமுகஜோதி

எமது சமுதாயத்தைச்சீரழிக்கும் மிக முக்கிய காரணிகளில் ஒன்றாகஇன்று சீதனமும் கருதப்படுகின்றது. இந்தச் சீதனப் பிரச்சினைக்கு ஆண்கள் காரணமா? அல்லது பெற்றோர் காரணமா? திருமணத் தரகர்கள் காரணமா? அல்லது பெண்கள் காரணமா? என பலவாறு நாம் வாதிட்டுக் கொண்டிருப்போமேயானால் எமதுஇளஞ்சந்ததியினருக்குத் தீங்கிழைத்த குற்றவாளிகளாவோம். சீதனம் என்பது நடைமுறையானது. ஆண்கள் பெண்கள் மட்டுமல்ல, சமுதாயத்தின் அனைத்து மக்களையும் மிகவும் கொடுமையாகப் பாதிக்கின்றது. அழுக்காறு, போட்டி, வெகுளி போன்ற தீய உணர்வுகளை வளர்த்து மனச்சஞ்சலங்களை ஏற்படுத்தி பகையாளிகளை உருவாக்குகின்றது.

### வாழ்க்கைச்சீரழிவு

சீராகவும், சிறப்பாகவும், அன்பாகவும், வளர்த்தெடுத்த அருமை மகளை பேராசைக்காரரின் பேச்சில் ஏமாந்து கொழுத்த சீதனத்தை நம்பிக் கொடுத்து ஏமாறும்பெற்றோரின் வாழ்வும் கவலையால் இன்று சீரழிவதைக் காணக் கூடியதாக இருக்கின்றது. மேலும் காதலோ, குடும்பப் பாசமோ இன்றிச்சீதன மோகத்தால் திருமணம் புரியும் பல மோசக் காரரால்பல மங்கையரின் வாழ்க்கை சீரழிந்து சிதறுவதையும் நாம் காண்கின்றோம்.

சீதனம் என்பது குடும்ப வாழ்க்கைக்கு அவசியமா? இல்லையா? என்பதை விட இது குடும்பங்களை சமுதாயத்தைச் சீரழிக்கின்றது என்பதை நாம்உணர்ந்துகொள்ள வேண்டும். திருமண வயதிலிருக்கும் ஆண்களை, பெண்களை இவர்களைப் பெற்றெடுத்த பெற்றோர்களை இதன் தாக்கம் உளவியல் ரீதியாகப் பாதிக்கின்றது. பெண்ணைப் பெற்று விட்டதற்காக பெற்றோர்கள்வேதனைப்படுகின்றார்கள். பெண்களுடன் கூடிப்பிறந்தமைக்காக ஆண் சகோதரர்கள் தகுந்த வயதில் திருமணம் செய்யாது கலங்குகிறார்கள் அனைவருக்கும் பாரமாக இருக்கிறோமே எனப் பெண் கலங்குகிறாள் பெண் சகோதரிகள் கூடுதலாக இருக்கும்வீட்டில்மாப்பிள்ளை எடுப்பதற்குப் பெண்கள் மறுக்கின்றனர். இவ்வாறாகச் சீதனத்தின்பாதிப்புநம்மால்உணரப்படுகிறது.

### சுரண்டல்

சீதனத்தைச் சாட்டாக வைத்து மனிதன் மனிதனால் சுரண்டப்படுகின்றான். ஒரு குடும்பத்தலைவனின் குருதியும் வியர்வையும். அவனது மகளுக்கு கணவனாக வருபவனால் சீதனம் என்ற பெயரில் உறுஞ்சப்படுகிறது. பெண் ஒடுக்கு முறையின் உச்சக்கட்டமாக சீதன முறை இருப்பதனால் பெண் இங்கே பகடைக் காயாகிறாள். சீதனச் சூதாட்டத்தில் பெற்றோருக்கும் மணமகனுக்கும் நடுவில் பந்தாட்டப்படுகிறாள் பெண். சீதனம்கொடுத்த பெண்ணின் பெற்றோர்கள் மணமகன் தனது பெற்றோருக்கோ சகோதரர்களுக்கோ உதவிகள் செய்து பாசத்துடன் வாழ விடாமல் தடை போடுவார்கள். இதனால் சீதனத்துக்காக ஒரு ஆணின் வாழ்வும் அடகு வைக்கப் படுகின்றதல்லவா? மேலும் பிறந்த வீட்டிலிருந்து சீதனத்துடன்செல்லும்பெண் பெருமையின் நிமித்தம் கணவனை அடிமையாக்குவதையும் நாம் அவதானிக்கின்றோம்.

### ஒழுக்கமற்ற சமுதாயம் தோன்றும்

இன்னொரு வகையில்பார்க்கப்போனால் மனைவியானவள் கொண்டுவரும் சீதனத்தில் சுகமாக வாழலாம் என எண்ணுபவன்சோம்பேறியாக மாறுகிறான். இதுவும் வாழ்வைச் சீரழித்துப் பாதிக்கின்றது. தொழில்களுக்கு ஏற்றவாறு சீதனம் பெறப்பட்டு வருகின்றமையால் தொழில்களிலே உயர்வு தாழ்வு என்ற பேதத்தை சீதனம் ஏற்படுத்தி சமுதாய ஒற்றுமையைச் சீரழிக்கின்றது.

இவற்றைவிடசமுதாய ஒழுக்கச்சீர் கேட்டையும் இந்தச் சீதனம் ஏற்படுத்துகின்றது. சீதனமில்லாமையால் உரிய காலத்தில் திருமணம் நடக்காதபோது ஒழுக்கமற்ற சமுதாயம் உருவாகிறது.

அனாதைப்பிள்ளைகள் மலிகின்றார்கள். இந்த ஒழுக்கக் கேடுகளால்பாலியல்வல்லுறவுகளும், மனநோயாளர்களும், 'எயிட்ஸ்' நோய்களால் பீடிக்கப்படுவோரும் பெருகுகின்றார்கள்.

சீதனப் பணம் சகோதரிகளுக்கு உழைக்கவேண்டும் என்பதற்காக வெளிநாடுகளிற் சென்று பல்வேறு துன்பங்கள் மத்தியில்தீய வழிகளில் பணம் சேர்க்கும் ஆண்கள் தண்டிக்கப்படுவதையும் காண்கின்றோம்.

### இன்பத் திருமணம்

காதல் திருமணங்களுக்கு 'வில்லனாக விளங்கும் சீதனத்தை சமூகத்திலிருந்து இல்லா தொழிப்போமாயின் எமது தமிழ்ச்சமூகம் மிகவிரைவில் முன்னேறும். ஆரோக்கியமான ஆத்மார்த்தமான பிணைப்புகள் உருவாகும். பெற்றோர்க்கிடையே ஏற்படும் பிணக்குகள் அகன்று உளநலம், உடல் நலம் பாதிக்கப்படாத எதிர்கால நற்பிரஜைகள் தோன்றுவார்கள். எமது இனமும் பெருகும் இன்பத்திருமணமும் நிறைவேறும். ●

# புலிகள் மீதான தடையை நீக்க சகல கட்சிகளும் ஒத்துழைக்க வேண்டும்

## ஏகாதிபத்திய எதிர்ப்பு முன்னணி கருத்து

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கு கௌரவமானதும், பேச்சுவார்த்தை மூலமானதுமான தீர்வொன்றைக் காண்பதற்கு விடுதலைப்புலிகள் மீதான தடையை நீக்குவதற்கு சகல அரசியல் கட்சிகளும் ஒத்துழைக்க முன்வரவேண்டும் என்று ஏகாதிபத்திய எதிர்ப்பு தேசபக்த மக்கள் முன்னணி (ஏ.ஐ.பி.பி.ஏ) கேட்டுக் கொண்டுள்ளது.

அவ்வமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும், பங்காளிகள் கௌரவத்துடன் பங்குபற்றும் ஒரு தீர்வே அவசியமாகத் தேவைப்படுகிறது. உயர் பதவிகளிலிருப்போர் செல்வம் சேர்ப்பதற்கும், அரசியல்வாதிகள் பதவியிலிருப்பதற்கும் வசதியாக முன்வைத்த திட்டங்களை நிராகரித்த மக்கள் ஐக்கியப்படுவதற்கும், விடுதலைபெறுவதற்கும் முன்வந்துள்ளனர்.

புலிகள்மீது தடையைவைத்திருப்பது கபடச் செயலாகும் இருபெரும் கட்சிகளான ஐ.தே.மு.வும் பொ.ஐ முன்னணியுமே யுத்தத்திற்கு பிரதான காரணகர்த்தாக்கள். மக்களுக்கெதிராக அவைபயங்கரவாத செயல்களில்ஈடுபட்டனதெரிந்து கொண்டே குடிமக்கள் வாழும் பகுதிகளுக்கு குண்டுகளை வீசியவர்களுமாகும்.

இதுமட்டுமன்றி ஜே.வி.பியும் சோசலிசத்தின் பேரில்அப்பாவி மக்களுக்கெதிராக பயங்கரவாதத்தை ஏவிவிட்டது. புலிகளை பயங்கரவாதிகள் என்று முத்திரையிட முயற்சித்து பெரும்கபடநாடகத்தை ஜே.வி.பி இன்று நடத்துகிறது.

இவ்வாறு, வாசுதேவ நாணயக்காரவும், சுனீத்திரா அஜித் ருபசிங்கவும் கூட்டாக ஒப்பமிட்டு வெளியிட்ட அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

**தினசரி தியானம்**

## மண்டையோடு

தலையே நீ வணங்காய்- தலை
மாலை தலைக் கணிந்து
தலையாலே பலிதேருந் தலைவனைத்
தலையே நீ வணங்காய்.

- தாயுமானவர்

மாண் பொருளே, மயானத்தில் கிடக்கும் மண்டையோடு எனக்கு நல்லறிவு புகட்டுவதாகுக.

மண்ணுலக வாழ்வு மாண்புடையதெனினும்மகாதேவன் அதற்கு ஒரு மதிப்பும் தருவதில்லை. மண்டையோட்டில் பிக்ஷை யெடுத்து உண்ணுகிறான். விருப்பு வெறுப்பு வடிவெடுத்திருந்த மனிதனுக்குக் கருவியாயிருந்த மண்டையோடு இப்போது விருப்பு வெறுப்பற்றவனுக்கு ஐயமெடுத்துண்ண உதவுகிறது. உயிர்வாழ்ந்திருக்கும் போதே மனிதன் அந்த மண்டையோடு போன்று ஆய் விடவேண்டும், தன்சொந்த அலுவல்களுக்குச் செத்தவன் ஆய்விடவேண்டும். கடவுளிடத்து வெறும் கருவியாயிருக்க வேண்டும்.

ஸ்ரீமத்சுவாமி சித்பவானந்தர்

# மடகஸ்கார் தேர்தலில் றவலோக நானா வெற்றி போர் மூளும் அபாயம்

(அன்ரனனாறிவோ)

மடகஸ்காரில் மீண்டும்நடைபெற்று முடிந்த ஜனாதிபதி தேர்தலில் அந் நாட்டின் எதிர்க்கட்சி வேட்பாளர் றவலோகநானா அதிக வாக்குகளைப் பெற்று வெற்றியீட்டியுள்ளார்.

ஆயினும் இத்தேர்தல்முடிவுகளை தாம் ஏற்கப் போவதில்லை என மற்றைய வேட்பாளர் ரட்றிகா தெரிவித்துள்ளார்.

இத்தேர்தல் முடிவுகளைத் தொடர்ந்து வன்முறைகளும் உள்நாட்டுப் போரும் நடக்க வாய்ப்பிருப்பதாக ஊடகவியலாளர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

கடந்த டிசம்பர் மாதம் நடை பெற்ற தேர்தலின் போது வாக்குகள் மீண்டும் எண்ணப்பட்ட போதும் றவலோகநானாவே வெற்றிபெற்றுள்ளார் என நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தது.

மடகஸ்காரின் தலைநகரான அன்ரனனாறிவோ நவலோக நானாவின் கட்டுப்பாட்டிலும் ஏனைய பிராந்தியங்கள ரட்றிகாவின் ஆதரவாளர்களினது கட்டுப்பாட்டிலும் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-7)

### கூட்டம்

வலிகாமம் வடக்கு அரச ஓய்வூதியர் நலன்புரிச் சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் கடந்த சனிக்கிழமை மல்லாகத்தில், சங்கத் தலைவர் பொ. கனகரத்தினம் தலைமையில் நடைபெற்றது. (உ)



அமைச்சர் எம்.எச்.முகமட் யாழ் வணிகர் கழகத்துக்கு விஜயம் செய்து கழகப் பிரதிநிதிகளுடன் ஆலோசனை நடத்துவதை காணலாம்.

## சுயநிர்ணய..

மேதினப் பொதுக் கூட்டத்தில் விடுதலைப் புலிகளின் பிரமுகர்கள், தொழிற்சங்கப் பிரதிநிதிகள், தமிழர் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டு உரையாற்ற வுள்ளனர்.

மேதினக் கூட்டத்திலும் எழுச்சிப் பேரணியிலும் கலந்துகொள்வதற்கு வசதியாக வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி, தீவகப் பகுதிகளில் இருந்து வரும் மக்களுக்கு விசேட பஸ் போக்குவரத்து வசதிகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாகவும் ஏற்பாளர்கள் அறிவித்துள்ளனர். (வ)


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
வெளிவாரிப் பதிவுகள் பரீட்சைகள் அலகு

**அறிவித்தல்**

**கலைமுதற் தேர்வு–2000**
**துணைப்பாடம் EX.BM**
**1.0அடிப்படைக்கணிதம்**

மேற்படி கலைமுதற் தேர்விற்கான துணைப்பாடம் (Ancillary Subject) EX.BM 1.0 அடிப்படைக்கணிதத்திற்கான பரீட்சை 22.05.2002 அன்று (9.30-12.30) வணிக முதற்தேர்வு-2000 உடன் இணைந்து வவுனியா வளாகத்திலும் யாழ்ப்பாண பல்கலைக் கழகத்திலும் நடைபெறும் என்பதை அறியத்தருகின்றேன்.

பதிவாளர்
30.04.2002 (C/4033)



**யாழ்பல்கலைக்கழகம், இலங்கை**
**சித்த மருத்துவத்துறை**
**BSMS இறுதிஆண்டுப்பரீட்சை**

சித்த மருத்துவமாணி சத்திர சிகிச்சைமாணி (BSMS) இறுதி ஆண்டுப் பரீட்சை எதிர்வரும் 13/05/2002 திகதி முதல் ஆரம்பமாகும்.

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். (C/4137)



காடழித்தல் தீமை, பருவமழை பொய்க்கும்.
பலவீதத்தில் இதன் விளைவு நம்மைப் பாதிக்கும்.
மரம் தறித்தல் தீமை இதை உணருவீர்.
நல்ல மரங்களையே நட்டு நீங்கள் மகிழ்வீர்.
[C/4034]


## ஏபொசிட்டிவ்...

இரத்த வங்கிப் பிரிவு அவசர வேண்டுகோள் விடுத்துள்ளது.

இவ்வகை இரத்தப்பிரிவினர் வைத்தியசாலைக்கு விரைந்து வந்து இரத்ததானம் செய்யுமாறு இரத்தவங்கி வைத்திய அதிகாரி இ.சிவசங்கர் பொதுமக்களைக் கேட்டுள்ளார்.

இரத்ததானம் செய்து உயிர்காக்கும் உன்னத பணியை அனைவரும் உடனடியாகச் செய்யுமாறு கேட்கப் பட்டுள்ளனர். (இ)

## சகல...

விடுத்துள்ள மேதின செய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

உலகெங்கும் உள்ள சகல தொழிலாளர்களுடனும் இணைந்து மேதினத்தை கொண்டாடுவதில் மகிழ்ச்சி அடைகிறேன் என்றும் தெரிவித்துள்ளார். (ம)








**ராஜா**
(யாழ்ப்பாணம்)
3வது வாரமாக
விஜய், பிரியங்கா சோப்ரா, விவேக் நடித்த
**தமிழன்**
TAMILAN
தினசரி 10.30, 2.30, 5.30
(C/4953)


## ஜனாதிபதி...

அவரின் பேச்சாளர் பீரிஸ் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை அமெரிக்காவுக்குச் செல்லும் ஜனாதிபதி அங்கு முக்கிய அரசியல் தலைவர்களையும் ஐக்கிய நாடுகள் சபையின் ஏனைய நாட்டு அரச தலைவர்களையும் சந்தித்துப் பேசுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

அண்மையில் ஜனாதிபதி இந்தியாவிற்குச் சென்று திரும்பியமையும் இவ்வாரம் அமெரிக்காவுக்கு செல்லவுள்ளமையும் அரசியலிலும் சமாதான முயற்சிகளிலும் மாற்றங்களை ஏற்படுத்துமா என அரசியல் ஆய்வாளர்கள் கேள்வி தொடுத்துள்ளனர். (இ)

## மே தினத்தையொட்டி..

காப்புக் கடமையில் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர்.

இதே போல் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தலைமையில் அப்புத்தளையில் நடைபெறவுள்ள மேதினக் கூட்டத்திற்கும், ஹட்டனில் நடைபெறவுள்ள இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் மேதினக் கூட்டத்திற்கும், நுவரெலியாவில் நடைபெறவுள்ள மலையக மக்கள் முன்னணியின் மேதினக் கூட்டத்திற்கும் பலத்த பொலிஸ் பாதுகாப்புப்போடப்பட்டுள்ளது. (ம)

## திருமலையில்...

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக் குழுவினரும் சம்பவம் தொடர்பாக காயமடைந்தோரிடம் கேட்டறிந்துள்ளனர்.

இதேவேளை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்தப் பட்ட பின்னர் இத்தகைய சம்பவங்கள் சமாதானத்துக்கு பாதிப்பை ஏற்படுத்துவதாகவே அமையும் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது. (இ)

## தாயக்கோட்பாட்டை...

களையும் நிறைவேற்றுவதாக அரசாங்கம் உத்தரவாதம் அளிக்குமாயின் சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி ஆதரவுதருமெனவும்,

அவ்வாறு அரசாங்கம் செய்ய முன்வராமல் விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி வடக்கு கிழக்கு மாகாணங்களின் இடைக்கால நிர்வாகசபையை அவர்களிடம் கையளித்து நாட்டை பிளவுபடுத்தும் எந்தவொரு சதி முயற்சிக்கும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி சிறிதளவும் ஆதரவு தரமாட்டாது என்றும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(த)

## விடுதலைப்புலிகளின்...

தடையை நீக்கி அல்லது தளர்த்தி அவர்களை பேச்சுவார்த்தைக்கு அழைப்பதென முடிவுசெய்துள்ளேன்.

ஏனெனில் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணவும் சமாதானத்தை முன்னெடுக்கவும் இதுவே சரியான ஒரு தருணம்.

இதேவேளையில் புலிகள் மீதான தடையை நீக்கக் கூடாதென்று கூறுபவர்கள் விடுதலைப் புலிகளை பேச்சுவார்த்தை மேசைக்கு கொண்டு வருவதற்கான வழிவகைகளை தெரிவிக்கவில்லை.

இந்நிலையில் அவர்கள் மீது விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்கியோ அல்லது தளர்த்தியோ அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி பிரச்சினையை தீர்த்து வைத்து நாட்டில் அமைதியை ஏற்படுத்த முடிவு செய்துள்ளேன்.

இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வு காண்பதுதான் ஐக்கியதேசிய முன்னணி அரசின் நோக்கம்.

அத்துடன் விடுதலைப் புலிகளுடன் பேசியே இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணுமாறு அமெரிக்கா மற்றும் பிரித்தானியா போன்ற நாடுகள் அரசைக் கோரியுள்ளன.

இந்நிலையில் உள்நாட்டு, வெளிநாட்டு அழுத்தங்களுக்கு மத்தியில் இன விவகாரத்திற்கு அரசியல் தீர்வு காண புலிகள் அமைப்பின் மீதான தடை முக்கிய பிரச்சினையாக உள்ளதால் அதனை நீக்குவது அல்லது தளர்த்துவதே சரியான முடிவு என்று தான் கருதுவதாகவும் பிரதமர் கூறினார்.

இதே வேளை தமிழீழ விடுதலைப் புலிகளும், தம் மீதான தடை நீக்கப்படலே பேச்சுவார்த்தையில் கலந்து கொள்வோம் என்று பல தடவை பகிரங்கமாக தெரியப்படுத்தியமையும், தடைசெய்யப்பட்ட அமைப்பாக இருந்து கொண்டு பேச்சுவார்த்தையில் ஈடுபட விரும்பவில்லையென்று அவர்கள் தெரியப்படுத்தியமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (இ)

## யாழ் மாநகர சபை
## உறுப்பினர்கள் வெளிநடப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகர சபையின் மாதாந்தக் கூட்டம் நேற்று இந்து வீதியில் முதல்வர் ஸ்கந்தையன் தலைமையில் கூடிய போது எதிர்க்கட்சி வரிசையில் எவரும் இருக்கவில்லை.

முதல்வர் தன்னிச்சையாக செயற்படுவதாகக் கூறி அதனைக் கண்டிக்கும் முகமாக புளொட், ஈ.பி.டி.பி., ஈ.பி.ஆர்.எல்.எவ் (வரதர் அணி) ஆகியவற்றைச் சேர்ந்த ஒன்பது உறுப்பினர்கள் தலைமையுரை நடைபெறும் போது வெளிநடப்புச் செய்தனர்.

இதனால் எதிர்க்கட்சி வரிசை வெறிச்சோடிக் காணப்பட்டது. (உ 19.6)


ITP

# தகவல் தொழில்நுட்பப் பூங்கா

**272, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம், இலங்கை.**

அரச நிறுவனமான தகவல் தொழில்நுட்பப் பூங்காவில் இரண்டாம் வருடத்திற்குரிய கணனிக் கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரிகள் கீழ்க்காணும் செயற்திட்டங்களில் விரும்பியவற்றில் இணைந்து கொள்வதற்குரிய விண்ணப்பப்படிவங்களை 02-05-2002 தொடக்கம் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ள முடியும்.

**CERTIFICATE COURSES** — **2 MONTHS**
* MS-Word * MS-Excel * MS-Access
* PageMaker * Corel Draw * Auto CAD
Fee: 700/=

**CERTIFICATE COURSES** — **3 MONTHS**
* VisualBasic * Java * Hardware
* Internet & e-mail * C++
* WebPage Designing & Development
Fee: 1500/=

**DIPLOMA COURSES** — **5 MONTHS**

| Course Title | Fee |
| --- | --- |
| * Diploma in MS-Office | 2800/= |
| * Diploma in Destop Publishing | 2400/= |
| * Diploma in Hardware Technology | 3200/= |
| * Diploma in Software Development | 4750/= |
| * Diploma in Information and-Communication Technology | 4750/= |

சகல பயிற்சிநெறிகளுக்குமான பதிவுக் கட்டணம் ரூபா 250/=

**விண்ணப்பப் படிவங்களும், பதிவுகளும்**
May மாதம் 2ம் திகதி தொடக்கம் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
தவணைக்கட்டணம் செலுத்தும்போது மாணவர்கள் இணைந்து கொள்கின்ற பிரிவுகளுக்குரிய நேர அட்டவணை வழங்கப்படும்
பயிற்சி நெறிகள் ஆரம்பம் :- 22-05-2002

**On-line Courses**
* Diploma in PC Application - 2Months - 2000/= (வாரநாட்கள் மட்டும்)
* Workshop on Internet & e-mail - 1Month - 1000/= (வார/வார இறுதியில்)
* Workshop on Pc Hardware & Maintenance - 1Month - 1000/= (வார/வார இறுதியில்)
* Work shop on Webdesigning - 1Month - 1000/= (வார/வார இறுதியில்)
அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. ஆரம்பம் :- 08-05-2002

Certificate கற்கை நெறிகளுக்கான கட்டணங்கள் முழுமையாகச் செலுத்தப்படல் வேண்டும்

Diploma கற்கை நெறிகளுக்கு மாத்திரம் இரு தவணைகளில் கட்டணங்களைச் செலுத்தலாம்

On-Line Certificate Course இற்கான கட்டணங்கள் யாவும் முன்கூட்டியே செலுத்தப்படல் வேண்டும்.

தகவல் : பணிப்பாளர். (C/4032) மேலதிக விபரங்களிற்கு அலுவலகத்துடன் தொடர்புகொள்ளவும்.


இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தினரால் இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.05.2002ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

வலம்புரியின் வாரமலர் **Sankunatham** பக்கங்கள் - 16

# சங்கு நாதம்

சங்கு:~ 03 வள்ளுவர் ஆண்டு 2033 சித்திரை:~ 18 புதன்கிழமை (01.05.2002) தொலை பேசி 3378 நாதம்:~ 10

# ரணிலோடு – அமெரிக்கா
# சந்திரிகாவோடு – இந்தியா

## தொடரப் போவது சண்டையா? சமாதானமா?




நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் வாரமலர்

# ரணிலோடு - அமெரிக்கா சந்திரிகாவோடு - இந்தியா

ஒரு நாட்டில் இரண்டு கட்சித் தலைவர்கள் ஆட்சிப்பீடத்தில் இருந்தால் மாட்சி பெறாது. மாறாக சூழ்ச்சிகள் தான் நிறைந்திருக்கும். இலங்கையின் அரசியல் வரலாற்றில் இரண்டு




கட்சித் தலைவர்கள் ஆட்சிப்பீடத்தில் இருந்த சூழ்நிலை முன்னர் இருந்ததும் இல்லை இனி வருங் காலத்தில் ஏற்படப்போவது மில்லை. 1978இல் ஜே.ஆர்.ஜய வர்த்தனா கொண்டு வந்த புதிய அரசியல் அமைப்பு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைக்கு வழிவகுத்தது. சர்வ வல்லமை பொருந்திய தலைவனாகத் தான் இருந்தால்



மட்டுமே தனது ஐக்கியதேசியக் கட்சியில் உள்ள மூத்த உறுப்பினர்களை கட்டுப்படுத்த முடியும் என்பது ஜே.ஆர்.ஜய வர்த்தனாவின் தீர்மானம். நாட்டு நன்மை- ஜனநாயுக உரிமை என்பவற்றுக்கு மேலால், தனது ஆட்சியில் தன்னை எவரும் மேவிவிடக் கூடாது என்ற ஓரே நோக்கில் ஜே.ஆர் அமுல்ப்படுத்

**விதுரன்**

தியதே நிறை வேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையாகும்.

### நினைத்துப் பார்க்காத தேர்தல் முடிவுகள்

தன்னை பாதுகாப்பதற்காக ஜே.ஆர்.ஜயவர்த்தனாவினால் கொண்டுவரப்பட்ட நிறைவேற்று அதிகாரம் கொண்ட புதிய அரசியல் அமைப்பானது. ஜனாதிபதிக்கு நிறைவேற்று அதிகாரத்தை வழங்கியிருந்தாலும் அந்த அதிகாரம் என்பது பாரளுமான்ற ஆட்சியும் ஜனாதிபதியின் கட்சியும் ஒன்றாக இருக்கும் போதே முழுமைபெறும் என்பது 1978 களில் உணரப்படாத உண்மையாகும். சுருங்கக்கூறின் 1978 இல் ஜே.ஆர் நிறைவேற்று அதிகாரம் கொண்ட அரசியல் அமைப்பைக் கொண்டு வந்த போது ஜனாதிபதியாக இருப்பவர் ஒரு கட்சி சார்ந்தும் பாரளுமன்ற ஆட்சியில் இன்னொரு கட்சியும் அமர்ந்திருக்கும் வாய்ப்புண்டு என புதிய அரசியல் அமைப்பின் கர்த்தாவான ஜே.ஆர்.ஜயவர்த்தனா ஒரு போதும் எண்ணியிருக்கமாட்டார்.

அதற்கு அசையாத ஓர் காரணமும் அவரிடம் இருந்தது. அதாவது தென்னிலங்கை அரசியலைப் பொறுத்தவரை ஒரு கட்சி பொதுத்தேர்தலில் வெற்றி ஈட்டினால் அந்தக் கட்சியே ஜனாதிபதித் தேர்தலிலும் வெற்றி பெறுவது வழக்கம் இதன் காரணமாகவே ஜனாதிபதியும் பிரதமரும் இரு துருவங்களாக ஆட்சியில் அமரும் வாய்ப்பை, ஜே.ஆர் அன்று உணர்ந்து கொள்ளவில்லை.

### இனப்பிரச்சினையே காரணமாக அமைந்தது

எந்தக் கட்சியில் இருந்து மக்கள் ஜனாதிபதியை தெரிவு செய்தார்களோ அதே கட்சியில் இருந்து தான் பாரளுமன்ற ஆட்சியையும் தெரிவு செய்வது வழமை ஆனால் கடந்த பொதுத் தேர்தல் இதற்கு மாறாக அமைந்துவிட்டது.

பொதுஜனஐக்கியமுன்னணியின் தலைவியான சந்திரிக்கா குமாரதுங்கவை ஜனாதிபதியாக தெரிவு செய்த மக்கள் பிரதமராக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவை தெரிவு செய்தனர். இதற்கு அடிப்படையாக அமைந்திருந்தது இனப்பிரச்சினையே ஆகும். பொதுவாக சிறிலங்கா சுதந்திரக்கட்சி- ஐக்கிய தேசிய கட்சி என பிரிந்து நின்று வாக்களித்த சிங்கள மக்கள் தமது கட்சி என்பதை விடுத்து நாட்டில் பல வருடகாலமாக நடைபெறும் யுத்தத்தை நிறுத்தி இனப்பிரச்சினைக்கு யார் தீர்வு காண்கிறார்களோ அவர்களுக்கே எமது வாக்கு என்னும் முடிவுக்கு வந்து விட்டனர். மக்கள் எடுத்துக் கொண்ட முடிவை- மக்களின் விருப்பத்தை, ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க உணர்ந்து கொள்ளாததன் விளைவே பொதுத்தேர்தலில் அவரின் கட்சி படுதோல்வி காண்பதற்கு காரணமாயிற்று என்பது மறுக்கமுடியாத உண்மை. மக்களின் உணர்வலைகளை நேரில் அறியாது மந்திரிகள் மூலம் ''மாதம் மும் மாரி பொழிந்ததா?'' எனக் கேட்கும் மன்னன் போல் ஜனாதிபதி செயற்பட்டதே அவர் படு தோல்வியை சந்திப்பதற்கு சந்தர்ப்பம் கொடுத்தது.

தனது ஆட்சியில் பிரதமராக இருந்த ரட்ணசிறி விக்கிரமநாயக்க, பிரதிப்பாதுகாப்பு அமைச்சராக இருந்த அனுருத்த ரத்தவத்தை ஆகியோர் இனவாதத்தை பேசி சிங்கள மக்கள் தமிழ் இன எதிரிகளாகவே இருக்கின்றார்கள். என ஜனாதிபதிக்கு படம் காட்டியதன் பேறாக ரட்ணசிறி விக்கிரமநாயக்க பிரதமர் பதவியிலிருந்து தவறிப் போகவும் அனுருத்த ரத்வத்தைக்கு சிறைக்



கதவு திறந்திருக்கவும் ஏதுவாயிற்று.

### காலம் உணர்த்திய அரசியல் பாடம்

ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க அரசறிவியலில் துறை போனவராக இருந்தாலும் பாரளுமன்ற ஆட்சி தனது கையில் இல்லாவிடில் தனது நிறைவேற்று அதிகாரம் இயங்கமுடியாதவையாகப் போய் விடும் என்பதை அவரால் முன் கூட்டியே உணரமுடிய வில்லை.

ஆட்சி மாற்றம் இருப்பின் பாதுகாப்பு அமைச்சு, நிதி அமைச்சு ஆகியவற்றை தனது கைக்குள் வைத்துக்கொண்டால் பிரதமர் ரணில் வாலாட்ட முடியாது என்பது ஜனாதிபதியின் அசைக்க முடியாத நம்பிக்கை. இரண்டு முக்கிய அமைச்சுக்களை தனக்குள் வைத்துக் கொண்டால் பாராளுமன்ற ஆட்சி பலமிழந்து விடும் என்ற ஜனாதிபதியின் கனவை பிரதமர் ரணில் தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி தவிடுபொடியாக்கியது. அதாவது ஜனாதிபதி தனக்கு நிதி அமைச்சையும் பாதுகாப்பு அமைச்சையும் வைத்திருந்தால் அவரின் தீர்மானங்களை அமைச்சரவை ஏற்றுக் கொள்ளாது. அவ்வாறு அமைச்சரவை ஏற்றுக்கொள்ளாத தீர்மானங்களை வைத்துக் கொண்டு முக்கிய அமைச்சை எப்படி நகர்த்துவது என்ற நிலையில் ஜனாதிபதி தன்னிடம் இருந்த சகல அமைச்சுக்களையும் பிரதமர் ரணிலிடம் கையளித்துவிட்டார். இது ஜனாதிபதிக்கு பெரும் மனக்கஷ்டத்தை உண்டு பண்ணினாலும் ''பசுவும் புலியும்'' விளையாட்டில் அடைபட்டவன் காய் நகர்த்த முடியாமல் மண்ணைத் தட்டிவிட்டு எழுந்து செல்வது போல் ஜனாதிபதியின் நிலை அமைந்து விட்டது.

இனப்பிரச்சினை விவகாரத்தை முற்றவிட்டதன் விளைவு பொது ஜனஐக்கிய முன்னணியின் எதிர் காலத்தையே கேள்விக்குரிய தாக்கிவிட்டது.

ஒரு நாட்டிற்கு இரண்டு தலைவர்கள் இருக்கும் துரதிஷ்டமான சூழ்நிலை ஏற்பட்டமை ''ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்கு கொண்டாட்டம்'' என்பது போல் ஜனாதிபதியும் பிரமரும் இரு துருவங்களாக இருப்பது

## சமாதானம் தொடருமா? ....

இலங்கை மீது தனது அதிகார பலத்தை பிரயோகிக்க வேண்டும் என எதிர்பார்த்திருந்த நாடுகளுக்குப் பெரும் வாய்ப்பாக அமைந்தது.

### புலிகளை நசுக்கும் இந்தியாவின் பார்வை

இந்திய அமைதிப்படை இலங்கைக்கு வந்தபின்னர் இந்தியாவோடு ஈழத்தமிழருக்கு இருந்த உறவு முறிந்துவிட்டது. இந்திய பிரதமராக இருந்த ரஜீவ் காந்தியின் மரணம் இந்தியாவுடனான உறவை முற்றாக அறுத்து விட்டது எனலாம். ஒரு காலத்தில் உறவாக இருந்த இந்தியா இப்போது பகைநாடாக மாறிவிட்டது. எதெது நடக்கக் கூடாது என எண்ணுகிறோமோ அவை அவை நடந்து விடுகிறது. அவ்வாறு நடந்து முடிந்தவற்றில் இந்தியாவுடனான பகையும் ஒன்று.


இலங்கையின் இனவிவகாரத்தில் இந்தியாவின் தலையீட்டை ஆட்சியில் இருந்த தலைவர்கள் விரும்பியோ விரும்பாமலோ ஏற்றுக் கொண்டாலும் காலஞ் சென்ற முன்னாள் ஜனாதிபதி ஆர்.பிரேமதாஸ இந்திய தலையீட்டை முற்றாக- வெளிப்படையாக எதிர்த்தார். பிரேமதாஸவின் எதிர்ப்பு தமிழர்கள் மீதான இந்தியாவின் அனுதாபத்தை ஒருபடி அதிகரிப்பதாக இருந்த போதிலும், இந்திய அமைதிப் படை அமளிப்படையாக மாறிய தன் விளைவாக அந்நிலைமையும் மாற்றமடைந்தது. ஈழத்தமிழர்கள் விடயத்தில் இந்தியாவின் நிலைப்பாடு எதிரானதாக இருந்த போதிலும் இந்திரா காங்கிரஸின் ஆட்சி அங்கு முடிவுக்கு வந்து மத்திய அரசு பாரதிய ஜனதாக் கட்சியிடம் அகப்பட்டதால் ஈழத்தமிழர்கள் மீதான இந்தியாவின் எதிர்ப்பு உறங்கு நிலையில் விடப்பட்டது. பிரதமர் வாஜ்பேயின் தலைமையில் இந்திய ஆட்சி நடந்தாலும் தமிழீழ விடுதலைப்புலிகளின் விடயத்தில் இந்திரா காங்கிரஸ் கொண்டுள்ள நிலைப்பாட்டையே. வாஜ்பேயின் பரதிய ஜனதாக் கட்சியும் கொண்டுள்ளது.

### அமெரிக்காவின் கழுகுப் பார்வை

இந்தியாவிற்கு சொந்த வீட்டுப் பிரச்சினை காரணமாக விடுதலைப் புலிகள் மீது கடும் கோபம். ஆனால் அமெரிக்காவிற்கு அத்தகைய சொந்தக் கோபம் கிடையாது. அவ்வாறு எனில் விடுதலைப் புலிகள் மீது அமெரிக்கா



கழுகுப்பார்வையை வைத்திருப்பதற்கான காரணம் விடுதலைப்புலிகளின் அபாரமான துணிவும், போர்த்திறனும், தியாகமுமே ஆகும். இலங்கை சிறிய நாடாக இருந்தபோதிலும் விடுதலைப் புலிகளிடம் இருக்கும் மதிநுட்பத்துடன் கூடிய போர்த்திறன் அமெரிக்கா போன்ற வல்லரசுகளையே அச்சம் கொள்ள வைத்தது. சுருங்கக் கூறின் ஓஸாமா பின்லேடன் மீது இல்லாத பயம் விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் மீது அமெரிக்காவிற்கு உண்டு. அந்த அச்சம் காரணமாக இலங்கையின் இனவிவகாரத்தில் அமெரிக்கா மறைமுகமாகத் தலையிட்டு



இனப்பிரச்சினை தீர்ப்பது போல் காட்டி அதன் மூலம் விடுதலைப் புலிகளின் பலத்தை, திறனை ஒடுக்க முனைவதாகும்.

### திட்டத்தை நிறைவேற்ற பிரதமர் ரணிலுடன் கூட்டு

விடுதலைப்புலிகளின் துணிகரத்தை சகிக்க முடியாத அமெரிக்கா சமாதானத் தீர்வு என்பதன் ஊடாக புலிகளின் துணிவுக்கு எல்லை போட முனைகிறது. இலங்கைக்குள் அமெரிக்கா நுழைவதற்கு ''சமாதானத் தீர்வு'' என்பதைத் தவிர வேறு வழியில்லை. அதே நேரம் சமாதானப் பேச்சுவார்த்தை என்று கூறிக்கொண்டு ஜனாதிபதி சந்திரிக்காவுடன் கூட்டு சேர்வது சாத்தியமற்றது. எனவே இத்தகைய ஓர் சூழ்நிலையில் பிரதமர் ரணிலை தக்க முறையில் பயன் படுத்த அமெரிக்கா முடிவுகட்டியது.

அதற்கு அமைவாக இனப்பிரச்சினையை சமாதானமான முறையில் புலிகளுடன் பேசித் தீர்க்க வேண்டும் எனவும் அவ்வாறான சமாதானப் பேச்சுவார்த்தைய்யை விடுதலைப்புலிகள் ஏற்க மறுப்பின் தனது உதவி இருக்குமெனவும் அமெரிக்கா பிரதமர் ரணிலுக்கு தைரியம் ஊட்டியது.

### அமெரிக்காவிற்கு ரணில் இடம் கொடுத்தார்

விடுதலைப்புலிகளுடன் பேசி இனப்பிரச்சினையைத் தீர்ப்பதாக தீர்மானித்த பிரதமர் ரணிலுக்கு புலிகள் மீது சந்தேகமில்லாமல் இல்லை. ஆனால் அமெரிக்கா பின்புலத்தில் நிற்பதால் தான் முன்னெடுக்கும் முயற்சி தோல்வி காணாது என்பது அவரின் நம்பிக்கை. அதே வேளை அமெரிக்கா தனக்கு பின்னால் நிற்பதை விடுதலைப் புலிகளுக்கு இடையிடையே நினைவுபடுத்துவதாகவே அமெரிக்க ஆயுதக் கப்பல்களை கொழும்புத் துறைமுகத்திற்கு வர அனுமதிப்பதும், விடுதலைப் புலிகளை எச்சரிக்கை செய்வது போல் அமெரிக்கத் தூதரகத்தின் மூலம் அறிக்கை விடுவிப்பதும் நடந்து கொண்டு இருக்கிறது.

### ஜனாதிபதியின் பக்கம் திரும்பும் இந்தியா

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா அமெரிக்காவுடன் கூட்டுவைத்திருப்பது இந்தியாவுக்கு ஏற்புடையதல்ல அதேவேளை அந்தக் கூட்டை. வெளிப்படையாக எதிரப்பது அமெரிக்காவுடன் தற்போது நிலவும் நல்லுறவுகளுக்கு நல்லதல்ல என்பது இந்தியாவின் நிலைப்பாடு.

இதனால் அமெரிக்க ஆயுதக்கப்பல்கள் கொழும்புத் துறைமுகத்திற்கு வந்து செல்கின்ற போதி[illegible] மௌனத்தைக் கடைப் பிடிக்கும் இந்தியா, பிரதமர் ரணிலுக்கு அட்டமத்துப் பகையாக விளங்கும் ஜனாதிபதி சந்திரிகா மூலம் தனது திட் டத்தை நிறைவேற்ற அவருடன் ஓர் கூட்டை ஏற்படுத்த முனைந்துள்ளது. இதன் ஓர் அறிகுறியே ஜனாதிபதி சந்திரிகாவின் இந்தியப் பயணம் ஆகும்.

பிரதமர் ரணில் அமெரிக்காவுடன் நிற்பதால் இலங்கைக்குள் அமெரிக்கா வருவதைத் தடை செய்வதும் விடுதலைப் புலிகளுடன் ஓர் இணக்கப்பாட்டிற்கு இலங்கை அரசு வருவதைத் தடுப்பதும் இந்தியாவின் உள் நோக்கம். இந்நோக்கத்தை அடைவதற்கு இந்தியாவுக்கு வாய்த்தவர் ஜனாதிபதி சந்திரிகாவே. அதாவது இராமாயணத்தில் இராமன் மீதான வெறுப்பை சாதிப்பதற்கு கூனிக்கு கிடைத்த கைகேயி போல் விடுதலைப் புலிகள் மீதான காழ்ப்புணர்வை தீர்க்க இந்தியாவுக்கு ஜனாதிபதி சந்திரிகா வாய்த்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் பலத்தைக் குறைப்பதற்கு அமெரிக்கா பிரதமர் ரணிலோடு கூட்டுச் சேர, புலிகள் மீது பழி தீர்ப்பதற்காக இந்தியா- ஜனாதிபதி சந்திரிகாவோடு இணைந்துகொள்ள நோர்வேயின் சமாதான முயற்சி வெற்றிகாணுமா என்பதை காலத்தின் அசைவுகளே தீர்மானிக்கும்.

# மன்னனை வென்ற மாதரசி!

இலக்கிய நயம்

சோழர் குலத்தில் மிக்க புகழ் பூத்தவன் இராஜராஜ சோழன். அவன் கட்டியது தஞ்சைப் பெரிய கோயில்.

கடல் கடந்து கீழை நாடுகளுக்குச் சென்று, அரசர்களை அடிமைப்படுத்தி அவர்கள் வழங்கிய காணிக்கைப் பொருளைக் கொண்டு வந்து குவித்தான். அப்படியே வடநாடு சென்று, அங்குள்ள மன்னர்களோடு பொருது தோல்வியுறச் செய்து அவர்கள் வழங்கிய பொருட்களையும் கொண்டு வந்தான்.

இப்படி மிகுதியாகச் சேர்ந்த பொருளை என்ன செய்யலாம் என்று யோசித்தான். தனக்குப் பெரிய அரண்மனை ஒன்றைக் கட்டிக் கொள்ளலாம் என்ற எண்ணம் அவனுக்குத் தோன்றவில்லை. அரண்மனை - இறைவனுக்குக் கோவில் கட்டலாம் என்று தீர்மானித்தான்.

பல சிற்பிகளையும் ஏராளமான தொழிலாளர்களையும் வருவித்துப் பெரிய கோவிலொன்றைக் கட்டச் சொன்னான். இறைவன் எழுந்தருளி இருக்கும் கற்பக் கிரகத்தின் மேலுள்ள விமானத்தை கருங்கல்லால் பெரிதாகக் கட்ட வேண்டும் என்று உத்தர விட்டான். அதற்கு இப்போது "தற்சிணமேரு" என்ற பெயர் வழங்குகிறது. விமான வேலை நடந்துகொண்டிருந்தது. இப்போது தஞ்சாவூர் வழியாகச் செல்லும் மேட்டூர்க் கால்வாய் அக்காலத்தில் இல்லை. ஆழமான கிணற்றிலிருந்துதான் தண்ணீரை எடுக்கவேண்டும்.

தொழிலாளர்கள் வேலை செய்யும்போது அவர்களுக்கு நீர் வேட்கை உண்டாகும். அங்கே இருந்த சிவபக்தையாகிய கிழவி ஒருத்தி இதை அறிந்து இரவு முழுவதும் தண்ணீர் எடுத்து மிடா மிடாவாகச் சேமித்து வைத்தாள். பகல் நேரத்தில் சிற்பிகளுக்கும் தொழிலாளர்களுக்கும் அந்தத் தண்ணீரை வழங்கித் தாகத்தைத் தீர்த்தாள்.

விமான வேலை முடியும் தறுவாயில் இருந்தது. சிற்பியர் தலைவனுக்கு அந்தக் கிழவி செய்த உபகாரத்திற்கு கைம்மாறாக ஏதாவது செய்ய வேண்டும் என்ற எண்ணம் உண்டாயிற்று. அவள் தரும் பண்டத்தை விமானத்தில் வைத்துக் கட்டினால் அது என்றும் நின்று நிலவும் என்று நினைத்தான்.

அந்தக் கிழவியிடம் வந்து "தாயே ஏதாவது ஒரு பொருளைத்தா, விமானத்தில் வைத்துக் கட்டுகிறேன்," என்றான்.


"எதற்கு அப்பா?"

"உன்னுடைய நினைவு என்றும் மாறாமல் இருப்பதற்காக. நீ செய்த உபகாரத்திற்காக இந்த சிறிய காரியத்தை செய்ய எண்ணுகிறேன்"

"நான் என்ன உபகாரம் செய்து விட்டேன்? ஆண்டவன் அளித்த தண்ணீரைக் கொடுத்தேன். அவ்வளவுதானே?"

"இல்லை, இல்லை. அதை விடப் பெரிய உபகாரம் வேறு என்ன இருக்கிறது? நீ செய்த தொண்டை எங்கள் தொண்டையல்லவா அறியும்? குளிர்ந்த தண்ணீரை இவ்வளவு பேருக்கும் கொடுத்து நலம் செய்தாயே! நீ ஏதாவது ஒரு பொருளைத் தரத்தான் வேண்டும்!"

"என்னிடத்தில் என்ன அப்பா இருக்கிறது? இதோ இந்த வாசற்படிக் கட்டுத்தான் இருக்கிறது" என்று சிரித்தபடியே சொன்னாள், கிழவி.



சிற்பி பார்த்தான். அந்தக் கல்லைப் பெயர்த்தெடுத்துப் பல கைக் கல்லாகச் செதுக்கினான். விமானத்தில் கும்பத்தைப் பதித்து வைக்கும் பல கைக் கல்லுக்குப் "பிரமாந்திரக்கல்" என்று பெயர். அந்த வாயிற்படிக் கல்லை பொழிந்து பிரமந்திரக் கல்லாக வைத்து அதன் மேலே கலசத்தையும் பதித்து விட்டான்.

உரிய நாளில் குறிப்பிட்ட நேரத்தில் கும்பாபிஷேகம் மிகச் சிறப்பாக நிறைவேறியது. பல நாடுகளில் இருந்தும் வந்திருந்த பக்தர்கள் "இத்தகைய கோயிலை எங்கும் பார்த்ததில்லை. இத்தகைய கும்பாபிஷேக வைபவத்தையும் கண்டதில்லை" என்று வியந்தார்கள்.

கும்பாபிஷேகத்திற்குப் பிறகு மகாபிஷேகமும் நடைபெற்றது. தான் நினைத்தபடி யாவும் இனிது நிறைவேறியதில் இராஜராஜனுக்கு அளவற்ற மகிழ்ச்சி. கோவிலையும் விமானத்தையும் பார்த்துப் பார்த்து பூரித்துப் போனான்.

அப்போது அவன் உள்ளத்தில் சிறிய அகந்தைக் கீற்று ஒன்று எழுந்தது. "நாம் சக்கரவர்த்தியாக இருப்பதனால்தானே இவ்வளவு பெரிய காரியத்தை சாதிக்க முடிந்தது? வேறு யாராலும் செய்யமுடியாதது அல்லவா இது?" என்று எண்ணினான்.

மகா பக்தனான அவன் உள்ளத்தில் தோன்றிய இந்த அகந்தையைப்போக்க இறைவன் எண்ணினான். அரசன் உறங்கும் போது ஒரு கனவு கண்டான். அந்தக் கனவில் இறைவன் ஒரு முனிபுங்கவரைப் போல எழுந்தருளினான். இறைவனே அவ்வாறு வந்ததை அரசன் உணர்ந்து கொண்டான். உடனே "எம் பெருமானே அடியேன் கட்டிய திருக்கோயில் திருவுள்ளத்திற்கு உகப்பாக இருக்கிறதா?" என்று கேட்டான்.

எம் பெருமான் "அப்பா நீ கட்டிவைத்த இந்தப் பெரிய கோயிலில் ஒரு கிழவியின் நிழலில் சுகமாக இருக்கிறோம்" என்று திருவாய் மலர்ந்தருளினான்.

அதைக் கேட்டதும் இராஜராஜனுக்கு துணுக்கென்றது. "கிழவியின் நிழலா? கிழவி யார்? பட்டை நிவேதனம் செய்த மதுரைக் கிழவியா? அவள் இங்கே இப்போது வர நியாயம் இல்லையே! ஒரு கால் புராதனா என்ற பெயருடைய அம்பிகையே அப்படிச் சொல்கிறாரோ?" என்று எண்ணமிட்டான். அவனுக்கு விழிப்பு வந்துவிட்டது. எழுந்து உட்கார்ந்து "கிழவியா? யார் அந்தக் கிழவி?" என்று யோசித்துக் கொண்டிருந்தான்.

அரசன் எழுந்ததைக் கண்டு மற்றவர்களும் எழுந்து விட்டார்கள். அவன் கனவைப் பற்றிச் சொன்னான். "அந்தக் கிழவி யார்?" என்று எல்லோருமே யோசித்தார்கள்.

இந்தச் செய்தி ஊரெங்கும் பரவியது. சிற்பியர் தலைவனுக்கும் இது தெரிந்தது. அவன் ஓடி வந்தான், அரசனின் காலில் விழுந்து, "அரசே நான் செய்த ஒரு காரியத்தைச் சொல்கிறேன். அது தவறானால் அதற்குரிய தண்டனையை ஏற்றுக் கொள்கிறேன்" என்றான்.

"என்ன அது?"

"எங்களுக்கெல்லாம் நீர் வேட்கையைத் தீர்த்த கிழவியின் நினைவை என்றும் மக்கள் நினைப்பதற்காக அவள் வீட்டு வாயிற் படிக்கட்டுக் கல்லைப் பிரமாந்திரக் கல்லாக வைத்துக் கட்டினேன். அவள் கால் பட்ட அந்தக் கல் இறைவனுக்கு மேலே இருப்பது தவறானால் எனக்குத் தண்டனை கொடுங்கள்."

"தண்டனையா!" - அரசன் பெருமுச்சுவிட்டான். "இறைவனே அதன் கீழ் சுகமாக தங்கி இருப்பதாக சொன்னபோது அது எப்படித் தவறாகும்? நான் கட்டினேன் என்ற என் அகந்தையைப் போக்க ஆண்டவன் செய்த திருவிளையாடல் இது. அந்தக் கல்லைத் தந்த பெருமாட்டியைப் போய்ப் பார்க்க வேண்டும்." என்று சொல்லி அவள் வீட்டிற்குச் சென்று அவள் காலில் விழுந்து கண்ணீர் மல்க நின்றான் அரசன்.

"தாயே என் அகந்தையை போகச் செய்தாயே!" என்று விம்மினான். அவளுக்கு நிலங்களை மானியமாக அளித்தான்.

(முற்றும்).

கி.வா.ஜகந்நாதன்

# இது வித்தியாசமான தாலாட்டு



மகனே
வழக்கமான தாலாட்டை
உனக்கு நான்
வாசிக்க முடியாது

அவை
மொழியின் ஆடம்பரங்கள்
கைது செய்து வைத்த
கனாக்கள்

நிர்ப்பந்த உறக்கத்திற்கு
உன்னை
இட்டுச் செல்லும் ஏற்பாடுகள்

என் தாலாட்டு
இசை என்னும்
தூக்க மாத்திரைகள்
இல்லாதது

இது
உறக்கத்தையல்ல
உன் விழிப்பபையே
பாடுபொருளாய்க் கொண்டது

தந்தை மகற்காற்றும்
சம்பிரதாயச் சடங்குகளின்
நீட்டோலையை என்னிடம் நீ
நீட்டாதே.

சுவாசிக்கத் தெரிந்த
உனக்குக்
காற்று மண்டலத்தை
அறிமுகம் செய்வது
அவசியமில்லை.

நாங்கள் உனக்குப்
பெயரிட்டது
எங்கள் சௌகர்யம்
கருதித்தான் மகனே

பாஷை
தனது
அர்த்த மண்டபத்திற்கு
உன்னை
அழைத்துச் செல்லும்போது
உன் பெயரை
நீயே இட்டுக் கொள்வதே நீதி.

உன்
தூளியின் மேல் தொங்கவிட
வர்ண பலூன்கள்
இல்லையென்று
வருந்தாதே.

உன் தூளிக்குக்
கயிறு கிடைத்ததே என்று களி.

ஆமாம் மகனே
உனக்கு அணிவிக்க
என்னிடம்
ஆபரணங்களில்லை
விலங்குகளுமில்லை

உனக்கு நான்
செல்வம் எதுவும்
சேர்த்து வைக்க முடியாது

நீ
செலவழிப்பதற்கு
உன்
வேர்வை இருக்கிறது

பள்ளிக் கூடத்தில்
உன்னைச்
சேர்ப்பது பற்றி நான்
சிந்திக்கவில்லை

அங்கே
உனக்கு நிகழ்வது
எழுத்துக்களின்
கட்டாய அறிமுகந்தான்

வாழ்க்கையை வாசிக்க
நீ
தெருவுக்குத்தானே
திரும்பி வரவேண்டும்

உன் சாலையில்
மரங்கள்
பூக்களைப் பரப்பிவைக்கலாம்
ஆனால்
மனிதர்கள்,
முட்களைப் பரப்பி வைக்கலாம்
நீ
பூவையும் எடுத்துக் கொள்
முள்ளையும் எடுத்துக் கொள்.

அந்தப் பூவைச்
சட்டையில் குத்திக் கொள்ள
முள்ளைக்
குண்டூசியாக்கிக் கொள்

உன்னை நான்
வாழ்த்துகிறேன்.
ஆனால்
வாழ்த்துக்களே உன்னை
வாழவைத்து விடுவதில்லை.

நதிக்கரை ஓரத்து நகரம்
வெள்ளப் பெருக்கை
எதிர்பார்த்து
விழிப்போடிருப்பது போல்
எப்போதும் விழிப்பாய் இரு.

உறங்கும் போதும்
உன் மனக்கண்கள்
இமைத்துக்
கொண்டிருக்கட்டும்

இந்தச் சமூகத்தின்
வேர்களைக் கொஞ்சம்
விசாரி.

அஸ்திவாரங்களின்
அறிமுகம் இல்லாமல்
சுவர்களை ரசிக்காதே.

மானுடத்தை
உன்
தோள்களில் ஏற்றி
ஓர் அங்குலமாவது
உயர்த்து

திசைகளின் நெற்றிகளுக்கு
உன் பெயர்
பொட்டாகட்டும்.

# பிறந்த நாள் பலன்கள்

## ஜனவரி

**டிசம்பர் 21ஆம் திகதிக்கு மேல், ஜனவரி 20 ஆம் தேதிக்குள் பிறந்தவர்களுக்கான பலன்கள்:**

பொதுவாக இந்த மாதத்தில் பிறந்தவர்கள், மிகுந்த மனவலிமை பெற்றவர்களாக இருப்பார்கள். ஆனால், மற்றவர்கள் இவர்களைத் தவறாகவே புரிந்து கொள்ளுவார்கள்.

சிந்தனையாளர்களாகவோ, தாம் செய்யும் ஒவ்வொரு செயலுக்கும் தகுந்த காரணம் காட்டுபவர்களாகவோ, பெரிய அலுவலகங்களில் தலைமைப் பதவி வகிப்பவர்களாகவோ, அர்சாங்கத்தில் பொறுப்புள்ள வேலைகளில் இருப்பவர்களாகவோ இவர்கள் இருப்பார்கள்.

### சிறந்த சிந்தனையாளர்கள்

மற்றவர்கள் சொல்லுவதைக்கேட்டு அதன்படி நடப்பதோ, மற்றவர்களுக்கு அடிமையாக இருப்பதோ இவர்களுக்குச் சிறிதும் பிடிக்காது. எதையும் தாமாகவே சிந்தனை செய்து, மிகத் தெளிவான, நல்ல முடிவுக்கு வருவார்கள். மற்றவர்களால் இவர்களைக் கட்டுப்படுத்துவது கடினம்.

எந்தச் செயலில் இவர்கள் இறங்கினாலும் இவர்கள் அவற்றைச் சிறப்பாகச் செய்து முடிப்பார்கள். தலைமைப் பதவிக்கு போராடி, அது கிடைக்கா விட்டால், அடியோடு அந்த வேலையை இவர்கள் உதறித் தள்ளுவதுடன், அதில் சிறிதும் அக்கறை கொள்ளவும் மாட்டார்கள்.

இயற்கையாகவே இவர்கள் எல்லா வழிகளிலும் மாறுபட்டவர்களாகவே இருப்பார்கள். அன்பு காட்டுவதிலும் சரி, கடமையைச் செய்வதிலும் சரி, சமுதாயத்தில் தங்களுக்குரிய ஒரு நிலை ஏற்படுத்திக் கொள்ளுவதிலும் சரி, இவர்களுடைய செயல் புதுமையாகவும், வியக்கத் தக்கதாகவும், மாறுபட்டும் அமையும்.ஆகையால் இவர்களுடைய பழக்கவழக்கங்கள், பேச்சுக்கள், செயல்கள் எல்லாமே சுற்றுப்புறத்தில் உள்ளவர்களுடன் ஒப்பிடும்படி அமையாது.

மதத்தில் இவர்களுக்குப் பற்று இல்லாவிட்டாலும், ஆழ்ந்த பக்தியுள்ளவர்களாக இருப்பார்கள். இவர்கள் பெரும்பாலும் மற்றவர்களுக்கு நல்லதையே செய்வார்கள். பொதுவாக இவர்கள், மக்களுக்கென்று சமுதாயத்துக்கென்று, நாட்டுக்கென்று நல்லதைச் செய்யவே அதிகம் பிரியப்படுவார்கள். தனிப்பட்ட ஒரு மனிதனுக்கு நன்மை செய்வதில் அவ்வளவு ஆர்வம் காட்டமாட்டார்கள்.

### நல்ல பேச்சாளர்கள்

இவர்கள் பொதுவாக நல்ல பேச்சாளர்களாக இருப்பார்கள். அடுக்கு மொழியில் பேசத் தெரியாவிட்டாலும், இலக்கியவாதி போல் பேசத்தெரியாவிட்டாலும், மிகத் தெளிவாகவும், மிக எளிய மொழியிலும் பேசி மிக எளிதில் மற்றவர்களுக்குப் புரிய வைக்கும் ஆற்றல் இவர்களுக்கு உண்டு. தாம் எண்ணுபவற்றை மற்றவர்களும் ஏற்றுக் கொள்ளும்படி செய்ய எதையும் மிகத் துணிவுடன் சொல்லுவார்கள். அவர்கள் பேசத் தொடங்கினால், முடிவு இவர்களுக்கே பலனுள்ளதாகவே முடியும். தன்வழிக்கு மற்றவர்களை திசை திருப்பவே இவர்கள் பேசுகிறார்கள் என்று சொல்லலாம்.

இவர்கள் செயலை மற்றவர்கள் எப்போதும் மிகத் தவறாகவே புரிந்துகொள்ளுவதால், இவர்கள் நேரடியாகவே பலருக்கு எதிரிகளாகி விடுகிறார்கள்.

ஆனால் இவர்கள் எப்போதுமே தமது பொறுப்புக்களை உணர்ந்து, அவற்றில் முடிந்த கவனம் செலுத்துவார்கள். எதுவும் தவறு ஏற்பட்டுவிடக் கூடாதே என்று எண்ணி, ஏங்கி, அடிக்கடி இவர்கள் துன்பம் கொள்வதால் இவர்களுடைய உடல்நிலை-உள்ளநிலை அடிக்கடி மிகக் கெடுவதற்கு வாய்ப்புண்டு

எந்தவொரு முடிவுக்கும் இவர்களால் மிக விரைவில் வரமுடியும். எதையும் எப்போதும் இவர்கள் மிக விரைவில் புரிந்து கொள்வார்கள். ஆனால் முழுமையான தன்னம்பிக்கை இவர்களுக்கு இல்லாத காரணத்தினால், மிக எளிதிலும் காரணமின்றியும் ஊக்கத்தை இழந்து தவிப்பார்கள்.

பெரும்பான்மையான இவர்கள் சிடுசிடு என்றிருந்தாலும் இவர்கள் உள்ளம் மிகத் தூய்மையானது. மற்றவர்கள் துன்பத்தை இவர்கள் பார்த்துமனம் வாடுவார்கள். இவர்களுள் சிலர் பொது ஸ்தாபனங்களுக்கோ, கல்லூரிகளுக்கோ, விடுதிகளுக்கோ நிதி உதவி பெருமளவில் செய்வார்கள்.

### மதப்பற்றாளர்கள்

மதத்தில் இவர்களுக்குப் பற்று உண்டாகிவிட்டால், மிகத் தீவிரமாக ஒரு 'மதத்தில் இறங்கி உருகுவார்கள். பிறகு, கண்மூடித்தனமான வழக்கங்களுக்கு ஆளாகி விடுவார்கள் மதத்தைப் பொறுத்த வரையில்!

அறிவு படைத்தவர்களையும், புத்திசாலிகளையும், இவர்கள் போற்றி வணங்குவார்கள்! இவர்களுடைய சிந்தை எப்போதும் ஆழ்ந்ததாகவே இருக்கும்.

மற்றவர்களின் விசயங்களில் இவர்கள் எப்போதும் குறுக்கிட மாட்டார்கள். அதைப் போலவே, மற்றவர்கள் இவர்கள் விசயங்களில் குறுக்கிட்டாலும் அடியோடு இவர்களுக்குப் பிடிக்காது.

பொது வாழ்க்கையிலோ, அரசியல் பதவியிலோ, அப்படிப்பட்டவர்கள் மிகுந்த அக்கறை செலுத்தினால் மிக விரைவில் உயர முடியும். மற்றவர்களைக் கட்டுப்படுத்தும் வாய்ப்பு இவர்களுக்குக் கிடைத்தால், திறமையுடன் இவர்கள் தமது செயலைச் செய்து முன்னேற்றம் காணமுடியும்.

தம்மை எதிர்ப்பவர்கள் எப்படிப்பட்டவர்களாக இருந்தாலும், துணிவுடன் அவர்களை எதிர்ப்பார்கள். எப்படிப்பட்ட எதிர்ப்புக்களையும் தத்துவ ஞானியைப் போல் சமாளிப்பார்கள்!

இவர்களுடைய குடும்ப வாழ்க்கையில் எப்போதும் சிக்கல்களும் தொல்லைகளும் மிகுந்திருக்கும். துன்பத்தில் சிக்கித் தவிக்கும் உறவினர்களோ, உடல்நிலை பெரிதும் பாதிக்கப்பட்டு படுத்த படுக்கையாக கிடக்கும் உறவினர்களோ, இவர்கள் வீட்டில் நிரந்தரமாக இருந்து அல்லது அடிக்கடி வந்து பணம் காசு உதவி என்று துன்பத்தை விளைவிப்பார்கள். இவர்களுக்கு இப்படிப்பட்ட உறவினர்களுக்காகத் தம்மை தியாகம் செய்து விடவேண்டும் என்ற எண்ணம் எப்போதும் இருக்கும். இவர்கள் எப்போதும் தனிமையில் இருப்பதைப் போன்ற உணர்வு இருக்கும்.

இவர்களைப் போன்ற குணமுள்ளவர்களே இவர்களுக்கு நண்பர்களாக வந்து சேருவார்கள்.

### உடல் நிலை

இவர்களுக்கு அடிக்கடி வயிற்றுக் கோளாறுகள் இருந்து கொண்டேயிருக்கும்! வாயு, பாதங்களில் வலி! அடிக்கடி விபத்துக்களால் கால்களுக்கோ, முழங்கால்களுக்கோ அடிபடுதல் முதலிய வற்றால் இவர்கள் துன்பப்படுவது இயற்கை. ஈரலில் நோய் உண்டாக வாய்ப்பு உண்டு. பல உபாதைகளுக்கு இலக்காவார்கள். தோல் வியாதிகளால், பீடிக்கப் படவும் அதிகமான வாய்ப்பு உண்டு.

### வண்ணங்கள்

இவர்களுக்குப் பிடித்த வண்ணங்கள **Grey, Violet, Purple.**

ஜனவரியில் பிறந்தவர்களில் சிலர்:

* ஸ்டாலின்
* அட்லி
* ஜோன் ஆப் ஆர்க்
* சாமர்ஸட் மாம்
* சுபாஷ் சந்திரபோஸ்
* சுவாமி விவேகானந்தர்
* எம்.ஜி.ஆர்

**தொகுப்பு**
**வளவன்**

(தொடரும்)

# சலரோகம் (DIABETES MELLITUS)

## நீரிழிவு நோயாளியும் உணவுப் பழக்க வழக்கங்களும்

நீரிழிவு நோயானது முற்றாகக் குணப்படுத்த முடியாவிட்டாலும் முழுமையான கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கக் கூடியது. கட்டுப்பாடானது உணவு வகைகளிலும், உணவு முறைகளிலுமே பிரதானமாகத் தங்கியுள்ளது.

### நீரிழிவு நோயாளிகள் கடைப்பிடிக்க வேண்டியவை

1. உரிய நேரத்தில் உரியஅளவு உணவை ஒழுங்காக உண்ண வேண்டும்.

2. சீனிச்சத்து நிறைந்த உணவுகளை முற்றாகத் தவிர்த்து நார்ச்சத்து நிறைந்த உணவுகளையே அதிகளவில் உட்கொள்ளுதல் வேண்டும். நார் சமிபாடடைந்த குளுக்கோசை மெதுவாக விடுவிப்பதனால் குருதியில் குளுக் கோஸ் மட்டம் சடுதியாக உயர்வதை குறைக்கின்றது. அத்துடன் நார்ப்பொருட்கள் உள்ள உணவு நீரை உறிஞ்சி அதிகளவு கனவளவை எடுப்பதனால் உண்ணும் உணவின் அளவு குறைக்கப்படுகின்றது. இதனால் உடற்பருமன் குறைய ஏதுவாகின்றது.

3. உழுந்துவகை உணவுகளையும் குரக்கன், திணை, ஆட்டாமா, ஒடியல்மா உணவுகளையும் அதிகளவில் உள்ளெடுத்தல்.

4. கீரை, முளைக்கீரை, சண்டியிலை, அகத்தியிலை, முருங்கையிலை, தவசிமுருங்கை, பொன்னாங்காணி, வாழைப்பூ என்பன ஒவ்வொரு நாளும் உட்கொள்ள வேண்டும்.

5. வெண்டிக்காய், கரட், பயிற்றங்காய், அவரைக்காய், லீக்ஸ், வெங்காயத்தாள், வெங்காயம், வெந்தயம், வெள்ளைப்பூடு என்பன உணவில் அதிகளவில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

6. மாப்பொருள் கூடிய உணவுகளை (கிழங்கு வகைகள்) அளவு குறைத்து உண்ணல்.

7. மதுபானம் உட்கொள்வதைத் தவிர்த்தல்.

8. உடற்பருமனைக் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருத்தல்.

*நீரிழிவு நோயாளிக்கான உணவு அளவானது நோயாளிக்கு நோயாளி அவரது வயது, நிறை, பால். நாளாந்த வாழ்க்கை முறை. நோயின் தன்மை, சிகிச்சை முறை என்பவற்றைப் பொறுத்து வேறுபடும்.

*சீனியைத் தவிர்த்த பின் தனது ஏனைய உணவுப் பழக்கவழக்கத்தை சிறுநீரில் குளுக்கோசைச் சோதித்து அதற்கேற்ப கட்டுப்படுத்திப் பழகுதலே சிறந்த முறையாகும். (அதாவது ஒரு நோயாளியின் உணவுப் பழக்கவழக்கம் இன்னொருவரிடம் இருந்து மாறுபடும்)

* உணவுப் பழக்கவழக்கத்தை சரியான முறைக்கு மாற்றுவதன் மூலமே நீரிழிவு நோயை கட்டுப்பாட்டிற்கு வைத்து ஆரோக்கியத்துடன் வாழலாம்.

### சலரோக நோயாளி முற்று முழுதாக தவிர்க்கவேண்டிய உணவு வகைகள்

1. அதிகளவு சீனி, குளுக்கோஸ், ஜாம்(JAM) பழரசம், தேன், தகரத்திலடைத்த பழவகைகள், இனிப்பு வகைகள், இனிப்பூட்டிய பானங்கள், சர்க்கரை, பனங்கட்டி, பனம்பாணி, கற்கண்டு, ரின்பால், ஐஸ்கிறீம், சொக்கலேட்.

2. கேக்(CAKES) வகைகள், இனிப்பு விசுக்கோத்து, புடிங் (PUDDINGS).

3. குடிபான வகைகள்.

### சலரோக நோயாளி அளவு குறைத்து சாப்பிட வேண்டிய உணவுவகைகள்

1. பாண், இடியப்பம், பிட்டு, சோறு, அப்பம், தோசை
2. விசுக்கோத்து வகைகள்
3. உருளைக்கிழங்கு, போஞ்சி, வாழைக்காய்
4. தானிய வகைகள்
5. எல்லாப் பழவகைகள், முட்டைக் கோசு
6. தடித்த சூப்பு
7. பால்

### சலரோக நோயாளி விரும்பிய அளவில் சாப்பிடக்கூடிய (வேறு நோய்கள் இல்லாவிடின்) உணவு வகைகள்

1. இறைச்சி வகை, மீன், பருப்பு
2. தெளிந்த சூப்பு, தக்காளி, எலுமிச்சைச் சாறு
3. கோவா, கரட், கீரைவகைகள், வெண்காயம், முள்ளங்கி, கெக்கரிக்காய்
4. உவர்ப்பு, உறைப்பு, மிளகு, கடுகு
5. தேநீர், கோப்பி (சீனி சேர்க்காத)
6. சக்கரின் (SACCHARINE) சேர்த்த உணவு
7. குரக்கன், கடலை, முட்டை

**நிறைகூடிய நோயாளிகள் பட்டர், மாஜரின், கொழுப்பு உணவுவகைகளைக் குறைக்க வேண்டும்.

### சலரோக நோயாளிக்கான நாளாந்த மாதிரி உணவு அட்டவணை .

*காலை உணவு:-* இடியப்பம் 3 அல்லது தோசை 2 அல்லது பாண் 2 துண்டு ($^{1}/_{2}$"தடிப்பில்) இவற்றுள் ஒன்றுடன் சம்பல் அல்லது வாழைப்பழம் சேர்க்கலாம்.

*காலை 10 மணிக்கு:-* பால் 1 கோப்பை (சீனி போடாமல்) அல்லது மார்மைட் அல்லது தேசிக்காய்த் தண்ணீர் (சீனிக்கு பதிலாக உப்புடன் அல்லது தேநீர்(சீனி போடாமல்)

*மதிய உணவு:-* சோறு 1அகப்பை/ பீலீஸ், மரக்கறி வேண்டிய அளவு (கிழங்குவகை தவிர்க்கவும்) கீரை, முருங்கையிலை போன்ற இலைக்கறிவகை ஒன்று கட்டாயம்.

*மாலை 4 மணிக்கு:-* கிறீம் கிறக்கர் பிஸ்கட் 2 அல்லது பாண் 1 துண்டு பாலுடன் தேநீர் /மார்மைட் 1 கோப்பை (சீனி சேர்க்காமல்)

*இரவு உணவு:-* பாண் 3 துண்டு ($^{1}/_{2}$"தடிப்பில்) அல்லது இடியப்பம் 3 அல்லது பிட்டு 3 அல்லது தோசை 2. இவற்றுள் ஒன்றுடன் இலைக்கறி அல்லது சம்பல் சேர்க்கலாம்.

### நீரிழிவு நோயாளர்கள் பயன்படுத்தும் மாத்திரைகள்.

உணவுக் கட்டுப்பாடு மட்டும் சலரோகத்தைக் கட்டுப்பாட்டினுள் வைத்திருக்காவிடின் உணவுக் கட்டுப்பாட்டைத் தொடர்ந்து கடைப்பிடிப்பதுடன் *வைத்திய ஆலோசனையுடன்* மாத்திரைகளையும் உபயோகிக்கலாம். இன்சுலின் சுரக்கும் கலங்களைத் தூண்டி இன்சுலினை சுரக்க உதவுகின்றன. அதற்கு சதையியில் தொழிற்படக் கூடிய இன்சுலின் சுரக்கும் கலங்கள் இருத்தல் அவசியம். எனவே பொதுவாக மாத்திரைகள் இன்சுலினில் தங்கியிராத நீரிழிவு நோயாளர்களுக்கே (NIDDM) பயனுடையதாக அமைகிறது.

1. **Tolbutamide("Rastinon")**
2. **Chlorpropamide ("Diabenese")**
3. **Glibendamide ("Daonil")**
4. **Metformin**

### நீரிழிவு நோயாளர்களுக்கான இன்சுலின் வைத்தியமுறை

1. *இன்சுலின் சேமிப்பு:-*

குளிர்சாதனப் பெட்டியின் நடுப்பகுதியில் ($4^{0}c$) வைத்து சேமித்தல் சிறந்தது. மேற்பகுதியில் ($0^{0}c$) (FREEZER) வைத்து சேமிக்கக்கூடாது. குளிர்சாதனப் பெட்டி இல்லாவிடின் இயலுமான வரை குளிரான ($<= 30^{0}c$), வெளிச்சம் படாத இடத்தில் சேமித்து வைக்கவும்.

2. *சிறிஞ்சை தேர்ந்தெடுத்தல்:-* ஏற்றப்படும் இன்சுலினின் கனவளவானது அதனுடைய வீரியத்திலேயே (STRENGTH) தங்கியுள்ளது. இது Unit/ml எனும் அலகில் குறிக்கப்படுகின்றது. கடைகளில் மூன்று வகையான வீரியத்தில் இன்சுலின் கிடைக்கின்றது. (u-40, u-80, u-100) எனவே நீங்கள் பாவிக்கும் இன்சுலினின் வீரியம் குறிக்கப்பட்ட சிறிஞ்சையே எப்பொழுதும் பாவித்தல் வேண்டும். சரியான ஊசி பயன்படுத்தப்படாவிடின் அளவுகளில் மாற்றம் ஏற்படுவதால் பல சிக்கல்கள் உருவாகும்.


3. *இன்சுலினை ஊசியினுள் எடுத்தல்:-*

* இன்சுலின் உள்ள போத்தலை கவனமாக குலுக்கவும்.
* இன்சுலின் போத்தலின் மேல் மூடியை sprit மூலம் நன்றாக துடைக்கவும்.
* எந்தளவு கனவளவு இன்சுலின் தேவையோ அந்தளவு வளியினை ஊசியினுள் இழுக்கவும்.
* பின் இந்த வளியை போத்தலினுள் செலுத்தவும்
* பின் தேவையான அளவு இன்சுலினை ஊசியினுள் இழுக்கவும்.
* ஊசியைப் போத்தலில் இருந்து வெளியே இழுப்பதற்கு முன்னர் வளிக்குமிழ்கள் ஏதாவது இருப்பின் அதைப் போத்தலினுள் செலுத்தவும்.

(13ஆம் பக்கம் பார்க்கவும்)

## ஆண்களைப் போல் மது அருந்தும் பெண்களும் இருந்தால் நிலைமை எப்படி இருக்கும்?

*தே.தங்கன் நீராவியடி*
★ தொலைபேசி சிலவேளை தொல்லை பேசியாக மாறுவது ஏன்?



● **பொறுப்பற்றவர்கள் பொறுப்பான இடத்தில் இருப்பதால்.**

*த.ராஜினி தும்பளை*
★ வீட்டுக்கு வரும் விருந்தினர்களை இன்முகத்துடன் வரவேற்காத நண்பர்கள் பற்றி என்ன நினைக்கிறீர்?
● **நண்பர்கள் இருக்கட்டும்! ''மதியாதார் முற்றம் மதித்து ஒரு கால் சென்று மிதியாமை கோடி பெறும் ''என்று ஔவை கூறியிருப்பது உமக்குத் தெரியாதா.**

*P.ராஜி உரும்பிராய்*
★ வெளிநாட்டு மணமகன்கள் சீதனம் குறைவாகக் கேட்கிறார்களே என்ன காரணம்?
● **ஏற்கனவே ஒரு சீதனம் வேண்டியிருப்பார்கள், இது இரண்டாம் சீதனம் தானே குறைத்துக் கேட்கிறார்கள் போலும்.**

*த.அஜந்தகுமார் வதிரி.*
★ வியாசர் ஐயாவே! ஊருக்கு உபதேசம் செய்பவன் தன்னைத் தான் திருத்தாமல் இருப்பது சரியா?
● **திருந்தியவன் உபதேசம் செய்ய மாட்டானே!**


*சி.திருச்செந்தூரன் மிருசுவில்*
★ வியாசர் அவர்களே! உங்களைக் கவர்ந்த மிகச் சிறந்த கவிவரிகளைத் தருவீர்களா?
● **மன்னவனும் நீயோ வளநாடும் நின்னதோ...... என்றானே கம்பச்சக்கரவர்த்தி அந்த வரிகள் எனக்கு நன்கு பிடிக்கும்.**

*S.S.சிவகுமார் மிருசுவில்*
★ வியாசரே! வீதியில் அட்டகாசம் செய்து வந்த கேம் குறூப்பைக் காணவில்லையே?
● **கதிரவனைக் கண்ட பனிபோல் கரைந்திருக்கும்.**

*தி.சிவதர்சினி நெல்லண்டை*
★ மகாபாரதம் எழுதும் போது உங்களுக்கும் பிள்ளையாருக்கும் இடையில் ஒப்பந்தம் இருந்த போதும் பிள்ளையாரின் எழுத்தாணி முறிந்த போது கதையைச் சற்று இடைநிறுத்திக் கூறியிருக்கலாம் தானே?
● **எந்தத் தடை வந்தாலும் கதைகூறுவதை நிறுத்தக் கூடாதென்பது எனக்கும் பிள்ளையாருக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.**

## வியாசரின் பதில்கள்

*எஸ்.கவிதரன் சண்டியூர்*
★ பள்ளிக் காதல் படலை வரை என்கிறார்களே உண்மையா?



● **அனுபவம் ஏதும் உமக்கு இல்லையா?**

## பள்ளிக்காதல் படலை வரை என்கிறார்களே?

*தாட்சாயினி சண்டிலிப்பாய்*
★ பெண்களுக்குக் கோபம் வரக்கூடாதாமே?
● **ஆமாம்! கண்ணகிக்கு வந்த கோபம் மதுரையை எரிப்பித்தது. திரௌபதிக்கு வந்த கோபம் பாரதப்போரைத் தந்தது.**

*சுதர்சன் இத்தாவில்*
★ வியாசரே! தவிர்க்கமுடியாத காரணத்தினால் எனது நண்பியை ஏமாற்றி விட்டேன்?
● **அடுத்த பிறப்பில் நீர் நண்பியாகவும் ஏமாற்றப்பட்ட நண்பி நண்பனாகவும் பிறந்து கர்மத்தை அனுபவிக்க வேண்டியது தான்.**

*எஸ். முரளி கல்வியங்காடு*
★ நான் நன்றாக படிக்க ஒரு வழி சொல்லுங்கள்?
● **பசித்திரு, தனித்திரு, விழித்திரு.**

*P.துவாரகி யாழ்ப்பாணம்*
★ திரைப்படங்களின் இன்றைய போக்கால் எம் இளைய சமூகம் பாதிக்கப்படுவது பற்றி என்ன கூறுகிறீர்?
● **மிக விரைவில் முடிவு தெரியும்.**

*தீபன் மாகியப்பிட்டி*
★ குருவே வியாசர்! தங்களுடைய அனுசரணையுடன் இந்தியாவில் இருந்து சூப்பர் ஸ்ரார் ரஜினிகாந்தை யாழ்ப்பாணம் அழைத்துக் கலை நிகழ்ச்சி ஏதேனும் வைக்கலாம் தானே?
● **மகனே தீபா! சித்தாராவில் நடந்த சீரழிவுக்குப், பின் எல்லாம் வேண்டாமென்று போச்சுது.**

## தொலைபேசி சிலவேளை தொல்லை பேசியாக மாறுவது ஏன்?

*அன்ரனிதீபன் மாகியப்பிட்டி*
★ ஐயா வியாசர் அவர்களே! பிரிக்க முடியாத சகோதர பாசத்திற்கு பொருந்தும் வகையில் குட்டிக்கதை ஒன்று சொல்லுங்களேன்.
● **14 வருடம் வனவாசம் முடிந்து இராமன் அயோத்தி திரும்புவதில் ஏற்பட்ட காலதாமதத்தைத் தாங்கிக் கொள்ள முடியாத பரதன் விறகுக்கட்டை அடுக்கி தீ மூட்டி அதில் விழப் போனானே அதை விடச் சகோதர பாசம் இந்த உலகில் வேறொன்று மில்லை.**

*பொ.குனரத்தினம் நாவலர்வீதி*
★ ஆண்களைப் போல் மது அருந்தும் பெண்களும் இருந்தால் நிலைமை எப்படி இருக்கும்.



● **மது அருந்துவதை ஆண்கள் அடியோடு நிறுத்தி விடுவார்கள்.**

*கிரிஷா கொட்டடி*
★ நண்பர்களுக்கு நண்பர்கள் பட்டம் சூட்டி மகிழ்கின்றனரே..! இதில் உங்கள் அனுபவம் ஒன்றைக் கூறுங்களேன்?
● **என் தொழில் சார் உள்ள நண்பன் என் ஊரின் பெயரோடு ''பாவி'' என்றழைத்தான் மறக்க முடியுமா?**

*வாசகன் நெல்லியடி*
★ பிள்ளைகளின் ஆசையை பெற்றோர்கள் புரிந்து கொள்கின்றனர் இல்லையே.?
● **பிள்ளைகளின் ஆசைகளைப் பெற்றோர்கள் புரிந்து கொள்ளாதவர்கள் அல்ல. ஆனால் அவர்கள் ஆசையால் வரும் கேட்டையும் புரிந்து வைத்துள்ளார்கள்.**

*க.கற்பகவல்லி பருத்தித்துறை*
★ வியாசரே! அதிஷ்டம், திறமை, முயற்சி எது மனிதனை உயர்த்துகிறது?
● **மூன்றுமே அல்ல. 'விதி' தான் மனிதனை உயர்த்துகிறது என நான் நினைக்கிறேன்.**


*ஜோ.ஜெ.டி கொழும்புத்துறை*
★ பெண்களின் அன்புத் தொல்லையில் இருந்து தப்பிக்க என்ன வழி....?



● **காவி உடுப்பதுதான் ஒரே வழி.**

## பெண்களின் அன்புத் தொல்லையில் இருந்து தப்பிக்க என்ன வழி....?

## வாசகர் இதயநாதம்



சங்கத் தமிழ் வளர்க்கும்
சங்கு நாதமே.....!
வாசகர்களின் 'நெஞ்சங்களில்
சங்கமிக்கின்றாய் சூரிய உதயமாய்
அறிவு புகட்டும் ஆசானாய்
கவிபாடும் வானம்பாடிபோல்
மக்கள் உள்ளங்களைக்
கொள்ளை கொண்ட
இதயம்கவர் இனிய நாதமே!
உன்னதமான உன் பணி சிறக்க
மங்கையிவளின் மனமார்ந்த
வாழ்த்துக்கள் பல..............!

*அ.பிரதீபா,*
*நாவலர் வீதி.*

வாரத்தில் புதுப் பொலிவுடன் புதினங்கள்
பலவற்றை உன்னகத்தே கொண்டு வரும்
சங்கு நாதமே! இலக்கிய நயத்துடன், கைரேகை
சாஸ்திரம் பல கூறி, அர்த்தமுள்ள இந்து மதத்தின்
சாரம் கூறி, மருத்துவ விதிகள் பற்றியும்
மௌனத்தின் தேடலில் மக்களின் உணர்வுகளின்
வெளிக் கொணர்வுகளையும்,சிறுவர்களின்
வெளிப்பாடுகளையும்
எமக்கு அளிக்கும் தனிப் பெருமை
உனக்கே உண்டு என்பதை உறுதியுடன்
முன்மொழிகின்ற நீ
என்றும் நீடுழி வாழவே வாழ்த்துகிறேன்.

*க.செந்தில்குமரன்,*
*நல்லூர்.*

**பத்திரிகைத் துறையில் பெரும் பணி செய்யும்**
**வலம்புரியின் நாதமாம் - சங்குநாதம்**
**இளம் எழுத்தாளர்களுக்கு - இடம் அளித்து**
**வருவது போற்றுதற்குரிய தொன்று.**

*ச.முகுந்தன்,*
*இணுவில் கிழக்கு.*

வலம்புரித் தாயின் மகத்தான பேறே நீ என்றும்
வாழ்க வாழ்க பல்லாண்டு காலம் - சங்கு நாதமே!

எங்கள் நாதமே நடுநிலைமை தவறா இதழே நீ என்றும்
எட்டாப் புகழ் படைக்கும் இதழாக வாழ்க பல்லாண்டு
சங்கு நாதமே!

கடலே கலைமகளின் மகளே நீ என்றும்
கலைகள் அறுபத்து நான்கும் கொண்டு வாழ்க பல்லாண்டு
சங்கு நாதமே!

சர்வ தேசமெங்கும் உன் புகழ் ஓங்க நீ என்றும்
சர்வ வளத்துடன் வாழ்கபல்லாண்டு காலம் சங்கு நாதமே!

*இ.தமயந்தி,*
*அரியாலையூர்.*

**சங்கு நாதமே நீ உதயமாகி**
**சந்தோசம் தந்து விட்டாய்!**
**எங்கும் மங்கள கீதமாகி - நீ**
**என்றும் கலந்திட வாழ்த்துகிறேன்!**

**தமிழர் வாழ்வினை தனித்துவமாக்க**
**தியாகம் பல செய்யும் வலம்புரியின்**
**அமிழ்த வாரமலரே! எங்கள் வீரமலரே!**
**அவனியில் நீ என்றும் வாழியவே!**

*த. அஜந்தகுமார்,*
*யாழ். வதிரி.*

சங்கே முழங்கிடு! சாதனைகள் பல படைத்திடு!
நம்மவரின் சோக அகதி வாழ்வினை!
அயல் நாட்டார் அனைவரும் அறிந்திடவே!
பாண்டவர்க்குப் பாரதத்தில் தூது சென்ற
பரந்தாமனின் வலம்புரிச் சங்கே!
பல்லாண்டு, பல்லாண்டு, பல்லாயிரம் ஆண்டு!
இனிதே முழங்கிட வேண்டி
வாழ்த்தும் இளையவளின்
நல்லாசிகள் பற்பல............!

*தி.ஜமுனா,*
*வதிரி.*

சங்கு நாதமே! சஞ்சலம் தீர்க்கும் நாதமே!
தரமான ஆக்கமதைத் தன்னத்தே கொண்ட நாதமே!
தரணியை நொடிப் பொழுதில் சுற்றுவாய் நாதமே!
தன்மான உணர்வோடு வாரம் தோறும் வருவாய் நாதமே!

உண்மையை உலகிற்கு உணர்த்துவாய் நாதமே!
ஊமையான எம் உணர்வை தட்டி எழுப்புவாய் நாதமே!
வலம்புரி வாரமலராய் வருவாய் நாதமே!
உன்னத பணியைத் தொடர்வாய் நாதமே!


*சி.திருச்செந்தூரன்,*
*மிருசுவில் வடக்கு.*

வாரந் தோறும் மலர்ந்திடுவாய்
புன்னகையுடன் வாங்கிடுவோம்
புதிய புதிய ஆக்கங்களை
புதிது புதிதாய் தந்திடுவாய் சங்குநாதமே!
பிஞ்சுகளான எம்மையெல்லாம்
அறிவுக் கடலில் மூழ்க வைப்பாய்!
அயராத முயற்சியோடு
நம் கரங்களில் தவழ்ந்திடுவாய்!
உன் புகழ் வானுயர
வாழ்த்துகிறேன் நானும்!

*S.S.சிவகுமார்*
*மிருசுவில் வடக்கு.*

# அர்த்தமுள்ள இந்து மதம்

கவிஞர் கண்ணதாசன்



## ஆணவம்

'நம்மிடம் ஏதுமில்லை' என்று நினைப்பது ஞானம்.

'நம்மைத் தவிர ஏதுமில்லை' என நினைப்பது ஆணவம்.

ஞானம், பணிந்து பணிந்து வெற்றி மேல் வெற்றியாகப் பெறுகின்றது.

ஆணவம், நிமிர்ந்து நின்று அடி வாங்குகிறது.

நமது புராண இதிகாசங்களில் ஆணவத்தால் அழிநதவர்களைச் சித்தரிக்காதது மிகவும் குறைவு.

ராமகாதையில் ராவணன், பாரதத்தில் துரியோதனன், இரணியன், கண்ணனால் கொல்லப்பட்ட நரகாசுரன், கந்தனால் கொல்லப்பட்ட சூரபத்மன்,மற்றும் பத்மாசுரன் இவர்களெல்லாம் ஆணவத்தின் அடையாளச் சின்னங்கள்.

இவர்களுடைய முடிவு கொடுமையானதைக் காட்டி, இந்துமதம் ஆணவக்காரர்களை எச்சரிக்கிறது.

'நான்' என்னும் எண்ணம் ஒருவனுக்குத் தோன்றுகின்றதென்றால், அவன் தோல்விகளைச் சந்திக்கத் தயாராகிக் கொண்டிருக்கின்றான் என்று பொருள்.

அறிவு குறைவானவர்களுக்கே ஆணவம் வருகிறது.

நிறை குடங்களுக்கு அது வருவதில்லை.

வெற்றி மயக்கம் ஏற ஏற அறிவு தடுமாறி, முட்டாள்தனமான தைரியம் தோன்றி, 'எல்லாம் நாமே' என்ற எண்ணம் பிறந்து, தடுமாறிக் காரியம் செய்யத் தொடங்கியதும் ஒவ்வொரு தோல்வியாகத் தொடர்ந்து வந்து, ஆணவக்காரனைக் கூனிக் குறுகச் செய்கின்றன.

எனக்குத் தெரிந்த ஒரு நண்பர். நீண்டகால நண்பர்.

ஆரம்பத்தில் மிகுந்த சிரமப்பட்டுக் கொண்டிருந்தார்.

அந்தச் சிரமத்தோடு கடன் வாங்கி ஒரு படம் எடுத்தார்.

கதை, வசனம், டைரக்ஷன் எல்லாம் அவரே.

படம், 'ஓகோ' என்று ஓடிற்று.

வெற்றி மயக்கத்தில் அவர் நிலை கொள்ளவில்லை!

உடனே ஒரே நேரத்தில், நாலைந்து படங்கள் எடுக்கப் போவதாக விளம்பரம் செய்தார்.

விநியோகஸ்தர்கள் அவரிடம் வந்து, ''புதிய படங்களை நாங்கள் வாங்கிக் கொள்கிறோம்; யார் யார் நடிக்கிறார்கள்!'' என்று கேட்டார்கள்.

அதற்கு அவர் கோபமாக. ''எல்லாம் நானே. என் பெயருக்குத்தான் படமே தவிர நடிப்பவர்களுக்காக அல்ல; இஷ்டமிருந்தால் கையெழுத்துப் போடுங்கள்'' என்று மிரட்டினார்.

நான ஒருநாள அவரைச சந்தித்தபோது, 'என் ஒவ்வொரு படத்தையும் 'பாக்ஸ் ஆபீஸ்' பண்ணிக் காட்டுகிறேன்'' என்று என்னிடமே சவால் விட்டார்.

''என்னுடைய படம் என்றால், ஓலையிலே பிரிண்ட் பண்ணினாலும் ஓடும்'' என்று சொன்னார்.

பெரிய பெரிய கோவில்களுக்கெல்லாம் வேண்டிக் கொண்டும், அவரது அடுத்த படம் படுதோல்வியடைந்தது. மூன்றாவது படமும் படு தோல்வி.

கடன்காரரானார்; கஷ்டப்படு[illegible]

ஆணவத்தோடு நடந்து கொண்ட அவர், தினமும் அவர்களைத் தேடி நடக்கிறார்.

இன்னொருவர்....

அவரும் கதை வசனம் எழுதி டைரக்ஷன் செய்கிறவர்.

அவர் விழித்துக் கொண்டிருக்கிற நேரத்தில், பெரும் பகுதி தன்னைப் பற்றியே பெசிக் கொண்டிருப்பார்.

நீங்கள் அவரோடு பேசப் போனால் நீங்களும் அவரைப் பற்றியே பேசினால்தான் அவர் உங்களோடு பேசுவார்.

வசனத்திலே வல்லினம் மெல்லினம் இருக்காது. ஆனால் குருட்டுத்தனமாக வந்த வெற்றி. அவரைக் குருடனாகவே ஆக்கி விட்டது.

இதுவரை ஆணவக்காரர்கள் எப்படி அவதிப்பபட்டார்களோ, அப்படிப்பட்ட அவதிக்கே அவரும் தயாராகிக்கொண்டிருக்கின்றார் .

மனிதன் உடம்பு மிகவும் பலவீனமானது.

அதில் ஒரு நரம்பைத் தட்டினால் பல நரம்புகளிலும் சங்கீதம் கேட்கிறது.

ஒரு வெற்றி கண்ணுக்குத் தெரிந்துவிட்டால், வரப்போவதெல்லாம் வெற்றியே என்ற திமிர் வருகிறது.

அந்தத் திமிர், யாரையும் அலட்சியப்படுத்தச் சொல்கிறது.

அடி பலமாக விழுந்ததும், திமிர்தானாக அடங்கிப் பணிவு எங்கிருந்தோ வந்து விடுகிறது.

ஒரு சபைக்கு நான் போயிருந்தேன்.

பெரிய பெரிய அறிஞரெல்லாம் வந்திருந்தார்கள்.

அவர்களையெல்லாம் சாதாரணமாக நினைத்து, ஓர் அரைகுறைப் படிப்பாளி, ஆணவத்தோடு பேசிக் கொண்டு இருந்தார்.

அவரது ஆணவத்தைப் பார்த்து அவர் பேசியதிலிருந்த தவறுகளைக் கூட யாரும் திருத்தவில்லை.

ஒவ்வொரு வரியையும் முடிக்கும்போது, ''எப்படி நான் சொல்வது?'' என்று கேட்டுக் கொண்டே இருந்தார்.

நான் ஆத்திரம் தாங்காமல், ''ஒரு குழந்தை எப்படிச் சொல்லுமோ, அப்படியே சொல்கிறீர்கள்'' என்றேன்.

''தெளிவில்லாதவன், விவேகமற்றவன்'' என்பதை நயமாகவும், நளினமாகவும் சொன்னேன்.

சில கவியரங்கங்களிலும் இந்த அனுபவம் எனக்குக் கிடைத்திருக்கிறது.

இலக்கண மரபோ, இலக்கியச் சுவையோ தெரியாத சிலரும். அந்த அரங்கங்களில் தோன்றிவிடுவார்கள்.

என்னைத் தாக்கிவிட்டால் தாங்கள் பெரிய கவிஞர்கள் என்ற எண்ணத்தில், அசிங்கமாகத் தாக்குவார்கள்.

நான் அடக்கத்தோடும் பயத்தோடும் உட்கார்ந்திருப்பேன். திரும்ப அவர்களைத் தாக்கமாட்டேன்.

காரணம் கிருபானந்தவாரியார் சொன்ன, ஒரு கதை.

கோயில் யானை ஒன்று நன்றாகக் குளித்துவிட்டு நெற்றியில் பட்டை தீட்டிக்கொண்டு சுத்தமாக வந்து கொண்டிருந்ததாம்.

ஓர் ஒடுக்கமான பாலத்தில் அது வரும்போது எதிரே சேற்றில் குளித்துவிட்டு ஒரு பன்றி, வாலை ஆட்டிக்கொண்டே வந்ததாம்.

யானை ஓர் ஓரத்தில் ஒதுங்கி நின்று அதற்கு வழிவிட்டதாம்.

அந்த பன்றி, எதிரே இருந்த இன்னொரு பன்றியிடம், ''பார்த்தாயா, அந்த யானை என்னைக் கண்டு பயந்துவிட்டது!''என்று சொல்லிச் சிரித்ததாம்.

அந்தப் யானையைப் பார்த்து இன்னொரு யானை, ''அப்படியா! நீ பயந்து விட்டாயா?'' என்று கேட்டதாம்.

அதற்குக் கோயில் யானை கீழ்க்கண்டவாறு பதில் சொன்னதாம்.

''நான் சுத்தமாக இருக்கிறேன், பன்றியின் சேறு என்மேல் விழுந்து விடக் கூடாதே என்ற ஒதுங்கினேன். நான் ஏறி மிதித்தால் அது துவம்சமாகிவிடும்; ஆனால் என்கால் அல்லவா சேறாகிவிடும்.''

இந்தக் கதையின்படி சிறியவர்களின் ஆணவத்தைக் கண்டு, நான் அடக்கத்தோடு ஒதுங்கிவிடுவது வழக்கம்.

முன்னேற விரும்புகிற எவனுக்கும் ஆணவம் பெருந்தடை.

ஆணவத்தின மூலம் வெற்றியோ லாபமோ கிடைப்பதில்லை; அடிதான் பலமாக விழுகிறது.

தான் பணக்கார வீட்டுப்பெண் என்ற மமதையில் கணவனை அலட்சியப்படுத்தும் மனைவி:

தான் மந்திரியாகிவிட்ட போதையில் தொண்டர்களை அலட்சியப்படுத்தும் தலைவன்;

தான் சொன்ன ஏதோ ஒன்றை ஜனங்கள் ஏற்றுக்கொண்டார்கள் என்பதற்காகத் தினமும் எதையாவது சொல்லிக் கொண்டிருக்கும் தலைவர்கள்;

இவர்களெல்லாம், ஒரு கட்டத்தில், அவமானத்தாலும் வெட்கத்தாலும் கூனிக்குறுகிப் போய் விடுகின்றார்கள்.

(தொடரும்)

# பிணி அகற்றும் மணத்தக்காளி

இந்தியாவிலும், இலங்கையிலும் மணத்தக்காளிக்கீரை மிகுதியாகக் கிடைக்கிறது. நம் நாட்டில் வறண்ட பகுதிகளில் இது நன்கு வளரக்கூடியது. உலகின் வெப்ப மண்டல நாடுகளில் இக்கீரை காணப்படுகிறது. கீரை வகைகளை எடுத்துக் கொண்டோமேயானால் சிறப்பான கீரையாகக் கருதப்படும் கீரைகளில் மணத்தக்காளிக் கீரையும் ஒன்றாகும்.

இதற்கு மிளகுதக்காளி, சுக்கிட்டுக்கீரை, உலக மாதா என்ற பல பெயர்களும் உண்டு. சின்னஞ்சிறு மணத்தக்காளிப்பழங்களை மஞ்சள், சிவப்பு, கறுப்பு ஆகிய நிறங்களில் காணலாம். ஆனால் குணத்தில் இவைகளுக்குள் பெரிதும் வேற்றுமை இல்லை. எல்லா வகை மண்ணிலும் வளரக்கூடியது இக்கீரையாகும்.

## தீரும் நோய்கள்

வாய் இரணம், வயிற்றில் இரணம், வயிற்றுவலி, வயிறு எரிச்சல், பித்தநீர், நீர்ப்பாண்டு, கரப்பான் வகைகள், வீக்கம், குடலில் இரணம், கோழை, இருமல், ஷயம், உடல்வலி, களைப்பு, கட்டி, மலச்சிக்கல், கண்பார்வை, மூலநோய், கல்லீரல், பித்த வாந்தி, மற்றும் வலிப்புநோய், ஜுரம் போன்றவை.

## பயனும் செய்முறை விளக்கமும்

வாயில் ஏற்படும் புண், குடலில் காணப்படும் புண், இவைகளுக்கு இந்த மணத்தக்காளி இலையை பச்சையாக கொஞ்சம் எடுத்து சுத்தம் பார்த்து வாயில்போட்டு மென்று தின்றால், மேற்கண்ட புண்கள் யாவும் நீங்கி நலம் பெறலாம்.

இக்கீரையைப் பருப்புடன் கடைந்து சாதத்தில் போட்டு பிசைந்து சாப்பிடலாம். மற்றும், இக் கீரையுடன் துவரம் பருப்பும் தேங்காய் துருவலும் சேர்த்து பயன்படுத்தலாம். மேலும், பொரியலாகச் செய்து உணவுடன் தொடுகறியாகப் பயன்படுத்தலாம். பொரியல் செய்யும் பொழுது சிறிது தேங்காய் துருவலை அதனுடன் சேர்த்துக் கொண்டால் தொடுகறிக்கு மேலும் சுவை அளிக்க வல்லது; மேலும் குடல் புண், வாய் வேக்காடு, வயிறு எரிச்சல் ஆகியவை நீங்கும்.

## காமாலை விலக

தேவையான மணத் தக்காளிக் கீரையைக் கொண்டு வந்து சுத்தம் செய்து, அதை அம்மியில் வைத்துத் தட்டிப்பிழிந்து சாறெடுக்கவேண்டும். அதாவது இச் சாற்றில் ஒரு தேக்கரண்டியையும், இது போல் வல்லாரை இலையைத் தட்டிப் பிழிந்து ஒரு தேக்கரண்டி அளவு சாற்றையும் எடுத்து, இரண்டையும் ஒன்றாகக் கலந்து அத்துடன் கொஞ்சம் நல்ல தேனையும் கூட்டி அருந்தவேண்டும். இவ்விதமாக ஒரு நாளைக்கு 3 வேளை வீதம் மூன்று நாட்களுக்கு அருந்த காமாலை நீங்கி நலம் பெறலாம்

இக் கீரையைத் தொடர்ந்து சாப்பிட்டுவரும் பட்சத்தில் இது உடலுக்கு குளிர்ச்சியையும் வசீகரத் தன்மையையும் தரவல்லது. மற்றும் இருதயத்திற்குப் பலமும், வலிமையையும் அளிக்கவல்லது. மேலும் ஜுரம் வயிற்றுப்போக்கு ஆகியவற்றை நீக்குகிறது. கண் பார்வையைத் தெளிவுபடுத்தும் தன்மை பெற்ற உயர்வான இக் கீரையை ஓர் சஞ்சீவி எனலாம்.

உடலில் வீக்கம் இருக்கும் பட்சத்தில், இந்த மணத்தக்காளிக் கீரையை உணவோடு சமைத்து சாப்பிடுவதன் மூலம் வீக்கத்தை அறவே நீக்கலாம். இந்த இலையினுடைய சாற்றை 50 ml எடுத்து தினம் 3 வேளை கொடுக்க நீரைப் பெருக்கி, நீர்ப்பாண்டு, பெருவயிறு, வயிற்றுப் புண், உட் சூடு ஆகியவை



அகலும்.

இதைப் பச்சைபருப்புடனோ அல்லது துவரம் பருப்புடனோ கூட பாகம் செய்து சாப்பிடலாம், நாவில் உள்ள இரணத்திற்கு நலத்தைத் தரும். வாய் இரணத்தை ஆற்றும். கல்லீரலின் உஷ்ணத்தைத் தணித்துக் குடல் இரணத்தையும் ஆற்றும். நாவரட்சி அகலும். ஆசனக் கடுப்பை அகற்றும். இக் காய்கள் குழம்புக்கு ஏற்றது. இதனுடைய வற்றல் பிணியாளர்களுக்கு ஏற்றது. ஜீரண சக்தியை மேம்படுத்தும்.

## பயனும் செய்முறை விளக்கமும்

இக் கீரையைக் கொண்டுவந்து சுத்தம் செய்து அத்துடன் பாசிப்பருப்பை சேர்த்துக் கூட்டு வைத்து ஒருநாள் விட்டு ஒருநாள் சாப்பிட்டு வந்தால், மூலத்தில் இரத்தம் விழுவது நிற்கும். வெள்ளை ஒழுக்கையும் நிறுத்தும். வெட்டை நோய், சொறி சிரங்கு ஆகியவை நீங்கும்.

## காய்

மிளகு அளவுள்ள அதனுடைய கசப்புக்காயை வற்றல் போடுவார்கள். இதனால் தயாரிக்கப்படும் வற்றல் குழம்பு மிகவும் சுவையாக இருக்கும். இரவு நேரங்களில் வற்றல் குழம்பு செய்து சாதத்துடன் போட்டு உண்பதினால், உடல் வலி, களைப்பு, நீங்குவதுடன் அதிகாலை எழுந்திருக்கும் போது உடலில் தெம்பு, சுறு சுறுப்பு ஏற்பட ஏதுவாகிறது.

## பழம்

மணத் தக்காளியின் பழத்தை தேவையான அளவு எடுத்து தேனுடன் கலந்து மூன்று நாட்கள் சாப்பிட நுரையீரலில் ஏற்படும் காசநோய் கட்டுப்படும்.

பாடகர்கள் குரல் இனிமையாக இருப்பதற்கு இப்பழத்தைச் சாப்பிடுவார்கள்.

பிரசவ காலத்தில் இப்பழம் உதவிபுரிகிறது.

நச்சுப் பிராணிகளினால் ஏற்படும் கடிக்கு இப்பழம் மருந்தாகப் பயன்படுத்துகின்றது. ஆனால் இ[illegible] தனியாக நஞ்சு முறியாகப் பயன் படுவதில்லை என மருத்துவ நூல் ஆய்வு கூறுகிறது.

## வேர்

செடியின் வேரானது மருந்து வகைகளில் ஒன்றாகக் கருதப் படுகிறது. இதன் வேர் மலச்சிக்கலை நீக்கும்.பல மருந்துகளில் சேர்க்கப்படுகிறது. இவ்வேரானது மலத்தை இளக்கி ஆசனவ்ாயைச் சுத்தப்படுத்திகிறது. காதுகள், கண், மூக்கு, இவற்றில் ஏற்படும் இரணங்களை ஆற்றும் மருந்தாக இந்த வேரிலிருந்து தயாரிக்கப்படும் கஷாயம் பயன்படுகிறது. அன்றியும் இக் கஷாயம் ஈரல் வீக்கத்திற்கு மருந்தாகவும் பயன்படுகிறது.

**முக்கிய குறிப்பு:** இந்த வேர் கஷாயத்தை கருவுற்ற பெண்களுக்குக் கொடுக்கக்கூடாது காரணம்? இவ் வேர்க் கஷாயம் கருவைக் கலைக்கும் தன்மையுடையது.

இக் கீரையில் நிறைந்துள்ள தாதுப்புக்களில் சுண்ணாம்புச்சத்து, மணிச்சத்து, இரும்புச்சத்து ஆகியவைகள் இருக்கின்றன. அத்துடன் உயிர் சத்துக்ளில் ஒன்றான வைட்டமின் ''சி'' இக் கீரையில் நிறைந்திருக்கின்றது.

50 கிராம் கீரையில் 205 மில்லிகிராம் சுண்ணாம்புச் சத்தும், 35 மி.கிராம் மணிச் சத்தும், 10.3மி.கிராம் இரும்புச் சத்தும் 11.மி.கிராம் வைட்டமின் ''சி'' யும் இக் கீரையிலிருந்து கிடைக்கிறது. மேலும் இவைகளில் மிகுந்த புரதம் மற்றும் மாப் பொருட்கள் இருக்கின்றன.

என்.துரைராஜ்

# அண்ணல் காந்தியின்

09

காந்தி தன் குலக்கொழுந்தைவாரி அணைத்து முத்தமிட்டார். "ஊரிலிருந்து வரும்போது உனக்கு என்ன வேண்டும்?" என்று பரிவுடன் கேட்டதற்கு அவன் பதில் ஒன்றும் பேசவில்லை. அவர் பிடியிலிருந்து திமிறிக் கொண்டு ஓடி விட்டான்.

''இதோ பார்த்தாயா கஸ்தூரி, நீ என்னமோ சிபாரிசு செய்தாயே. அவன் என்னிடம் வரவே மாட்டேன் என்கிறானே!"

'' ஆமாம் உங்களுக்குக் குழந்தையுடன் விளையாட எங்கே பொழுது இருக்கிறது? அவன் பிறந்ததும் மூன்று வருஷம் ஊருக்குப் போய் விட்டீர்கள். திரும்பி வந்ததும் வேலைக்கு அலைந்தாகி விட்டது. இப்போது மறுபடியும் பிரயாணம் கிளம்பி விட்டீர்கள், ஐந்து வருஷமோ, பத்து வருஷமோ..."

''சே...சே! ஒரே வருஷம் தான்... அந்த வழக்கு முடிந்ததும் வந்து விடுவேன். உன்னை விட்டு விட்டு என்னால் ரொம்பநாள் இருக்க முடியுமா, கஸ்தூரி...இதோ பாரேன்..."

''என்ன இது! தள்ளிப் போங்கள். குழந்தை எழுந்து விடப் போகிறான்... கொஞ்ச நேரம் தூங்கட்டும். ராத்திரி பூராகவும் ஓயாத அழுகை! அவனும் தூங்கவில்லை. என்னையும் தூங்கவிடவில்லை..."

''பாவம்! உன் உடம்பு ரொம்ப இளைத்து இருக்கே. உடம்பை ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்.. நேரம் கிடைத்தால் அரிச்சுவடியும் படி."

''ஆமா, அது ஒண்ணு தான் சூறைச்சல்.."

''கஸ்தூரி உனக்கு நான் என்ன குறைவு வைத்தேன். தென்னாபிரிக்காவிலிருந்து வரும்போது உனக்கு என்ன வேண்டும், சொல்?"

''ஒரு நல்ல புடைவையாகக் கிடைத்தால் வாங்கிக்கொண்டு வாருங்கள்.

''பயித்தியம்! இங்கே இல்லாத புடைவையா அங்கே? புதுபாஷனா ஒரு 'கவுண்' வாங்கிக் கொண்டு வரட்டுமா? உனக்கு ரொம்ப அழகா இருக்கும்..."கஸ்தூரிக்கு 'குபீர்' என்று சிரிப்பு வந்துவிட்டது. ''நீ சிரித்துவிட்டே! அதுபோதும்!"

ஒரு வருஷத்தில் திரும்பி வருவதாகச் சொல்லி கஸ்தூரியைச் சிரிக்க வைக்கு விட்டுச் சென்ற காந்தி மூன்றாண்டுகள் கழித்துத்தான் இந்தியா வந்தார். 1883ஆம் வருஷம் இந்தியாவை விட்டுச் சென்ற காந்திக்கும்1886ஆம் வருஷம் திரும்பி வந்த காந்திக்கும் நிறைய வேற்றுமைகள் இருந்தன. அன்று, படிப்புக்காக இங்கிலாந்து சென்றார். இப்போது பிழைப்புக்காகத் தென்னாப்பிரிக்காவுக்குச் சென்றார். அப்படித்தான் எல்லோரும் நினைத்தார்கள். ஆனால், உண்மையில் நடந்தது என்ன? எந்த வல்லரசுடன் வாழ்நாளெல்லாம் போராடி வெற்றி கண்டாரோ, அந்த ஏகாதிபத்தியத்தின் தலை நகருக்கு நேரில் சென்று அவர்கள் நாடியைப் பிடித்துப் பார்த்து விட்டு வந்தார் அப்போது. கத்தியின்றி, இரத்தமின்றி அந்தப் பேரரசை இந்திய மண்ணிலிருந்து வெளியேற்றுவதற்கான போர் முறையை பயின்று வர தென்னாப்பிரிக்காவுக்குச் சென்றார் இப்போது. வரலாற்றுக் கண்ணோட்டத்தில், நிகழ்ச்சிகளின் வரிசையைப் பார்த்தால், இந்த விந்தையான முடிவுக்குத்தான் வர வேண்டியிருக்கிறது!

நீதிமன்றத்தில் வழக்காடிப் பணம் குவிக்கச் சென்றவர், வெள்ளையனின் நிறவெறி ஆட்சியின் கீழ் அவதிப்பட்டுக் கொண்டிருந்த இந்தியர்களுக்கு நீதி கிடைக்கப் பாடுபடுவதில் முனைந்து விட்டார். தென் ஆபிரிக்காவில் தனக்கு ஏற்பட்ட அவமானம், அத்தனை பேருக்கும் ஏற்பட்டதாகவே கருதினார். தன் உடலில்பட்ட அடி அத்தனை பேர் உடலிலும்பட்ட அடியாகவே நினைத்தார். இந்தியர்களைக் 'கூலிகள்' என்று அழைப்பதைக் கேட்டுப் பொருமினார். ''இந்த அவமரியாதையைத் துடைப்பேன், இந்தியர்களின் உரிமையை நிலை நாட்டுவேன்" என்று சூளுரைத்தார். இதுவரை வாழ்ந்த காந்தி வேறு இனி வாழப் போகும் காந்தி வேறு; புதுப் பிறவி எடுத்து விட்டார். அவருள் புதுசக்தி புகுந்து விட்டது. புனிதயாத்திரை துவங்கி விட்டது.

அந்தப் பிரயாணம் துவங்கியது நேட்டாலிலுள்ள மாரிட்ஸ்பர்க் ரயில்வே நிலையத்தில் தான். முதல் வகுப்பு டிக்கெட்டைக் கையில் வைத்துக் கொண்டிருந்தும், நிறத்தைக் காரணம் காட்டி அவரை ரயிலிலிருந்து இறக்கி விட்டு விட்டான் நிறவெறி பிடித்த ஒரு வெள்ளையன். அன்று இரவுபூராகவும் உறையும் பனியில், நடுங்கும் குளிரில், கண்ணையும் மூடாமல், காலையும் மடக்காமல்,கடும் தவம் இருந்தார் காந்தி. அன்று போதி மரத்தடியில் தவமிருந்த புத்தனுக்கு 'மனிதனின் துன்பத்தைத் துடைப்பதற்கான வழி' புலப்பட்டது போல,



# கஸ்தூரி திலகம்

காந்திக்கும் ஓர் உண்மை புலப்பட்டது.மனிதன் மனிதனை அடிமைப்படுத்துவதை தடுத்தாக வேண்டும்.' அந்த இருட்டில் அந்தத் தனிமையில், அந்தப் பயங்கர வேளையில், உலகமே உறங்கும் நள்ளிரவில் காந்தி விழித்துக் கொண்டிருந்தார்! மனிதனின் உரிமைகள் இனி களவு போக விட மாட்டார்!

அப்போது அவருக்கு பல ஆண்டுகளுக்கு முன் ஓர் இரவு நடந்த நிகழ்ச்சி ஒன்று நினைவுக்கு வந்திருக்க வேண்டும். அதுதான் அந்த பொல்லாத இரவு. உடல் நசையின் காரணமாக, இறக்கும் தறுவாயில் இருந்த தந்தையை தனியே விட்டு விட்டு படுக்கை அறையை நோக்கி ஓடினாரே அந்த மறக்க முடியாத இரவு. 'தன்னைத் தானே அடக்கிக் கொள்ள வேண்டும்' என்று எண்ணம் தோன்றிய இரவு!

இன்றோ! இந்த இரவோ!'பிறர் நம்மை அடக்கக்கூடாது' என்ற எண்ணம் உருவான இரவு! சுயநலத்திற்காக வெளி நாடு சென்று, பொதுநலவாதியாகத் திரும்பினார் காந்தி. சொந்தக் குடும்பத்தின் வறுமையைப் போக்கச் சென்றவர், சமூகத்தில் சிறுமையைப் போக்குவதில் முனைந்து விட்டார். இனி அவர் வாழ்க்கையே ஓர் ஓயாத பேராட்டம் தான். இனி காலமெல்லாம் இந்தப் 'போர் வீரருக்குத் துணைவியாக வாழ்ந்தாக வேண்டும் கஸ்தூரி. அந்த வாழ்க்கையின் துவக்கத்தில் இவ்விருவர்களுக்குள் ஏற்பட்ட போராட்டம் தான் இனித் தொடரப் போகும் கதை.

காந்தி தென்னாபிரிக்காவிலிருந்து திரும்பி வந்த பிறகு அவரிடம் ஒரு பெரும் மாறுதலைக் கண்டாள் கஸ்தூரி. முன்புபோல் அவள் காலைச் சுற்றிச் சுற்றி வரவில்லை அவர். அவளிடம் வீண் பேச்சுக் கொடுத்து வாக்குவாதத்தை வளர்க்கவுமில்லை. எப்போதும் ஆழ்ந்த சிந்தனையில் இருந்தார். இரவு நேரத்தில் கூட எதையாவது படித்துக் கொண்டிருந்தார். படிக்காத போது எதையாவது எழுதிக் கொண்டிருந்தார் .கணவனின் சிந்தையில் அப்போது குடிகொண்டிருந்த அந்த முக்கியமான விஷயம் என்னவென்று கஸ்தூரிக்குத் தெரியாது.

ஒரு நாள் காந்தி தன்னைச் சுற்றி சில சிறுவர்களை உட்கார வைத்துக் கொண்டு நூற்றுக்கணக்கான துண்டுப் பிரசுரங்களை மடித்து, தபால் தலைகள் ஒட்டிக் கொண்டிருந்தார். அதைப் பார்த்த கஸ்தூரி ''இதெல்லாம் என்ன?" என்று கேட்டாள்.

''துண்டுப் பிரசுரங்கள். நான் எழுதியவை."

''வக்கீல் தொழில் நடத்த இதெல்லாம் எழுத வேண்டுமா? யாருக்கு அனுப்பப் போகிறீர்கள்?"

''அட பைத்தியம்! வக்கீல் தொழிலுக்கும் இதற்கும் சம்பந்தமில்லை. தென்னாபிரிக்காவில் இருக்கும் இந்தியர்கள் படும் கஷ்டங்களையெல்லாம் இதில் எழுதியிருக்கிறேன். இந்தியாவிலுள்ள பத்திரிகைகளுக்கும், பெரிய மனிதர்களுக்கும் இதைஅனுப்பப் போகிறேன். அவர்களுடைய ஆதரவை நாடப்போகிறேன்."

''அவர்களுடைய ஆதரவு எதற்கு?"

''தென்னாபிரிக்க சர்க்காருடன் போராட்டம் நடாத்துவதற்காக."

''ஐயோ! சர்க்காருடன் போராடப் போகிறீர்களா? உங்களுக்கென்ன பயித்தியமா பிடித்திருக்கிறது. அங்கு வக்கீல் தொழில் தானே நடத்தப் போனீர்கள்?. ஏன் ஊர் சண்டையையெல்லாம் இழுத்து உங்கள் தலையில் போட்டுக் கொள்கிறீர்கள்?"

தாம் மேற்கொண்டிருக்கும் உன்னத பணியைப் பற்றி கஸ்தூரிக்கு புரிய வைக்க பெரும்பாடு பட்டார் காந்தி. ஆனால் அவளுக்கு எதுவுமே விளங்கவில்லை. 'கணவன் வேலை செய்து காசு சம்பாதிப்பான். மனைவிக்கு வேண்டியதை வாங்கிக் கொடுப்பான். சில சமயம் சண்டையும் போடுவான். உள்ஊரில் பிழைக்க முடியா விட்டால் வெளியூர் சென்று சம்பாதித்துக் குடும்பத்துக்கு பணம் அனுப்புவான்' என்று தான் அவள் அறிந்திருந்தாள். தன் கணவரும் அப்படித்தான் இருப்பார் என்று மனக் கோட்டை கட்டியிருந்தாள். ஆனால் அவரோ, குடும்பத்தை மறந்துவிட்டு ஊருக்காக பாடுபடப் போவதாகச் சொல்கிறார். ''அதென்னமோ, எல்லாமே எனக்கு விநோதமாகத் தான் வாய்த்திருக்கிறது. அது என் தலையெழுத்து" என்று இடிந்து போய் உட்கார்ந்து விட்டாள் அவள்.

அவள் மனம் படும்வேதனையை அவள் முகத்தில் கண்ட காந்தி, ''இதோ பாரு கஸ்தூரி, நான் தென்னாபிரிக்காவில் பாரிஸ்டராகப் பதிவு செய்து கொண்டிருக்கிறேன். நல்ல வரும் படியும் வருகிறது. இன்னும் ஆறு மாதத்தில் நாம் அங்கேயே போய் விடலாம். உனக்கு ஒரு குறையும் இல்லாமல் 'ஜாம் ஜாம்' என்று குடித்தனமும் நடத்தலாம்" என்று உற்சாகப்படுத்தினார்.

''ஆமாம்! ஆறு மாதம் இங்கே என்ன செய்யப் போகிறீர்கள்? ஸ்டாம்ப் ஒட்டுகிற வேலை தானா?"

''ஐயோ, ஜடமே! ஊர் ஊராகச் சுற்றப் போகிறேன். பம்பாய், பூனா, மதறாஸ், கல்கத்தா எல்லா இடங்களுக்கும் போய், பெரிய மனிதர்களைச் சந்திக்கப்போகிறேன். மேடையேறிப் பேசப் போகிறேன்."

'அதைக் கேட்ட கஸ்தூரி புன்முறுவல் பூத்தாள். அதில் பரிகாசம் பளிச்சிட்டது.

அது காந்திக்கும் புரிந்து விட்டது.

இன்னும் என்னைப் பழைய மோகன்தாஸ் என்று நினைத்துக் கொண்டிருக்கிறாயா? என்னிடமிருந்த பயமும், கூச்சமும் ஓடி மறைந்து விட்டது. கூட்டத்திற்கு வந்து பார், நான் எப்படிப் பேசுகிறேன் என்று."

என்ன கூட்டமோ என்று சலித்துக் கொண்டாள் கஸ்தூரி. கூட்டத்திற்கு ஏற்பாடு செய்ய சென்ற காந்தி ராஜ்கோட்டிற்கு வரும் போது தன் சகோதரியையும், நோய்வாய்ப்பட்டிருந்த அவளுடைய கணவனையும் உடன் அழைத்து வந்தார். அவருக்கு அல்லும் பகலும் பணி விடைகள் செய்தார். நோயாளியைக் கவனித்துக் கொள்வதுடன் பிரசங்கத்தைத் தயார் செய்யும் பொறுப்பும் சேர்ந்து கொண்டது. வேலை மிகுதியால் சோர்ந்து போனார் காந்தி. பிறருக்காகத் தன்னை வருத்திக் கொள்ளும் கணவனைக் கண்டு உருகிப் போனாள் கஸ்தூரி.

ஒரு நாள் சகோதரியின் கணவர் திடீரென்று கண்ணை மூடி விட்டார். காந்தியின் குடும்பத்தில் மற்றொரு மரணம். சகோதரியின் துயரைக் கண்டு துன்பப்பட்டார் காந்தி. அவளுக்கு ஆறுதல் சொல்லும்படி கஸ்தூரியைப் பணித்தார். மறுநாளே பம்பாய்க்குக் கிளம்பி விட்டார் தம் பணியை நோக்கி.

அன்றுதான் அவருடைய சொற்பொழிவுக்கு ஏற்பாடாகியிருந்தது. கண்ணீருக்காக கடமை காத்திருக்கிக்க முடியாது! ராஜ்கோட்டில் மரணச் சடங்குகள் நடந்தாலும், பம்பாயில் மக்கள் குரல் ஒலித்தேயாக வேண்டும்! கஸ்தூரி சிந்தித்தாள். ''இவருக்கு ரத்த பாசமே கிடையாதா? குடும்ப பற்றே

பரணீதரன்

போய்விட்டதா? இவருடன் எப்படித்தான் குடித்தனம் நடத்தப் போகிறேனோ?

இப்படி நாட்டில் பிரசாரம் செய்து கொண்டிருந்தவருக்கு தென்னாபிரிக்காவிலிருந்து அவசர அழைப்பு வந்தது. உடனே புறப்பட்டாக வேண்டும். தன் குடும்பத்தையும் நேட்டாலுக்கு அழைத்துப் போக முடிவு செய்தார் காந்தி. எத்தனை நாள் தான் சகோதரனுக்குச் சுமையாக இருப்பது?

கணவன் அழைத்ததும் மூட்டைகட்ட ஆரம்பித்து விட்டாள் கஸ்தூரி. 'அது எப்படிப்பட்ட இடம்? எல்லா சௌகரியங்களும் இருக்குமா? என்று கூடக் கேட்கவில்லை அவள்.'கணவன் இருக்குமிடம் தான் சொர்க்கம்' என்று பாரதப் பெண்களுக்கு வழி காட்டுவதற்காக கணவனுடன் கானகம் சென்ற சீதையின் மரபில் வந்த மனைவியல்லவா கஸ்தூரி.

காந்தி வந்த மரபும் அப்படிப் பட்டதுதான். அன்று, மன்னவன் கொடுத்த வார்த்தையைக் காப்பதற்காகக் காட்டிற்குச் சென்றார் அந்த தர்மசீலர். இன்று, மக்கள் உரிமையைக் காப்பதற்காகக் கடல் கடந்து சென்றார் இந்தக் கர்மவீரர். பயங்கர மிருகங்களும் கொடிய ராட்சதர்களும் மண்டிக் கிடந்த காட்டில் பதினான்கு வருடம் வாழச் சென்றான் தசரதராமன். பயங்கர நிற வெறியும் கொடிய அடக்கு முறையும் தாண்டவமாடும் நாட்டில் பதினாறு ஆண்டுகள் வாழ்ந்து விட்டு வந்தார் மோகன்தாஸ் காந்தி. கற்பனையையெல்லாம் கடந்து விட்ட ஒற்றுமை! அன்று, ஜானகி கணவனுடன் தனியாகப் போனாள்.

(தொடரும்)

## சிந்தனையாளரின் சுவையான அனுபவங்கள்

### கட்டுக் கதைக்கே சிறப்பு

எட்மண்ட் வாலர் என்பவர் ஒரு சிறந்த ஆங்கிலக் கவிஞர். அதனால் மிகுந்த கீர்த்தியும் அரசாங்கத்தின் மதிப்பையும் வெகுவாகப் பெற்றிருந்தார்.

ஆலிவர் குரோம்வெல் அப்பொழுது பிரிட்டனின் சபாநாயகராக இருந்தார். அவர் மீது அரிய கவிதையொன்றை எழுதியிருந்தார். எட்மண்ட் வாலர்.

அதன் பிற்காலம் வந்த இரண்டாம் சார்லஸ் மன்னர் மீதும் இவர் ஒரு வாழ்த்துப் பாமாலை பாடினார்.

அன்று அரசவைக்கு கவிஞர் வந்திருந்தார். அவரைப் பார்க்க மன்னருக்கு மிகவும் மகிழ்ச்சியாயிருந்தது. ''நீங்கள் என்மீது பாடிய கவிதையை விட ஆலிவர் குரோம்வெல் மீது பாடிய கவிதை மிகவும் சிறப்புடை யதாக இருந்தது'' என்று கூறினார் மன்னர் சார்லஸ்.

அதைக் கேட்ட கவிஞர் வியப்படைந்தார். உடனே அந்தச் சூழ்நிலையை சமாளிக்க மிக்க பணிவுடன்'' ஆம் அரசே! கவிஞர்கள் எப்போதும் உண்மையை விடக் கட்டுக்கதை களையே மிகைப் படுத்தச் செய்வார்கள்.'' என்று பதிலளித்தார்.

சார்லஸ் மன்னர் அதைக் கேட்டு மிக்க மகிழ்ச்சிய டைந்தார். அவர் முகம் மலர்ந்தது.

### கவிஞரின் குழந்தையுள்ளம்

குழந்தைகள் என்றால் அவருக்கு உயிர். அவர்களோடு உல்லாசமாக விளையாடிக் களிப்பதில் அவர் தமது பெரும் பகுதி பொழுதைக் களிப்பர். அப்படி அவர் விளையாடும் குழந்தைகளோடு குழந்தையாக தாமும் ஆகிவிடுவார்.

அவர்தான் சூரியகாந்த் திரிபாடி. சிறந்த கவிஞர். அநேக நூல்கள் எழுதியுள்ளார். நிராலா என்ற புனைப்பெயரில் அருமையான கவிதைகள் எழுதிவந்தார்.

ஒருநாள் அவரைத் தேடி சிலர் அவரது வீட்டை நோக்கி வந்தனர். ஆனால் அவர்கள் 'நிராலா'வை முன்பின் பார்த்தது கிடையாது. அப்பொழுது அவர் குழந்தைகளோடு கோலி விளையாடிக் கொண்டிருந்தார். ''இத்தனை பெரிய ஆள் குழந்தைகளோடு விளையாடுகிறாரே!'' என்று பலமாய் முணுமுணுத்துக் கொண்டே ''ஐயா! கவிஞர் 'நிராலா' வீட்டைக் காட்ட முடியுமா?" என்று கேட்டார்கள்.

''இதோ இந்த வீடுதான்!'' என்று எதிர்வீட்டைக் காட்டி விட்டு, ஆட்டத்தில் மீண்டும் மும்முரமாய் இருந்தார். எப்படியும் ஜெயித்தாக வேண்டுமே!

அவர்கள் அவ்வீட்டில் நுழைந்து முன் ஹாலில் உட்கார்ந்தார்கள். நிராலா ஆட்டத்தை முடித்துக்கொண்டு, நேரே உள்ளே சென்றார். கை கால்களை அலம்பி, துடைத்துக்கொண்டே அவர்களிடம் வந்தார். ''நான்தான் நிராலா!" என்றார்.

''என்ன நீங்களா! வெளியே கோலி விளையாடிக் கொண்டிருந்தீர்களே!'' என்று வியப்படைந்தார்கள்.

''ஆமாம்! அப்பொழுது-நான் சிறு பையனாக இருந்தேன். இப்பொழுதுதான் கவிஞர் நிராலாவாக உங்கள் முன் நிற்கிறேன்'' என்றார். என்ன சாதுர்யம்!

# மௌனத்தின் தேடல்கள்

### வாழ்க்கைப் பாதை!
பிஞ்சுக் கரங்கள் வக்கிரம் அடைய
வாழ்க்கைப் பாதையில் – ஓர் குஞ்சு
குடம் ஏந்தி நடப்பதை
பாரீரோ!...

J. தனேஸ்,
நல்லூர்.

### தளராதே!
பாட நூல் சுமந்து
பள்ளி செல்லும் வயதில்
தோளில் சுமையுடன்
தடம் பதிக்கும் - தளிரே
தளர்ந்து விடாதே!
தன்கையே தனக்குதவி.

து.திருநாவுக்கரசு,
கொழும்புத்துறை.

### நீயோ!
தாய் தோளில் நீயிருக்கும் நேரம்
உன் தோளில் நீர் இருக்கு
ஓ.....
தந்தையை இழந்த
தற்போதைய குடிசையின்
தலைவன் நீயோ?

சி.யசிந்திரன்,
ஆனைப்பந்தி

### மாறவில்லை!
தடை நீக்கமும்,
பாதை திறப்பும்,
நிகழ்கையில் - உன்
'பாட்டா' இல்லா காலும்,
பள்ளி செல்லா நீயும்,
மாறவே இல்லையே!

அனலையூரான்.

### மாற்றங்கள்!
காட்டில் வாழும் தம்பி
கலங்காதே நீ வெம்பி - இனி
நாட்டுக்கு வரலாம் நம்பி
நடு வீதியில் இருக்காது கம்பி.

மதி
மிருசுவில்

### சகோதரனே.....!
ஓ சகோதரனே!
உன் நடையிலே
ஏன் இந்த தளர்வு
குடிசை நெருங்கி விட்டது
என்ற உணர்வா? இல்லை
புயத்திலிருக்கும் சுமையினால்
உண்டான பிரதிபலிப்பா?

பா. வனஜா,
இருபாலை.

### தீர்ப்பு!
பையப் பைய நடைபயின்று
பள்ளி செல்லும் வயதினிலே
கால்கள் துவள நீ நடந்து
தண்ணீர் சுமந்து செல்வது
காலத்தின் தீர்ப்பா?

இ. ரேணுகா

### விடிவு!
தாய்மடியில் படுத்துறங்கும்
தளிர் இங்கே
பாசங்கள் மறந்து
பிஞ்சுக் கரத்தினால்
சுமைகளைச் சுமக்கின்றது
சரித்திரம் படைத்து
வித்தகராய் வாழ
ஏழைகளின் வாழ்வில்
எப்போது விடிவு?

நா. பாரதி,
யாழ்ப்பாணம்.

### சுமை தாங்கி!
பள்ளி செல்லும் வயதில்
துள்ளி விளையாட
இவனுக்கு முடியவில்லை
இவனொரு சுமைதாங்கியோ..?

எஸ். சந்தியா,
யாழ். பல்கலைக்கழகம்.

### சுமைகள்!
வறுமையின் அகதியாய்
பிறந்ததனால்
புத்தகப்பை சுமக்க
வேண்டிய இவன் தோள்கள்
தண்ணீர்க் கலன் சுமக்கிறது.

V.ஜெயந்தி,
திருநாவலூர்.

### இன்னும் எத்தனையோ?
சுமைதாங்கிகள்
தூர்ந்து போனதால் – தூங்காது
தாங்குகிறான்
இவன் என்ன
இவன் போல் – இன்னும்
எத்தனை! எத்தனை....!!

சமரபாகு,
பழமுதிர்ச்சோலை.

### அல்லல் படும் வாழ்க்கை!
ஆரணியின் நடுவே
ஆட் கொள்ளா வீடு தனில்
ஆண்டவனின் விதிப்படி
அல்லல் பட உன் வாழ்வை
எழுதினானோ பிரம்மன்?

R.கிருஸ்ணவேணி
நல்லூர்.

### குட்டித் தம்பியே...!
குடிசையிலே வாழுகின்ற
குறும்புத்தன குட்டித் தம்பி
ஏடெடுத்துப் படிக்கலையோ
ஏற்றம் காண விரும்பலையோ
உறுதியாக நீ இருந்தால்
உயர்வு தனைக் கண்டிடலாம்

இ.அ. அமலரட்ணம்

### காடு நடுவே!
யுத்தம் உன்னை
தூர விரட்டியது
வறுமை உன்னை
வாட்டுகின்றதே!
இருந்த போதும்
வரட்சியும் உன்னை
காடு நாடுவே
அலைய வைக்கின்றதே
சின்னவனே!

க. சித்தா,
அளவெட்டி.

### மாறாதா சோகம்!
தோளினில் நீர்ச்சுமையுடன்
தளர்ந்து நடக்கும் தம்பியே!
மாறாத சோகமும்
மாளுமே ஓர் நாள்,
சோராதே நீயும்
துணிந்து வாழ்.

செ. ஹேமலதா,
ஸ்ரான்லி வீதி.

### ஊழியன்!
சின்னவன் உன்னை சிதைத்தது யார்?
சுமைகளை உன்னில் சுமத்தியது ஏன்?
முகம் காட்ட மறுக்கும் உன் முகவரி என்ன?
ஊரறிய உன்னை ஊழியன் ஆக்கியதேன்?
பாரம் தூக்குவதை நிறுத்து! பள்ஷி செல்!
அறிவைச் சுமந்து அகிலமெல்லாம் வாழ்ந்திடு.

வாசகன்.



### எங்கு செல்கிறாய்?
கதிரோன் கனல் கதிர் வீச
உன் பிஞ்சுப் பாதங்கள்
மண்ணுடன் மௌனமொழி பேச
கொள்கலன் நீர் சுமக்க
கொள்கலனை நீ சுமக்க
எந்த இடம் நோக்கி
செல்கிறாய்.....?
உன் தாக சாந்தியை
தீர்த்துக் கொள்ள...!

யோ. பிரஷாந்தி,
யாழ்.பல்கலைக்கழகம்.

### துன்பச் சுமை!
தோள்களில் நீரின் சுமை
மனதில் துன்பத்தின் சுமை
கால்களில் வலியின் சுமை
கண்களில் தேடலின் சுமை
மொத்தத்தில் இவன் ஒரு
சுமைதாங்கி.

ச. தமிழினி,
வழக்கம்பரை.

### கவலைச் சுமை!
பிஞ்சு வயதிலும்
நெஞ்சில் உரம் கொண்டு
இவன் சுமந்து செல்வது
தண்ணீர் நிரம்பிய கலன்
மட்டுமல்ல
கண்ணீரால் நிரப்பப்பட்ட
கவலைகளையும் தான்.

திருநாவலூரான்.

### கண்மணியே கலங்காதே!
கண்ணீர் தேசத்தில்
தண்ணீர் சுமந்து செல்லும் சோதரனே
எண்ணிய படி நீ வாழ
மண்ணில் விடிவு வந்து விடும்
கண்மணியே கலங்காதே.

V.சுகா,
திருநாவலூர்.

### அதுவரை நட!
காலிலே செருப்பும்
மேலிலே சட்டையும் இன்றி
தோளிலே சுமையும்
நெஞ்சிலே கனவும் வைத்து
நடந்து செல்லும் சிறுவா!
உன் துன்பம் வெகு தூரமில்லை
அதோ தெரிகிறது - உன்
சுமையின் எல்லை
அதுவரை நட.

ச. நிமால்சங்கர்,
அரியாலை.

### அகதி வாழ்வு!
கண்ணீரே வாழ்வாக
தண்ணீரே உணவாக
எண்ணிலாத் துயரோடு
அகதி என்ற பெயரோடு
மண்ணிலே நடக்குது
பையன் இவன் வாழ்வும்.

த. அஜந்தகுமார்,
யா.நெ.ம.ம.வி.

### நீருடன்!
அப்பா ஆழ்கடல் உவர் நீருடன்
அதை ஆற்றாது அம்மா கண்ணீருடன்
தேனீர் கேட்ட உடன் பிறப்புகளை
ஏமாற்ற நான் குடி நீருடன்

ந. வினோதரன்,
ஒட்டுவெளியூர்.

### காத்திரு!
இன்று வரை சுமைதூக்கும் இளம்பிஞ்சே
வறுமையென்று ஒரு நிலைமை
உனக்கு உண்டா இந்நிலைமை
உனக்கு அல்ல பலருக்குத்தான்
இக்காலம் மாறியொரு புதிய காலம்
வரும் வரையில் நீயும்தான் காத்திரு.

ச.நிரஞ்சினி,
சங்கத்தானை.

### கொடுமை!
புத்தகம் சுமக்கும் உன்கைகள் தண்ணீர்
சுமக்கும் கொடுமை
தாயின் அரவணைப்பில்
மழலை பேச வேண்டிய இளம்பிஞ்சு
சுட்டெரிக்கும் சூரியனில்
வெதும்பும் நிலை
இந்தக் கொடுமையில் இருந்து
எப்போது விடிவு.

ச.யமுனா,
திருநெல்வேலி.

### எதிர்காலம்!
குண்டுச் சருவத்தில்- நீர்
மொண்டு கொண்டு - உந்தன்
பண்டைக் குடிசையினுள் - போகும்
வண்டுப் பயலே - நீ இளங்கன்று
சிலகாலம் பொறுத்து
நின்று வாழ்ந்து விடு
நன்றே சிறக்கும் உன் எதிர்காலம்.

கோகிலா
சுதுமலை

### நாளை!
பிஞ்சுப் பாலகனே!
இன்று நீர் சுமக்கும் நீ
நாளை நிச்சயம் ஒரு
குடும்பத்தின் நல்லதொரு
சுமைதாங்கியே.

சி.நேர்த்திகா,
ஆனைப்பந்தி.

### உறவுகள்!
புத்தகம் சுமக்க வேண்டிய - நீ
தண்ணீர்க்கலம் சுமப்பது
தயவே இல்லா மனிதர்களாலா?
இல்லை
தளர்ந்து வாடும் உறவுகளாலா?

இ. ஷோபனா,
வேலணை.


### பாவி நீ !
ஏடு சுமந்து தோழருடன்
விளையாடும் வயதினிலே!
அன்றாட வாழ்க்கைச்
சுமையுடன்
வீறு நடை போட்டு
பாழுற்ற வீடு செல்லும்
பாவியடா நீ!

இ.வணிகலாதன்,
புத்தூர்.

### காலத்தின் கோலம்!
காலத்தின் கோலத்தால் ஏற்பட்ட இடப் பெயர்வில்
சிறுவனே நீயும் ஆட்கொள்ளப் பட்டாயோ? குடிசைக்கு
உன் பிஞ்சுக் கால்கள் கடுகடுக்க சுமக்கும் தண்ணீர்
தாகம் தீர்க்குமா? இந்த அனாதையின் சுமையை
இறக்க யார் வருவாரோ? இறைவா நீதான் பதில் கூறு.

செ. மாலினி,
கொழும்புத்துறை.

## மௌனத்தின் தேடல்கள் – 10



அன்பின் வாசகர்களே, உங்கள் எண்ணத்தில் தோன்றும் உன்னத் வெளிப்பாடுகளை மிகச்சிறிய கவிதைகளாக்கி தபால் அட்டையில் சங்குநாதத்திற்கு அனுப்பிவையுங்கள்.

முடிவுத்திகதி :– 05.05.2002

அனுப்ப வேண்டிய முகவரி:– மௌனத்தின் தேடல்கள் – 10
சங்குநாதம்,
15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

# கவிதைக் கலசம்




## விதை புதைந்தே விருட்சம்!

வெற்றிக் கொடி நாட்டிடவே
அடம்பன் கொடியாய் சேர்ந்துவிடு
அன்றாடம் போராட்டம்
அதுநம் பூமித்தாய் தாலாட்டாம்
இது முடியாத வரைக்கும் – நமக்கு
விடியாத நதியோட்டம்


கோடிகள் கொடுத்தாலும்
கூடி வரா நிம்மதியை
தேடித்தான் பார்த்தோமே
நாடி வரக் காணோமே
ஆடி யடங்கும் இந்த யாக்கை
ஓடி யொளிந்தால் இல்லை வாழ்க்கை

கண்ணீரின் இரவுகள்
கரைந்து போகட்டும்

பன்னீர் மணித்துளிகள்
விடியலில் தூவட்டும்
வாழ்க்கை என்பது – ஒரு
பூந்தோட்டம் ஆகட்டும்

வியர்வைத் துளிகளால் தான்
மண்ணும் பண்படும்
முட்களின் நடுவே தான்
ரோஜாக்களும் மலர்ந்திடும்
பாறைகளைப் பொழிந்திடத்தான்
சிற்பங்களும் சிரித்திடும்
விதைகள் புதையுண்டுதான் – புது
விருட்சங்களும் நிமிர்ந்திடும்.

ரி. றொட்றிக்கோ
கொக்குவில்




மலர்களே நீங்கள்
மலருங்கள் !
பெண்களின் கூந்தலுக்காக
அல்ல
மாவீரர்களின் கல்லறைக்காக

குயிலினங்களே நீங்கள்
கூவுங்கள்
இதய இராகங்களை அல்ல
எம் வீரர்களின் புகழை

தென்றலே எம் தேசம்
நோக்கி வா
அவலத்தை சுமந்து செல்ல
வல்ல
அண்ணனின் வியர்வை போக்க
கடலலையே
கரையை நோக்கி வா
காதலர்களுக்காக அல்ல
எம் வீரர்களின் கால்களை
நனைக்க

புயலே எம் தேசம் விட்டுப்
போ
பேரினவாதிகளின்
அட்டூழியங்களை மட்டுமல்ல
போர் அபாயங்களையும்
கொண்டு செல்.

சுபா,
சண்டிலிப்பாய்.

## மணமகளிடம்...




அழகு இருக்கனும்
அறிவு இருக்கனும்
அழகான ஒரு வீடுஇருக்கனும்
நகை இருக்கனும்
கார் இருக்கனும்
நல்ல சம்பள உத்தியோகம்
இருக்கனும்
படிப்பு இருக்கனும்
நிறம் இருக்கனும்
பார் போற்றும் மதிப்பு
இருக்கனும்
பெண் பார்க்கனும்
சம்மந்தம் கலக்கனும்
கேட்டது அனைத்தும்
கையில் கிடைக்கனும்
நாள் பார்க்கனும்
திகதி குறிக்கனும்
பொருள் வந்ததும்
தாலி கட்டுவான்.

ச. சுபோதினி,
மானிப்பாய்.

## கலந்திருக்க மாட்டேனா?

உன் ஜன்னல் ஓரத்துக்
காற்றாக
மழைத் துளியாக - உன்
போர்வைக்குள் சிக்கிக்
கொண்ட மூச்சாக
உன் உறக்கத்தில் வரும்
உரையாடலாக
கலந்திருக்க மாட்டேனா




வட்டநிலா நீயாக
உன்னை உரசும் முகிலாக
அலையே நீ வந்து பேச
கரையாக
பாதத்தை முத்தமிடும்
கொலுசாக
காகிதமெங்கும் கவிதையாக
கலந்திருக்க மாட்டேனா

நீ படிக்கும் அறை விளக்காக
நெத்திக்கு கையாக
பேனைக்கு மையாக
உன் ரசனைக்கு நிலவாக
நீ பறித்தெடுக்க மலராக
உன் கூந்தலுக்கு தினம் ஒரு
பூவாக
கலந்திருக்க மாட்டேனா.

தி. பரணிபாரதி

## மௌனத்தைக் கலைப்பாயா?



உன்
இதய அறைகளில்
ஓரிடம் தேடி....
என் இதயம்
உனக்காக
துடித்துக்
கொண்டிருக்கிறது...!

என் வானில்
சிட்டுக் குருவிகள்
சிறகடித்துப் பறப்பதற்கு
உன்
புன்னகை ஒன்று தான்
காரணமே...!

நேற்றுவரை
சுமையாக இருந்த
வாழ்க்கைத் தேடல்கள் -
இன்று
உன்
கண்கள் சந்தித்த
கணம் இருந்து
சுகமாக அல்லவா
இருக்கின்றது

என்
சுவாசக் காற்றே!
என்னைத்
தவிக்கவிடாமல்
உன்
மௌனத்தைக்
கலைப்பாயா?

ஆ. டின்ஸ்ராஜ்,
இராசாவின் தோட்டம்.

## கூடப்பிறந்த உறவின் வடிவில்!



அம்மா என்று எழுத்துக்கூட்டி
உச்சரித்த வேளை
என் எதிரில்
இல்லை அவள்!
கல்லறைக்குள் தூங்கினாள்.
தனிமை என்னை
தத்தெடுத்தது
அப்பொழுது கூட இருட்டின்
கர்ப்பத்தில் நான்
சோகம் நிறைந்த
கண்ணீர் என் எச்சிலை
ருசியாக்கியது
அழுகையின் அந்தப்புரத்தில்
என் வார்த்தைகள்
அடைகாத்தன.

அந்த ஆண்டு இருட்டின்
கர்ப்பத்தில்
இருந்தது!
என் வீட்டுப் பூக்கள்கூட
கல்லறைகளின் அர்ச்சனைக்கு
ஆசைப்பட்டன
எனது அன்னை என்ற
தெய்வத்தை
மௌனமாய் திருடியது
மரணம்!

அப்பொழுதுதான் சூரியோதயம்
சொப்பனத்தில் மீண்டது.
வந்தது அருகே!
தத்தெடுத்தது என்னை
கூடப்பிறந்த
உறவின் வடிவில்.

அன்ரனி நிரோஜிகன், மாகியப்பிட்டி.

## ஏன் மறந்துவிட்டாய்?



உன் உறவினை மட்டும்
ஏன் உச்சமாய் நினைத்தேன்?
விடையே தெரியாத
சிறு பறவை நான்
வாழ்க்கையின் ஆரம்பப் படிகளில்
கால் வைக்க கற்றுத் தந்தவனே
மீதிப் படிகளைத் தாண்ட - ஏன்
கைகொடுக்க மறந்து விட்டாய்?


நான்
வாழ்க்கையின் ஆரம்பத்துக்கு
முடிவுரை எழுத கஸ்ரப்படவில்லை
வெற்றி வானம் தொட்டு
மகிழ்வாய் ஒரு வரி எழுதவே
ஆசைப்பட்டேன்...!

தென்றலை ரசிப்பவள் நான்
புயலைத் தொட்டதில்லை-என்
பேனா முனையிடம் கேட்டுப்பார்
என் கதை அது சொல்லும்
ஓராயிரம் உறவுகளுக்குள்
நட்புடன் நீந்துபவள் தான்
ஆனாலும்...

அ. தர்சினி,
கந்தர்மடம்.

## உனக்காக!

உன்னில்
நான் வைத்துள்ள அன்பு
உண்மையானதென்றால்
உன்னையே மறந்து விடும்படி
நீ ஏன் கேட்கிறாய்
என்னிடம்!



உனக்காக – நான்
என் உயிரையும் கொடுப்பேன்
என்ற
என் பலவீனத்தையே அறிந்த
திறமைசாலி நீ!


இதோ!
உனக்காக
உன்னையே இழக்கின்றேன்
கூடவே
இந்த ஏழையின் உயிரையும்...!

சிவா . சசிகாந்

## சந்திப்பு!

மீண்டும் மீண்டும்
உனது கண்களும்
எனது கண்களும்
சந்தித்துக் கொள்கின்றன
சந்தித்த மறுகணமே
உனது கண்கள் திசை
மாறிப் போகின்றன
அது
என் மேல் கொண்ட வெட்கமா?
அல்லது
என் மேல் கொண்ட
வெறுப்பா?

ராகுல்



# விம்பங்களின் மூலம்

## சிறுகதை

இ.முரளிதரன்

புதுப்பெண் தன் கணவரிடம் சிணுங்குவது போலச் செல்லமாகச் சிணுங்கியது அந்தத் தொலைபேசி. அப்போது தான் வேலை முடிந்து வந்து கண்ணயர்ந்த ஜெகன் 'உல்லன் போர்வையிலிருந்து தலையை மட்டும் விடுவித்துக் கொண்டு தொலைபேசியை ஒரு எரிச்சல் பார்வை பார்த்துக் கொண்டிருந்தான். அவனது அந்தப் பார்வையை 'அது அலட்சியம் செய்தவாறே தொடர்ந்து சிணுங்கிக் கொண்டிருந்தது.

போர்வைக்குள்ளாலேயே கையைச் செலுத்தி ரிசீவரை காதுகளில் பொருத்தியவனுக்கு எரிச்சல் போய் புகைச்சலாக மாறியது.

''ஹலோ கோல் புறம் ''யப்னா'' என்ற கொமினிகேசன் பெண்ணின் குரலைத் தொடர்ந்து, ''ஹலோ ஜெகன், அக்கா விமலா கதைக்கிறேன் அந்த நம்பருக்கு உடனே கோல் எடு'' மறு முனையில் ரிசீவர் அவசரமாகச் சாத்தப்படும் ஓசை பெரிதாகக் கேட்டது.

'ச்சீய் இதுகளோட பெரிய கரைச்சலாய்ப் போச்சு', சலித்துக் கொண்டான் ஜெகன். மெல்லிய வெளிச்சத்தில் மேசையைப் பார்த்தான், அங்கே முப்பது நிமிடங்களுக்கு வெளி நாடுகளுக்கு தொடர்பினைப் பெறக் கூடிய தானியங்கி தொலைபேசிக்கான அட்டை அவனைப் பார்த்து 'நான் ரெடி' என்று தகவல் சொல்லிக் கொண்டிருந்தது.

''என்ன அலுவலாக இருக்கும். போன கிழமை தானே காசு அனுப்பேலாது என்று சொன்னனான், பிறகேன் இப்ப எடுக்கிறார்கள். அக்காவிற்கும், தங்கைகளுக்கும் உழைச்சு கலியாணம் செய்து கொடுத்திட்டன், இப்ப என்னடா என்றால் அவையின்ரை பிள்ளைகளின்ரை பிறந்தநாள், பூப்புனித நீராட்டு விழாக் கொண்டாட்டங்களுக்கும் காசு அனுப்ப வேண்டியிருக்கு, ஆனால் நான் மட்டும் இன்னும் தனிமரமாக......?'' ஜெகனின் சிந்தனை ஓட்டங்கள் கடிகாரத்தின் ரீங்காரத்தினால் தடைப்பட்டது.

நேரத்தைப் பார்த்தான், நேரம் அதிகாலை இரண்டு மணி.

''பொறுங்கோ ஒரு பத்து நிமிடம் இருந்து பாருங்கோ, ஏனென்றால் இப்பவெல்லாம் வாறாது கொஞ்சம் கஷ்டம் சிலநேரம் அதிஷ்டவசமாக உடனே கிடைத்துவிடும்' என்று கொமினிகேசன் பெண் சமாதானப்படுத்திக் கொண்டிருந்தாள். மேசையிலிருந்த தொலைபேசி திடீரென அனுங்கியது, உடனே உற்சாகம் விமலாவினைத் தொற்றிக் கொண்டது. ''அக்கா உங்களுக்குத்தான்....'' கொமினிகேசன் பெண் சொல்லி முடிப்பதற்குள் தொலைபேசிக் கூட்டினுள் தன்னை நிரப்பிக் கொண்டாள் விமலா.

''ஹலோ! நான் ஜெகன் கதைக்கிறேன், அக்கா போன கிழமைதானே சொன்னனான் இப்ப காசுக்குத் தட்டுப்பாடு அனுப்பேலாதென்று, பேந்தேன் தொடர்ந்து தொல்லைதாறியள்'' தனது மனக் கடுப்பினை ஒரே மூச்சில் வெளிப்படுத்தினான் ஜெகன். ஜெகனின் கத்தலில் கலங்கிப் போன விமலா ஒருவாறு தன்னைச் சுதாரித்துக் கொண்டு பேசத் தொடங்கினாள்.



''என்னடா இப்பிடிக் கதைக்கிறாய், நானென்ன இப்ப காசுக்கே கோல் எடுத்தனான், உன்ரை பெரிய காசு, உனக்கு ஒரு கலியாணம் பேசி முற்றாக்கிப் போட்டு அதைப் பற்றிக் கதைக்க வந்தால் நீ இப்படிக் கதைக்கிறாய்'' இவ்வார்த்தைகளைக் கேட்டதும் தானியங்கித் தொலைபேசிக் கூட்டிலிருந்த ஜெகன் தனது தடித்த ஸ்வெட்டர் ஊடாகதன் கையினை மெலலக் கிள்ளிப் பார்த்துக் கொண்டான். அட இது நிஜம்தானா? நாற்பது வயதாகியது இப்போது தான் இவர்களுக்கு விளங்கியதா? இல்லை பிறந்த திகதி இப்போது தான் ஞாபகம் வந்ததா? இன்பமயமான ஆச்சரியம் ஜெகனை ஆட்கொண்டது. ''இல்லையக்கா, இப்ப எனக்குப் பல சோலியள் அது தான்...'' மெல்ல இழுத்தான் ஜெகன்.

''அதெல்லாம் கிடக்கட்டும் பொம்பிளை இணுவில் பக்கம், ஏ.எல் பாஸ் பண்ணிப் போட்டு கொம்பியூட்டர் படிச்சுக் கொண்டிருக்கிறாள், ஒரே பெட்டை மூன்று பொடியளுக்குள்ளை, பூனைச் சாத்திரியார் தான் குறிப்புப் பார்த்தவர், என்பது பொருத்தமாம் இரண்டு பகுதிக்கும் இதை விட்டால் வேற வாறது கஷ்டமாம், உன்ரை முடிவைத்தான் எல்லோரும் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

''எனக்கென்னக்கா, நீங்களே பாருங்கோ, வாற டிசம்பரிலை எனக்கு லீவு கிடைக்கும். ஒரு மாதம் உங்க வந்திட்டுப் போறேன் அப்ப இதைப் பார்க்கலாம்.'' உண்மையிலேயே பூரித்துப் போயிருந்தான் ஜெகன். வீட்டுக்காரருக்கு என்னைப் பற்றிக் கவலையில்லை என்று நான் தப்புக் கணக்குப் போட்டேனோ என்று எண்ணிக் கொண்டான்.

''அப்ப எல்லாத்தையும் இங்கை பார்க்கிறோம், நீ கெதியாய் இங்காலவாற அலுவலைப் பார், மறக்காமல் வரக்கே இந்தியாவுக்குப் போட்டுவா. அப்போது தான் பட்டுவேட்டிகள், கூறைச் சேலைகள் நல்ல திறமாக எடுக்கலாம். நகைகளைக் கொழும்பில் பார்ப்போம். மற்றது நான் மறந்தே போனேன்.கலியாணச் செலவுகளை நாங்கள் தான் பார்க்க வேணும். அவை ஒரு இருபது தருவினம் ஆனா அது உடனை இங்க வாங்கேலாது தானே? மற்றது எங்கட வீடும் திருத்தம் செய்து பெயின்ரும் அடிக்க வேணும் அட்வான்சாக கொஞ்சம் அனுப்பு. மிச்சத்தைப் பேந்து பார்க்கலாம்.

சம்மதம் கிடைத்ததும் தனது அடுத்த திட்டத்தினை வெளியிட்டாள் விமலா. அவளது வார்த்தைகளின் அர்த்தங்கள் இப்போது இவனுக்கு விளங்கத் தொடங்கியது. என்ன இருந்தாலும் தனக்கென்று ஒரு வாழ்க்கை அமையப் போகிறது என்பதும் இனியாவது நான், எனது குடும்பம் என்கிற ஒரு பாசப்பிணைப்பிற்குள் வாழப் போகிறேன் என்ற உணர்வு மட்டும் அவன் மனதினை மகிழ்வினால் நிரப்பியிருந்தது. எப்படிக் குற்றினாலும் அரிசி மாவானால் சரி தானே?

அந்த மகிழ்வினால் அக்கா சொன்ன ஊர்ப் புதினங்கள் எல்லாம் அவன் காதுகளைச் சென்றடையவில்லை. ஏனோ தானோ என்ற அந்த அரைமணி நேர அறுவையுடன் அந்த உரையாடல் அறுந்து போனது.

ஜெகனின் சிந்தனைகள் எல்லாம் எங்கோ சிதறியிருந்தாலும் வரும் டிசெம்பரில் தனக்கு நிகழவிருக்கும் திருமணத்தைப் பற்றியும் அதற்காக அவன் இலங்கை சென்று திரும்பிவருதல் மற்றும் இதர செலவுகளுக்கு பணத்தினை எவ்வாறு புரட்டுவது என்பது ஒரு பெரிய வினாக் குறியாக அவன் முன் தொக்கி நின்றது.

வழமையாகச் செல்லும் அந்த வேலைக்கு இன்று ஜெகன் செல்லவில்லை. ஏனெனில் அதன் மூலம் அவனுக்குப் போதிய பணம் கைநிறையக் கிடைப்பதில்லை. எனவே வேறு வேலை தேடுவதற்காக அவன் அவசர மாகக் கிளம்பிப்போய்க் கொண்டிருந்தான்.

கொக்குவிலிலே விமலாவின் வீட்டிற்குப் புதியதொரு சுறுசுறுப்பு புதிதாகத் தொற்றியிருந்தது. இன்னும் ஐந்து தினங்களிலே ஜெகன் வருகையும் அதைத் தொடர்ந்து அவனது திருமணமும் நிகழ இருக்கின்ற காரணம் தான் அந்தப் புதிய சுறுசுறுப்பிற்கு அடிப்படை. ஜெகன் அனுப்பிய லகரங்கள் அவர்களது வீட்டினை புதுப் பொலிவாக மாற்றியிருந்தது. சாதாரணமாக பழைய சீனைன்ரியில் திரிந்த விமலாவின் கணவர் புதிய ஹீரோ கொண்டா பஷனில் சுற்றி வந்தார். கனடாவிலிருந்து புதுவடிவில் அச்சாகி வந்த அழைப்பிதழ்கள் எல்லாம் பெரும்பாலும் உரியவர்களுக்குச் சேர்ப்பிக்கப்பட்டிருந்தது.

வழமையான திருமண வீட்டில் நிகழும் பலகாரம் சுடும் நிகழ்வு மட்டும் இங்கு நிகழவில்லை, காரணம் எல்லாம் ஓடருக்கு எடுக்கின்றபடியால். விமலாவின் வீட்டிலே அனைவரும், விமலாவின் அம்மா உட்பட ஜெகனின் வருகையினை ஆவலுடன் நாட்கணக்கில், மணித்தியாலக் கணக்கில் எதிர்பார்க்கத் தொடங்கினார்கள். எல்லோர் மனங்களிலும் வரப்போகும் ஜெகனை விட அவன் கொண்டு வர உள்ள பொருட்களைப் பற்றிய சிந்தனை தான் பூதாகரமாக வியாபித்திருந்தது.

அந்தக் காலைக் கதிரவன், ஞாயிற்றுக்கிழமை காலையில் மெல்ல மெல்ல கண்திறந்து யாழ்ப்பாணத்துக் காற்றினைச் சிறிது சிறிதாய்ச் சூடேற்றிக் கொண்டிருந்தான்.

காலைத் தேநீரினை சுவைத்துக் கொண்டிருந்த விமலாவின் வீட்டுக்காரர்கள் மனதில் அந்த விடியல் ஒரு எரிச்சலைக் கிளப்பியிருந்தது. இந்தநாள் விரைவில் முடியாதா? நாளை காலை விரைவில் மலராதா என்ற ஒருவித அங்கலாய்ப்பு. ஏனெனில் நாளை தான் அவர்களின் ஜெகன் இங்கு வர இருக்கிறான். காலைப் பேப்பரைக் கூட ஒருவருக்கும் வாசிக்க மனமில்லை எல்லோர் நினைவுகளும் ஜெகனின் வருகையில் தான் இலயித்திருந்தது.

பொழுதினை எப்படியாவது கலைப்பதற்காக காலைப் பத்திரிகையினை ஒரு மேலோட்டமாகப் பார்த்துக் கொண்டிருந்த விமலாவின் கணவரின், கண்கள் முன் பக்கத்து வலது மூலையில் குத்தி நின்றது.

'கனடாப் பொலிஸார் திடீர் முற்றுகை. நாற்பது இலங்கைத் தமிழர் கைது'.

தலைப்பிலே ஈர்க்கப்பட்டு மேலும் உள் புதினத்தைப் படிக்கத் தொடங்கினார்.

'கோஷ்டிமோதல், கொள்ளை, போதைவஸ்துகடத்தல் தொடர்பாக திடீர் முற்றுகையிட்ட கனடாப் பொலீஸார் நாற்பது இலங்கைத் தமிழ் இளைஞர்களைக் கைது செய்தனர். செய்தி அச்சுக்குப் போகும் வரை கைது செய்யப்பட்டவர்களின் சிலரது விபரங்களே எமக்குக் கிடைத்தன. கார்த்திகேசு கலாதரன்(சங்கானை), பாலச்சந்திரன் ரவிசங்கர் (மானிப்பாய்), கணபதிப் பிள்ளை ஜெகன் (கொக்குவில்)...........

கணபதிப்பிள்ளை ஜெகன், அந்தப் பெயரினைத் தொடர்ந்து அவரால் விமலா! என்று கத்துவதைத் தவிர வேறு எதுவும் செய்ய முடியவில்லை.

(யாவும் கற்பனை)

# காலமெல்லாம் உன்நினைவில்

சி.சாரூபன்

சோலையூர் கிராமம் மிகவும் வறிய கிராமம். ஆனால் இயற்கை அழகிற்கு மட்டும் அங்கு குறைவில்லை. எந்நேரமும் சலசலத்து ஓடும் அருவி, அதிலே துள்ளி விளையாடும் கெண்டை மீன்கள், அருகிலே பச்சைப்பசேலென்று வளர்ந்து நிற்கும் மரங்கள், அம்மரங்களிலிருந்து ஜில்லென்று வீசும் காற்று அக்கிராமத்தை எப்போதும் குளிரூட்டிக் கொண்டிருக்கும். அப்படிப்பட்ட கிராமத்திலே ராசையா செல்லம்மா தம்பதிளுக்கு செல்வன் ஒரே ஒரு மகன். ராசையா அக்கிராமத்து பஞ்சாயத்து தலைவராக இருக்கின்றார். இவர்கள் தான் அக்கிராமத்திலேயே செல்வந்தக் குடும்பம். அக்கிராமத்தில் அரைவாசிக்கு மேல் இவர்களின் தோட்டங்களும், வயல்களும் தான். இவர்களது வீட்டிற்கு அருகில் தான் ராசம்மாவின் வீடு. ராசம்மா மிகவும் வறியவள். கணவன் இறந்த பின்பு அவளின் நிலை மேலும் மோசமாகிவிட்டது. தனது ஒரே ஒரு மகள் ராசாத்தியை எப்படியாவது படிக்க வைக்க வேண்டும் என்பதற்காக அவள் அருகிலுள்ள வீடுகளுக்கு சென்று வீட்டு வேலைகளை செய்து கொடுத்து அவர்கள் கொடுக்கும் பணத்தைக் கொண்டு மகளின் படிப்புச் செலவையும், ஒரு நேர உணவுச் செலவையும் மட்டுமே அவளால் நிவர்த்தி செய்ய



முடிந்தது. ராசாத்தியும் செல்வனும் சிறுவயது முதல் அக்கிராமத்திலுள்ள ஒரே பள்ளியிலேயே படித்து வந்தமையால் இருவரும் உயிர் நண்பர்களாகப் பழகினர்.

காலச் சக்கரம் வேகமாக சுழன்றது. செல்வத்தின் மேல் ராசாத்திக்குள்ள நட்பானது படிப்படியாகக் காதலாக மாறியது. எத்தனையோ தடவைகள் செல்வனிடம் தனது காதலைச் சொல்ல வேண்டும் என்று துடித்திருப்பாள்.ஆனால் ஒவ்வொரு தடவையும் ஏதாவது ஒரு தடை வந்து கொண்டேயிருக்கும். இப்படித்தான் ஒருதடவை செல்வனும் ராசாத்தியும் ஆற்றங்கரையில் எதிரெதிரே உள்ள இரு பாறைகளில் அமர்ந்திருந்தனர். சலசல என ஓடும் ஆற்று நீரின் சத்தம் உனது காதலைக் கூறு கூறு என்று சொல்வது போல் இருந்தது ராசாத்திக்கு. எனது காதலைச் சொல்ல இது தான் நல்ல சந்தர்ப்பம் என்று ராசாத்தி மெதுவாகப் பேச்சைத் தொடக்கினாள்.. ''செல்வன்'', ''என்ன ராசாத்தி'' என்றான் செல்வன். ''நான் உன்னிடம் ஒரு விஷயம் சொல்ல வேண்டும்''. ''சொல்லு ராசாத்தி'', இல்ல, எப்படிச் சொல்லுகிறதெண்டுதான் புரியல'' என்று இழுத்தாள். ''தயங்கமா சொல்லு ராசாத்தி உனக்கும் எனக்கும் இடையில் மறைக்கிறத்துக்கு என்ன இருக்கு'' ''ஆனா எனக்கு உன் முகத்தைப் பார்த்து சொல்லுகிற தைரியம் இல்ல. அதனால நான் திரும்பி இருந்து சொல்லுறன்.'' சற்று திரும்பியிருந்தவாறே கூறினாள். ''நான் உன்னை நீண்ட நாளாகக் காதலிக்கிறேன் ஆனா உனக்கு என்னை பிடிச்சிருக்கா செல்வம்'' என்று மெதுவாக செல்வனை நோக்கி திரும்பியவளுக்கு இடிவிழுந்தது போலிருந்தது. அங்கே செல்வனைக் காணவில்லை. எழுந்து நின்று பார்த்த போதுதான் சற்று தூரத்தில் செல்வன் அவனது நண்பன் ராமுவுடன் கதைத்துக் கொண்டு நிற்பது தெரிந்தது. அவளால் ஏமாற்றத்தை தாங்கிக் கொள்ளவே முடியவில்லை. ஒருவாறு அழுகையை அடக்கிக் கொண்டு வீட்டுக்குச் சென்றாள். அதன் பின்னும் பல தடவை அவளது காதலைச் சொல்ல முயன்ற போதும் அவளால் முடியவில்லை. இது இவ்வாறிருக்க பள்ளி வாழ்க்கை முற்றுப் பெறுவதற்கான இறுதிப் பரீட்சை ஆரம்பமானது. செல்வன் சிறப்பாக பரீட்சை எழுதினான். ஆனால் ராசாத்தியால் அவ்வாறு எழுதமுடியவில்லை. சில மாதங்களில் பரீட்சை முடிவுகள் வெளியாகின. செல்வன் பல்கலைக் கழகம் செல்லத் தகுதி பெற்றான். ஆனால் ராசாத்திக்கு அப்பாக்கியம் கிட்டவில்லை. கிடைத்திருந்தாலும் பல்கலைக்கழகம் செல்ல என்னிடம் பணவசதியா இருக்கின்றது. என நினைத்து மனதைத் தேற்றிக் கொண்டாள்.செல்வன் நகரத்திலுள்ள பெரியதொரு பல்கலைக் கழகத்தில் தனது கல்வியைத் தொடர்ந்தான்.

அப்போது அங்கு கல்விகற்ற சாந்தி என்ற பெரும் செல்வந்தப் பெண் ஒருத்தியை செல்வன் காதலித்தான். தன் காதலை அவளிடம் கூறிய போது அவளும் காதலை ஏற்றுக் கொண்டாள்.அதன் பின் இருவரும் பாக், பீச் என்று எங்கெங்கோ வெல்லாம் சுற்றினர். பல்கலைக்கழக விடுமுறையின் போது ஒரு நாள் செல்வன் ஊருக்கு வந்தான். அவன் ஊருக்கு வந்ததைக் கேள்வியுற்றதும் ராசாத்தியின் மகிழ்ச்சிக்கு எல்லையேயில்லை. உடனே செல்வனைப் பார்க்க ஓடினாள். வழியிலே செல்வனைக் கண்டதும் தனக்குள் அடக்கி வைத்திருந்த ஆசைகளையெல்லாம் வெளிப்படுத்துவதற்காக அவனருகில் சென்று தன் தூய்மையான காதலை வெளிப்படுத்தினாள். ஆனால் சாந்தி என்ற மாயவலைக்குள் சிக்கியிருந்த செல்வனுக்கு ராசாத்

(13ஆம் பக்கம் பார்க்க)




## கோழி இறைச்சிப் பொரியல்



### தேவையானவை :-

| | |
|---|---|
| கோழி | :- 1 |
| சின்ன வெங்காயம் | :- 10 |
| இஞ்சித் துண்டு | :- 2 அங்குலம் |
| உள்ளி | :- 5 |
| மஞ்சள் தூள் | :- 1 தேக்கரண்டி |
| மிளகாய்த்தூள் | :- 2 மேசைக்கரண்டி |
| சோளமா | :- 2 மேசைக்கரண்டி |

சமையல் எண்ணெய் தேவையான அளவு.

### செய்முறை:-

கோழி இறைச்சியை சுத்தப்படுத்தி பெரிய துண்டுகளாக வெட்டி எடுத்துக் கொள்ளவும். வெங்காயம், இஞ்சி, உள்ளி இவை மூன்றையும் சேர்த்து அரைத்து, சாறு எடுத்து, வெட்டி வைத்த இறைச்சியில் ஊற்றி அத்தோடு மஞ்சள் தூள், மிளகாய்த்தூள், சோளமா, உப்பு, ஆகியவற்றையும் சேர்த்து நன்றாகப் பிசைந்து 30 நிமிடங்களின் பின் எண்ணெயில் பொன்னிறமாக பொரித்து எடுத்துக் கொள்ளவும்.

N.நர்மதா

## ஒளிமயமான எதிர்காலத்திற்கு


(சென்ற வாரத் தொடர்ச்சி)

முயற்சியின் தன்மை உயரும் போது பாராட்டுதல் எனும் சொல்லை நாம் உபயோகித்தால் அவ்வாழ்வு மேலும் சிறக்கும். இதன் மூலம் திருமண வாழ்க்கையும் சிறப்பாக அமையும்.

திருமணமான தம்பதிகளில் பலர் இவ்விதமாக பாராட்டும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்வதில்லை. இதன் காரணமாகவே அநேகமாக அவர்களின் வாழ்க்கை சீரழிந்து விடுகின்றது.

பாராட்டும் குணம் தங்கள் கணவருக்கோ அல்லது மனைவிக்கோ இல்லை என்று குறைபட்டு வருந்தும் பலரைக் கண்டிருக்கிறோம்.

சிலர் ஒருவரையொருவர் புரிந்து கொண்டு ஒருவர் மற்றவருக்காக வாழும் மனப்பான்மையை ஏற்படுத்தி தமது வாழ்க்கையை சிறப்பாக அமைத்துக்கொள்ளும் வேளை



யில் பலர் ஒருவரையொருவர் குறை கூறிக் கொண்டும், கேலிச் சிரிப்பு சிரித்துக் கொண்டும், சண்டைகள் பிடித்துக் கொண்டும் தமது வாழ்வை தாமாகவே சீரழித்துக் கொள்கிறார்கள்.

உண்மையிலேயே வாழ்வு சிறப்புற குறை கூறுதலுக்குப் பதிலாகப் பாராட்டும், கேலிச் சிரிப்புக்குப் பதிலாக அன்பு கலந்த சிரிப்பும் இருத்தல் அவசியம். ஒருவருக்கொருவர் மனம் புண்படும் விதமாகப் பேசிக் கொள்ளாது இருக்க உங்களால் முடியுமாயின், உங்கள் வாழ்வு சுடர் விட்டுப்பிரகாசிக்கும். உங்கள் வாழ்வு உங்கள் கைகளில் என்பதை என்றும் நினைவிற் கொள்ளுங்கள்.

(தொடரும்)

## தூக்க மாத்திரையா..? வேண்டாமே.....!



மனித வாழ்வில் அன்றாடம் நிகழக் கூடிய ஒன்றாகவே இன்பமும், துன்பமும் காணப்படு கின்றது. சிலரை துன்பம் தொடர்ச்சியாகவே தொற்றிக் கொள்கிறது.

சிலர் துன்பங்களைக் கண்டு எதிர்காலத் துணிவின்றிசோர்ந்து போகிறார்கள். சில வேளை தற்கொலையைக் கூட தீர்வாக எண்ணுகிறார்கள். ஒரு சிலர் நிம்மதிக்காக தூக்க மாத்திரைகளைப் பாவிக்கிறார்கள். இது நாளுக்கு ஒன்று என்பதிலிருந்து காலம் செல்லச் செல்ல தூக்க மாத்திரைகளின் எண்ணிக்கையும் அதிகரித்தவண்ணம் இருக்கும்.

ஏதோ ஒரு வழியில் அவர்களது பிரச்சினைகளுக்கு தீர்வு கிட்டிய போதும் அவர்களால் தூக்கமாத்திரை விடயத்திலிருந்து விடுபட முடியாமல் போகிறது. இதனால் 'உடல் நிலை பாதிப்புற நேரிடுகிறது.

பிரச்சினைகளிலிருந்து விடுபட தூக்க மாத்திரைகள் தான் தீர்வல்ல. எவ்வித துன்பங்கள் நேரும் போதும் சோர்வின்றி துணிச்சலுடன் முகம் கொடுக்க வேண்டும். நன்கு சிந்தித்து தீர்வொன்றைப் பெறுவோமேயானால் நிச்சயம் வாழ்வை சீராய் அமைக்கலாம். நிம்மதியான தூக்கத்தையும் பெறலாம்.

S.மயூரி

## அழகுக் குறிப்புகள்

★ கண்கள் சோர்வடைந்தால் சில்லென்ற பன்னீரில் நனைக்கப் பட்ட பஞ்சினை வைக்க புத்துணர்ச்சி கிட்டும்.

★ எலுமிச்சைச்சாறு, பன்னீர், கிளிசரினை சம அளவில் கலந்து ஒரு போத்தலில் வைத்துக் கொண்டு கை, முகம், கழுத்துப் பகுதிகளில் பூசி வர தோல் மென்மையாகவும், நிறமாகவும் மாறும்.

★ தினமும் பால் அருந்துபவர்களுடைய நகம், பல் என்பன பளபளப்பாகவும், அழகாகவும் காணப்படும்.

★ வேப்பம் பூவை ஊறவைத்து குடிநீர் தயாரித்து காலையில் பருகிவர உடல் மெலிவு நீங்கி அழகாகக் காணப்படும்.

ஆ.தர்ஷினி

## சமையல் குறிப்பு

பருப்புக் கொட்டி வைக்கும் பாத்திரத்தில் சில காய்ந்த மிளகாய்களைப் போட்டு வையுங்கள். பருப்பு ஒன்றோடு ஒன்று ஒட்டிக் கொள்ளாது. அதே போல, பாத்திரத்திலும் ஒட்டாது. பருப்பும் பழுதாகாது.

## நண்பர் என்பவர் எப்படிப்பட்டவராயிருப்பார்?

(சென்ற வாரத் தொடர்ச்சி)

★ நீங்கள் மகிழும் போது, அவரும் உங்களுடன் சேர்ந்து மகிழ்வார்.

★ நீங்கள் கடும் துன்பத்தில் அகப்பட்டுக்கொள்ளும் போது, அவரது குரல் சோகத்தைக் கொட்டும்.

★ உங்கள் இதயம் மகிழும் போது, அவரது குரல் இன்னிசை யைப் பரப்பும்.

★ உங்களது பல தவறுகளை அறிந்திருந்தாலும், உங்களை மனதார நேசிப்பார்.

★ நீங்கள் தவறும்போது, அதைக் குறித்து வெட்கப்பட மாட்டார்.

★ நீங்கள் அவரை மகிழ்வுறச் செய்யும் போது அவர் தனது திருப்தியைக் காட்டுவார்.

★ சொல்லப்போகும் உண்மை உங்களுக்கு வேதனையைத் தருமென்றாலும், சொல்லத் தவறமாட்டார்.

★ உங்களுக்கு உதவி செய்து, உங்களது பாரத்தை இலகுவாக்கி, அதற்காக எந்த வெகுமதியையுமே, எதிர்பார்க்காமலிருக்க அவரால் மாத்திரம் தான் முடியும்.

★ எதையும், எப்பொழுதும், கொடுக்கத்தயாராக இருப்பார்.

★ உங்களுக்கு அவரால்



கொடுக்கப்பட்டவை எவை யெனக் குறிப்பெடுத்துப் பத்திரமாக வைத்துக் கொள்ள மாட்டார்.

★ எல்லோரும் உங்களைத் தூற்றினாலும், அவர் உங்களைப் பற்றி நல்லதாகவே பேசுவார்.

R.லக்ஷி

## மனவலிமையைப் பெருக்குவோம்!

★ நெஞ்சுக்கு நிம்மதி இறைவனின் சந்நிதி என்பதனால் தியானம் மூலமாக மனதின் குழப்பங்களிற்கு கட்டுப்பாடுகளைக் கொண்டுவருவோம்.

★ முன்கோபம், பிடிவாத குணம் இரண்டையும் தவிர்த்துக் கொள்ள பொறுமையைக் கடைப்பிடிப்போம்.

★ உயர்ந்த கருத்துக்கள், தத்துவங்களை மனதில் இருத்தி, தூய்மையான எண்ணங்களிற்கு இடம் கொடுப்போம்.

★ மற்றவர்களுடைய வெறுப்பிற்கும், சந்தேகத்திற்கும், தூற்றுதலிற்கும் எம்மை உட்படுத்தாமல் எம்மை நாமே எல்லோரும் விரும்பத்தக்கதாக மாற்றிக் கொள்வோம்.

★ மனதைத் தாக்கக்கூடிய வகையில் இருக்கும் செய்திகளையும், வார்த்தைகளையும் நாம் கேட்டுக் கொள்ளாமல் நம்மை நன்மைக்குரிய விடயங்களில் ஈடுபடுத்துவோம்.

★ எந்த விடயத்திலும் ஆணவம், சுயநலம், பழிக்குப் பழிவாங்கும் தன்மை போன்றவற்றை முற்றிலும் தவிர்த்துக் கொள்வோம்.

சே.மேரி

## பெண்களே! கவனியுங்கள்

இன்று பல பெண்கள் மேலைத்தேச கலாசாரத்தை தங்களின் தோள்களில் சுமந்து வாழ்க்கையையே சீரழித்துக் கொண்டிருக்கிறார்கள். அரை குறை ஆடைகள் அணிந்து,ஆண்களின் பார்வையில்படும்படியாகச் சென்று கொண்டிருக்கிறார்கள்.

இன்று அதிகரித்து வரும் சினிமா மோகத்தால், தன்னையும் ஒரு சினிமா நடிகை என்று நினைத்து - நான் சிம்ரனைப் போல் இருக்கிறேன், நான் ரம்பாவைப் போல் -இருக்கிறேன் என்று பிறருக்கு காண்பிப்பதற்காக அவர்களின் நடை, உடை பாவனைகளை அப்படியே பின்பற்றும்



இன்றைய நவயுக நங்கையரின் இறுதி முடிவே நாம் அன்றாடம் காணக்கூடிய, வேண்டத்தகாத சம்பவங்கள் ஆகும்.

உங்களுக்குள் இருக்கும் அழகை ஒருவன் வித்தியாசமான பார்வையுடன் பார்ப்பது உங்களுடைய தவறினாலேயே ஆகும்.

"ஆள்பாதி, ஆடைபாதி" என்ற பழமொழி மாறி "ஆள் முக்கால் ஆடை கால்" என்ற புதுமொழி உருவாக நீங்களே வழி சமைத்துக் கொடுக்காதீர்கள்.

பெண்களே!

உங்களை நீங்களே பாதுகாக்க வேண்டும். அப்போது தான் "பெண்" என்ற மென்மையான சொல்லுக்கு உள்ள உண்மையான அர்த்தம் புரியும்.

சுமங்கலி

# மரண விளையாட்டு

## தொடர்கதை

## அங்கம் 10

மாயவன்

இந்திய சி.பி.ஐ ஒபிசர் விவேக் தன் துப்பாக்கியில் புல்லட்களை நிரப்பிக் கொண்டிருந்தான். விவேக்கின் அறையை அடைந்த ஜோன்சும், வில்லியமும் வாசலில் நின்ற காவலாளிகளை நோக்கி இரை பிடிக்கும் புலியாய் பதுங்கி பதுங்கிப் நடந்து ஹாய் என்ற சத்தத்துடன் பாய்ந்து கையில் இருந்த கத்திகளை நடு நெஞ்சில் குத்தி நிறுத்தினார்கள்.



கதவை உதைத்து திறந்தான் வில்லியம். உள்ளே விவேக்துப் பாக்கியை நீட்டியபடி நின்றான். "கான்ட்ஸ் அப்" என்று கூறினான். வில்லியம் துப்பாக்கியை போட்டு விட்டு கைகளை உயர்தினான். விவேக் துப்பாக்கியின் ட்ரிக்கை அழுத்தப் போனான். ஜோனசின் துப்பாக்கியில் இருந்து புறப்பட்ட குண்டு விவேக்கின் துப்பாக்கியை பறித்தது. வில்லியம் ஹாய் என்று குரல் எழுப்பியபடி காற்றில் எம்பி வலது காலை மடக்கி உயர்த்தி விவேக்கின் மார்புப்பகுதியில் உதைத்தான். சட்டென்று விழுந்த விவேக் காலை நீட்டி வில்லியத்தை தடுக்கி விழவைத்தான். மல்லாக போட்ட ஆங்கில U வடிவத்தில் இருந்த வில்லியம் விவேக்கை தாக்கினான். சிதறிய விவேக்கின் முதுகில் 25செ.மீ நீள இரும்புக் கத்தியை ஆழமாக செருகினான் விவேக் ட்ரகுலா பார்வை பார்த்து சரிந்தான். கமோன் குயிக் என்று ஜோனசும் வில்லியமும் விவேக்கின் அறையை விட்டு புயல் வேகத்தில் வெளியேறினார்கள்.

பிலிப்சும், வின்சனும் ராஜேசின் கதையை முடித்துவிட்டு வந்து கொண்டிருந்தனர். கடவை விரைவு உயர்த்தி சக்சஸ் என்று ஜாடை காட்டினார்கள். ஜோனசும் இவர்களுடன் இணைய ஐவருமாக நடிகை ரமீலாவின் அறையை அடைந்து கதவை இழுத்து திறந்து உள்ளே நுழைந்தனர்.

''என்ன ஜோன்ஸ் ஏதாவது ஆபத்தா'' என்று ரமீலா கேட்டாள்.

''எங்களுக்கு ஒன்றும் ஆபத்தில்லை. உனக்குத்தான் ஆபத்து'' என்று கூறியபடி பூட்சில் இருந்த கத்தியை உருவினான்.

''என்ன வின்சன்! ஜோன்ஸ் விளையாடுகிறானா?''

''இல்லை. நீதான் எங்களுடன் விளையாடப் பார்த்தாய்.''

''என்ன மரியாதை குறைகிறது''

''உனக்கு என்ன மரியாதை நீ எங்கள் ஐவரையும் பேதம் செய்து பிரித்துவிட்டு பிறவுண்சுகருடன் தலை மறைவாகப் பார்க்கிறாய் என்ன?'' என்றான் பிலிப்ஸ்.

'இல்லை நான் அப்படி ஏதும் செய்ய நினைக்கவில்லை'

நீ நேற்றிரவு என்னிடம் ஜோனசை பற்றி கூறியபோதே நினைத்து விட்டேன். உன் எண்ணம் எப்படிப்பட்டது என்று கூறியபடி வின்சன் அவளின் கழுத்தைப்பிடித்தபடி கத்தியை ஓங்கி வயிற்றில் செருகினான்.

பொன் மஞ்சள் நிற வயிற்றில் இருந்து இரத்தம் சூடாக குபுக் என்று பாய்ந்தது. ரமீலா இரு கைகளாலும் வயிற்றை பொத்தினாள். மற்ற நால்வரும் மாறி மாறி நெஞ்சில் இருந்து வயிறுவரை கத்திகளை செருகினார்கள்.

ரமீலா உயிரற்ற பிணமாக சரிந்தாள். அவளை உதைத்து தள்ளி விட்டு வெளியேறி அவர்களின் அறையை அடைந்தனர்.

உதவிக் கேப்டனின் அறையை நோக்கி வந்து கொண்டிருந்த காவலாளி ஏதோ சந்தேகப் பட்டு கேப்டனின் அறையைத் திறந்து உள்ளே பார்த்தான். உதவிக் கேப்டனின் சடலத்தை பார்த்ததும் உஷாராகி அபாய சைரனை ஒலிக்க விட்டான்.

ஓ மை காட். யாரோ அபாய சைரனை ஒலித்து விட்டார்கள் என்று கூறியபடி ஜோன்ஸ் கட்டிலை சுருக்கி இரகசிய அறையை திறந்து, பிறவுண்சுகர் பெட்டியை பிலிப்ஸின் உதவியுடன் வெளியே எடுத்தான். அதனை தூக்கியபடி அறையை விட்டு வெளியே வந்தார்கள். இவர்களை கண்ட ஒரு காவலாளி சுட முயன்ற 0.00001 விநாடிக்குமுன் வின்சனின் கத்திக்கு பலியானான். கப்பலின் தளத்தில் குழப்பம் ஏற்பட்டது.

தட தட வென்று காவலாளிகள் ஓடிவரும் சத்தம் கேட்டு பிறவுண்சுகர் பெட்டியுடன் கப்பலின் மேல் தளத்தை அடைந்தார்கள். இடையில் தடுக்க முயன்ற காவலாளிகளை சுட்டுப் பொசுக்கியவண்ணம் தளத்தை அடைந்ததும் நிலைமை மோசமாகியது. காவலாளிகள் இவர்கள் ஐவரையும் சுற்றிவளைத்த வண்ணம் நெருங்க ஆரம்பித்தார்கள். அவர்களை நோக்கிச் சுட்ட வண்ணம் கப்பலின் நுனிப்பகுதியை அடைந்து அங்கிருந்த பிளாஸ்ரிக் மிஷின் இயந்திரப் படகை தூக்கி கடலுக்குள் வீசிவிட்டு, பிறவுண்சுகர் பெட்டியையும் கடலுக்குள் போட்டுவிட்டு ஐவரும் படபட வென்று 50 அடி ஆழத்திற்கு கீழ் உள்ள கடல் மட்டத்தை நோக்கி பாய்ந்து இருகால்களையும் கைகளையும் ஒன்று சேர்த்த வண்ணம் நிலைக்குத்தாக சென்று ப்ளக் ப்ளக் என்று நீருக்குள் ஊடுருவினார்கள். பின்னர் தம்மை ஒரு நிலைப்படுத்தி அருகில் மிதந்து கொண்டிருந்த இயந்திரப்படகில் ஏறி அதனை உச்ச வேகத்தில் விரட்டினார்கள்.

கப்பலின தளத்திலிருந்து வந்த குண்டுகள் படகை தொட முடியாமல் நீருக்குள் விழுந்து செயலற்றுப் போயின.

''பிலிப்ஸ் உன்னிடம் வயர் லெக்ஸ் இருக்கின்றதா பார்'' என்றான் ஜோனஸ்.

பிலிப்ஸ் தன் ஜீன்ஸ் பொக்கற்றில் இருந்த வயர்லெக்ஸை எடுத்து அதனை உயிர்ப்பித்து இந்தியாவின் தென்கோடியில் உள்ள அப்துல் ரகீமின் கிளைகளில் ஒன்றான ராமதாஸின் கீழ் இயங்கும் தீவிரவாத கும்பலுடன் தொடர்பு கொண்டு விடயத்தை விளக்கினான்.

அவர்களிடம் இருந்து பதில் கிடைத்தும் ஜோன்ஸ் அவர்களிடம் விஷயத்தை தெரிவித்து விட்டேன். நாம் அங்கு சென்றதும் அவர்கள் பிறவுண் பெட்டியை எடுப்பார்கள். ஆகவே கரையை பார்த்து படகை பறக்கவிடு என்றான் பிலிப்ஸ்.

ஓ.கே என்று கூறியபடி திரும்பியவன் அதிர்ந்தான். சுறாக்கள் கூட்டமாக வந்து கொண்டிருந்தன. வின்சன் ''சுறாக்கள் படகை நெருங்கு முன் சுட்டுத்தள்ளு'' என்றான்.

படகின் கீழ் கப்டனின் உதவியால் மறைத்து வைக்கப் பட்டிருந்த மிஷின் கண்களில் ஒன்றை எடுத்து சுறாக்கள் நோக்கி சுடத் தொடங்கினான்.

சுறாக்கள் தம்மை நோக்கி சீறி வரும் தோட்டாக்களை கண்டு வெருண்டவண்ணம் பின்வாங்கின.

சிறிது நேரத்தில் கரை தெரியத் தொடங்கியது. படகின் வேகத்தை குறைத்து கைத்துப்பாக்கியை எடுத்து மேல்நோக்கி மும்முறை சுட்டான் ஜோன்ஸ். கரையில் இருந்தும் 3 சப்தங்கள் கேட்டபின் படகின் இஞ்சினை நிறுத்தி விட்டு கரையில் தெரிந்த புதர்களை விலக்கிய வண்ணம் நடந்தார்கள்.

சிறிது நேரத்தில் பாதை தெரிய ஆரம்பித்தது. ''ஹலோ ஜோன்ஸ் வெல்கம். கம் வித் மீ'' என்று கூறிய படி ராம்தாஸின் உதவியாளன் டேவிட் அவர்களை அழைத்துக் கொண்டு ராம்தாஸின் பங்களாவை அடைந்தான்.

ராம்தாஸின் அதிகாரத்தின் கீழ் விளங்கிய அப்பகுதி அப்துல் ரகீமின் ஆயுதசாலை ஆகும். பங்களாவை அடைந்து அதன் எதிர்க் கோடியை நோக்கினார்கள்.

ரெட் ஐ மிஷின்கண் வரிசையாக அடுக்கப்பட்டிருந்தன. 13கிலோ எடை உள்ளவை. இவற்றை தோளில் பொருத்திக் கொண்டு தாழப்பறந்து வரும் விமானங்களைச் சுடலாம். இவற்றில் பொருத்தப் பட்டுள்ள இன்ப்ரா ரெட் கோமில் டிலைஸ் இருட்டில் கூட விமானங்களை இனங்கண்டு கொள்ள உதவும். சுடும் தூரம் 3.2கிலோ மீற்றர்.

ஸ்டரம் ரக்கர் 0.38 ரிவால்வர். 0.9மி.மி அதிவேக பிஸ்டல்கள், சிகிரட், 75 வகை ஹன்கள், ஏ.கே.47 வகை, ஸ்டென்கன்கள், 5எம்.ஜி துப்பாக்கிகள், ரி 56 கன்கள், ஆர்.பி.ஜி செல்கள், ஆட்லறி செல்கள், எறிகணை செலுத்திகள், ஸ்ரில்கள் ஏவுகணைகள், வயர்லெக்ஸ் செட்டுகள், அதிசக்தி வாய்ந்த கண்ணி வெடிகள் 100கி.மீ சுற்றளவுக்கு ஒலிபரப்பும் சக்தி வாய்ந்த ரேடியோ கருவிகள், கை வெடி குண்டுகள், பைனாகுலர்ஸ், பலவடிவ கத்திகள் etc ....

ஜோன்ஸ் இவ்வழியாக வாருங்கள் என்று பங்களாவினுள் அழைத்து சென்றான் டேவிட். திரும்பிய புறமெல்லாம் காவலாளிகள் அலேர்ட்டாக நின்று கொண்டிருந்தார்கள். பங்களாவின் ஒரு புறம் அமைந்துள்ள ஒரு சிறிய கதவை திறந்து உள்ளே நுழைந்தான் டேவிட். அவனை தொடர்ந்து ஐவரும் நுழைந்தார்கள்.

பங்களாவின் உள்கூடம் நீல நிறமின் விளக்குகளின் வெளிச்சத்தின் விபரீத அமைதியுடன் காணப்பட்டது.''வெல்கம் போய்ஸ் வெல்கம்'' என்று மேல் கூரையில் இருந்து ஸ்பொட்டாக வட்டவடிவில் விழுந்த வெளிச்சத்தில் சுழல் நாற்காலியில் நாற்புறமும் பொடிகார்ட்ஸ் உடன் அமர்ந்திருந்தான் ராம்தாஸ்.

ராம்தாஸ் வயது 39 உயரம் 6அடி 2அங்குலம். தலை சற்று வழுக்கை. கறுத்த உடம்பை நீலநிற புல் சூட்டால் மூடியிருந்தான். முகத்தில் கொலை வெறி எந்நேரமும் தாண்டவமாடிக் கொண்டிருந்தது. கண்களில் கழுகின் பார்வை தெரிந்தது.

மிஸ்டர் ராம்தாஸ் கப்பலின் உதவிக் கேப்டனின் விஷமத்தால் பிறவுண்சுகர் பெட்டியை கடலில் வீசி விட்டோம். அதனை எடுக்க முதலில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஓ.கே. வின்சன் நீங்கள் சாப்பிட்டு முடித்துவிட்டு ரெடியாகுங்கள். பிறவுண்சுகர் பெட்டியை எடுக்க புறப்படுவோம் என்று கூறி அவர்களை அனுப்பிவிட்டு டேவிட்டை அழைத்து பிறவுண்சுகர் பெட்டியை தேடுவதற்கு புறப்பட தேவையான ஆயத்தங்களை செய்வதற்கு கட்டளையிட்டான் ராம்தாஸ்.

''சேர் தீவிரவாதிகள் ஐவரும் இந்திய சி.பி.ஐ. ஒபிசர்கள் இருவரையும் சுட்டுக்கொன்று விட்டு அத்துடன் 15 காவலாளிகளையும் கொன்றுவிட்டு தப்பி விட்டார்கள்'' என்று உதவிக்கேப்டன் கப்பல் கப்டனிடம் கூறினான்.

(தொடரும்)

# கம்பியூட்டர்க் கல்வி

## இன்ரநெற்



மிக வேகமாக வளர்ந்து வரும் கம்பியூட்டர் தொழில் நுட்பத்தின் மாபெரும் கண்டு பிடிப்பான இன்ரநெற், இன்று தகவல் பரிவர்த்தனை உலகத்தினை ஒரு புதிய சகாப்தத்திற்குக் கொண்டு சென்றுள்ளது. இன்ரநெற் எனும் வார்த்தை இன்று எல்லோர் வாயிலும் அடிக்கடி உச்சரிக்கப்படுகின்றது. மாணவர்கள் தங்களுக்குத் தேவையான ஏராளமான தகவல்களை இங்கே பெற்றுக் கொள்ளுகின்றனர். இதில் உலகின் சகல பாகங்களிலும் வெளியிடப்படுகின்ற பத்திரிகைகள், சஞ்சிகைகள் என்பனவற்றை வாசிக்கக் கூடியதாக இருக்கிறது. உலகின் மறுமூலையிலுள்ள ஒரு நண்பருக்கு மின் அஞ்சல் ஒன்றை விரைவாக அனுப்பக் கூடியதாக இருக்கிறது. இவ்வாறான பிரமிக்க தக்க பயன்பாடுகளை வழங்கி உங்கள் முன்னே இன்ரநெற் விரிவடைந்து இருக்கிறது. மொத்தத்தில் உங்கள் வீட்டிலுள்ள இன்ரநெற் இணைக்கப்பட்ட கம்பியூட்டர் ஆனது மொத்த உலகையும் உள்ளடக்கிய ஒரு மந்திரப் பொருளாக அமைதியாக வீற்றிருக்கிறது.

இந்த சுவாரசியமான இன்ரநெற் தொழில் நுட்பத்தினை அறிந்திருப்பது இப்போதுள்ள ஒரு அவசியமான தேவையாகும். இதனை எவ்வாறு பயன்படுத்துவது? இதனுடைய முழுப் பயன்பாட்டையும் எவ்வாறு பெற்றுக் கொள்வது? போன்ற அத்தியாவசியமான விடயங்களை இலகுவான முறையில் உங்களுக்குத் தருவதே இத் தொடரின் நோக்கமாகும்.

### இன்ர நெற் - ஓர் அறிமுகம்

### இன்ர நெற்றின் வரலாறு

கம்பியூட்டர்கள் உலகத்திற்கு அறிமுகமாகிய குறுகிய காலத்திற்குள் (1950ஆம் ஆண்டுகளில்) அவற்றின் பாவனை அதிகமாகத் தொடங்கியது. இதன் பலனாக இரண்டு கம்பியூட்டர்களுக்கிடையே தகவல்களைப் பரிமாற வேண்டிய தேவையும் மேலோங்கத் தொடங்கிற்று. இதன் ஆரம்பக்கட்டமாக கம்பியூட்டர் தகவல்களை மின்காந்த நாடாக்களில் (Magnetic Tapes) பதிவு செய்து பரிமாறிக்கொள்ளும் முறை அறிமுகமாகியது.

கம்பியூட்டர் ஆய்வாளர்கள் 1960ம் ஆண்டின் ஆரம்பத்தில் இரண்டு கம்பியூட்டர்களை நேரடியாக இணைத்து தகவல் பரிமாற்றம் செய்யும் ஒரு முறையை கண்டு பிடித்தனர். இந்த தகவல் பரிவர்த்தனை முறையானது கல்வித் துறையிலும், இராணுவத் துறையிலும் பெரிதும் பயன்படும் என்பதை உணர்ந்த அமெரிக்க அரசு, இந்தத் துறையில் மேலும் ஆய்வுகளை மேற்கொள்ள ARPA (U.S Advanced Research Projects Agency) எனும் ஆராய்ச்சி மையத்திற்குப் பணித்தது. இதற்காக பெரும் தொகையான பணத்தையும் ஒதுக்கீடு செய்தது. ARPA அமைப்பானது பெரும் ஆய்வுகளை மேற்கொண்டு இறுதியில் பல கம்பியூட்டர்களை இணைக்கும் ஒரு வலைப் பின்னலை (Computer Net Work) உருவாக்கியது. இந்த நெற்வேர்க் தான் பின்னர் ARPANET எனும் பெயரில் பெரும் வளர்ச்சி அடைந்தது. இதன் தொடர்ச்சியாக, 1980ம் ஆண்டளவில் ARPANET ஆனது பல நகரங்களிலுள்ள கம்பியூட்டர்களை இணைக்கும் ஒரு பாரிய நெற்வேர்க் ஆக உருவெடுத்தது. இந்த ARPANET 1983ம் ஆண்டில் இன்றைய இன்ரநெற்றின் முதுகெலும்பாக (Back Born) உருமாறியது. ஆரம்பகால இன்ரநெற் ஆனது 213 கம்பியூட்டர்களை மட்டுமே இணைத்து உருவாக்கப்பட்டது. இன்றோ உலகம் பூராகவும் பல கோடிக்கணக்கான கம்பியூட்டர்கள் மட்டுமே இணைத்து உருவாக்கப்பட்டது. இன்றோ உலகம் பூராகவும் பல கோடிக் கணக்கான கம்பியூட்டர்கள் இணைக்கப்பட்ட ஒரு பிரமாண்டமான நெற்வேர்க் ஆக இந்த இன்ர நெற் வளர்ந்துள்ளது.

(தொடரும்)

சென்ற இதழின் தொடர்ச்சி தொடர்ந்து வரும் இதழ்களில் பிரசுரிக்கப்படும்

# விடுதலைப்புலிகளின் தடை நீக்கம் சிங்களபௌத்த மக்களின் உணர்வுகளைப் பாதிக்கும்

## எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ சண்டே லீடருக்குப் பேட்டி

பேச்சுவார்த்தை மூலம் உறுதியான தீர்வு காணப்படுமானால் வடக்கு, கிழக்கிற்கு இடைக்கால நிர்வாகம் தேவைப்படாது போகலாம் என்று எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சிறுபான்மை அரசியல் கட்சிகள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவிடம் பேசி தமக்கு தேவையான உதவிகளை பெற்றுக் கொள்ள வேண்டும். அவர்கள் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனோடு பேசத்தேவையில்லை.

பிரபாகரனை மற்றவர்கள் சென்று சந்திப்பதில் எமக்கு ஆட்சேபனை இல்லை.

ஆனால், சிறுபான்மை அரசியல் கட்சிகளின் தலைவர்கள் அவரைச் சென்று சந்தித்தமை பற்றி நாம் மிகுந்த அக்கறையோடு சிந்திக்கிறோம். இவ்வாறு அவர் ஏப்ரல் 21ஆம் திகதி சண்டே லீடருக்கு வழங்கிய பேட்டியில் கருத்துத் தெரிவித்துள்ளார். அப்பேட்டியின் சில பகுதிகள் வருமாறு:

✡ *கேள்வி:–*

விடுதலைப் புலிகளின் தடையை நீக்குவது பற்றிய ஒரு திட்டம் அரசிடம் இருக்கிறது. அரசின் இந்த முயற்சியை எதிர்க்கட்சி ஆதரிக்குமா?

○ *பதில்:–*

இது குறித்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பொ.ஐ.முவின் நிலைப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளார் என்று கருதுகிறேன். ஏற்கனவே சொல்லப்பட்டதை மீண்டும் சொல்ல நான் விரும்பவில்லை. ஜனாதிபதி என்ன சொல்கிறாரோ அதுவே எதிர்க்கட்சியின் நிலைப்பாடாகும்.

எனினும் எனது தனிப்பட்ட கருத்தை தெரிவிக்க வேண்டுமானால், அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட அன்றே புலிகளின் தடை நீக்கப்பட்டுள்ளது என்றே கூறுவேன். அப்படி இல்லை என்றால் விடுதலைப் புலிகள் அரசியல் நடவடிக்கைகளில் சுறு சுறுப்பாக ஈடுபடுவதையும், எங்கும் அலுவலகங்களை திறப்பதையும் நாம் காணமுடியாது: ஏனெனில் தடை செய்யப்பட்ட ஓர் இயக்கம் நாடெங்கும் அலுவலகங்களை திறப்பது மிகவும் இயலாத ஒரு விடயம். எனவே எனது வாதம் என்னவென்றால் ''தடை நீக்கம்'' என்பது பற்றி ஏன் பேச வேண்டும் என்பதாகும்.

✡ *கேள்வி:–*

விடுதலைப்புலிகளின் தடை நீக்கத்தால் ஏற்படக்கூடிய அனுகூலங்கள் எவை? பிரதிகூலங்கள் எவை? என்று நீங்கள் கருதுகிறீர்கள்.

○ *பதில்:–*

பல வழிகளிலும் பார்க்கும் போது விடுதலைப்புலிகளுக்கே இதனால் அனுகூலங்கள் உள்ளன. தடை நீக்கத்தால் விடுதலைப்புலிகளுக்கு ஒரு கௌரவம் ஏற்படும்.

அதனால் அந்த அமைப்புதம் மீதான குற்றங்கள் எல்லாம் அகன்று விட்டதாகத் தெரிவிக்கும். உதாரணமாக வெளிநாடுகளில் உள்ள வங்கிகளில் செயற்படாது முடக்கப்பட்டுள்ள அவர்களின் நிதி வைப்பு செயற்படத் தொடங்கும். எனவே விடுதலைப்புலிகள் பணத்தை தாம் விரும்பிய தேவைகளுக்காக அங்கே வங்கிகளில் இட முடியும்.

இந்த நிதி ஆயுதம் வாங்க அவர்களுக்கு உதவும். இவ்வாறு நடைபெறுமானால் விடுதலைப் புலிகள் மீண்டும் யுத்தத்தை முன்னெடுப்பதற்கான பலத்தைப் பெற்று விடுவார்கள். இது புலிகளுக்கு அனுகூலமாகவும் அரசாங்கத்திற்குப் பிரதிகூலமாகவும் அமையும்.

இது நிச்சயமாக அரசாங்கத்தைப் பலம் இழக்கச் செய்யும். அத்துடன் விடுதலைப் புலிகள் உலகின் எல்லாப் பகுதிகளுக்கும் சென்று, ஏற்கனவே தம்மைத் தடை செய்த நாடுகளிடம் தடையை நீக்கும்படி கேட்பார்கள். அதேவேளை இங்கே தடை நீக்கம் செய்யப்பட்டால் ஏனைய நாடுகளும் இதற்கு ஏற்ற மாதிரி பின்பற்ற வேண்டிய ஒரு நிலைப்பாடு அவற்றிற்கு ஏற்படும். விடுதலைப்புலிகளுக்கு இது இன்னொரு அனுகூலம்.

அரசாங்கத்திற்கு இன்னொரு பிரதிகூலம். எனவே இவைகள் நிச்சயமாக அரசாங்கத்தை பலம் இழக்கச் செய்யும்.

எனது கருத்துப்படி அரசும் புலிகளும் பேச்சுவார்த்தை மேசையில் சுமுகமான சூழ்



நிலையில் பேச்சை நடத்துவதற்கு தடை நீக்கம் வசதியாக அமையலாம்.

விடுதலைப்புலிகள் ஏன், எப்போது தடை செய்யப்பட்டார்கள். தலதா மாளிகை மீது அவர்கள் ஈவிரக்கமில்லாமல் தாக்குதலை மேற் கொண்ட பின்னரே அவர்கள் தடை செய்யப்பட்டனர். இதன் காரணமாகவே தியவதன நிலமே எத்தகைய சமாதானப் பேச்சுவார்த்தையையும் மேற்கொள்வதற்கு முன் விடுதலைப்புலிகள் பகிரங்கமாக மன்னிப்பு

**தமிழில் -கபிலர்**

கோரவேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் விடுதலைப் புலிகளின் தடையை நீக்குமானால் அந்தத் தடை நீக்கம் இந்த நாட்டிலுள்ள பௌத்த சிங்கள மக்களின் உணர்வுகளைப் பாதிக்கும் என்பதை தனது மனதில் பதித்துக் கொள்ள வேண்டும்.

அரசு இந்த உண்மையை தனது நினைவில் வைத்திருக்கும் என்று நான் தனிப்பட்ட முறையில் கருதுகிறேன்.

சமாதானத்திற்கான பேச்சுக்கள் முறிவடையுமானால் புலிகள் மீதான தடை நீக்கம் ஐக்கிய தேசிய முன்னணி அரசின் நம்பகத்தன்மைக்கு பாதிப்பை ஏற்படுத்தும்.

எனவே, விடுதலைப் புலிகளின் தடையை நீக்குவதற்கு முன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா இவைகளையெல்லாம் ஆழ்ந்து அவதானிப்பார் என்று நான் நிச்சயமாக நம்புகின்றேன்.

✡ *கேள்வி:–*

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் தமது இயக்கம் மீது விதிக்கப்பட்ட தடை நீக்கப்படாவிட்டால் எத்தகைய சமாதானப் பேச்சிலும் ஈடுபடப் போவதில்லை என்று தெரிவித்திருக்கிறார். அவர்களது கருத்து நோக்கில் இது நியாயப்படுத்தக் கூடியது என்று கருதுகிறீர்களா?

○ *பதில்:–*

விடுதலைப் புலிகளின் கருத்து நோக்கில் அவர்களது எல்லா கோரிக்கைகளும் நியாயப்படுத்தக் கூடியவைகளே.

ஆனால் அவைகள் இப்போதைய சூழ்நிலைக்குப் பொருந்துமா என்பதே கேள்வி.

இந்த நாட்டிலுள்ள ஏனையோரது மன உணர்வுகளையும் நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.

இந் நாட்டிலுள்ள சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள் ஆகியோரின் உணர்வுகளை இடித்து வேரோடு சாய்க்கும் முயற்சியில் நாம் ஈடுபடக் கூடாது.

நாங்கள் விடுதலைப் புலிகளின் உணர்வுகளை மாத்திரம் எமது ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளக்கூடாது. விடுதலைப்புலிகளின் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட வேண்டுமோ இல்லையோ, நான் விரும்புவது என்னவென்றால் சமாதான வழிமுறைகள் தொடர வேண்டும். அவை முறியும் விதத்தில் எதுவுமே செய்யக்கூடாது.

வடக்கு கிழக்கில் இடைக்கால நிர்வாகம் அமைக்கப்படும் என்ற கருதுகோளில் சிங்களக் கட்சிகள் உட்பட வடக்கு கிழக்கில் போட்டியிட்ட கட்சிகளுக்கும் அந்த நிர்வாகத்தில் இடமளிக்கப்பட வேண்டும் என்று நீங்கள் கருதுகிறீர்களா?

○ *பதில்:–*

இதற்கு நான் ஆம் என்றே கூறுவேன். எனது நோக்கின்படி எல்லாக் கட்சிகளுக்கும் சந்தர்ப்பம் கொடுக்க வேண்டும்.

வடக்கில் தமிழர்களும், முஸ்லிம்களும் இருக்கிறார்கள். கிழக்கில் தமிழர்களும், முஸ்லிம்களும், சிங்களவர்களும் இருக்கிறார்கள். எனவே, கொள்கை அடிப்படையில் எல்லாக் கட்சிகளுக்கும் இந்த நிர்வாகத்தில் இடம் அளிக்க வேண்டும்.

என்னதான் சொன்னாலும், செய்தாலும் ஜனநாயக முறை நடைமுறைப்படுத்தப்படுவதோடு பேணப்படவும் வேண்டும்.

அத்தோடு புலிகள் பிரதான அரசியல் நீரோட்டத்தில் பிரவேசிக்க விரும்பினால் அவர்கள் ஆயுதப் போராட்டத்தைக் கைவிட வேண்டும்.

இதேவேளை வடக்கு கிழக்கில் புலிகளுக்கு இடைக்கால நிர்வாகம் ஒதுக்கப்பட்டுள்ளதாக பகிரங்கமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இடைக்கால நிர்வாக அமைப்பின் மாதிரி பற்றி பேச்சுவார்த்தை மூலம் கலந்துரையாடப்படும். இதை அறிவதற்கு மக்களுக்கு உரிமை இருக்கிறது. எல்லாக் கட்சிகளுடனும் இது பற்றி கலந்துரையாடப்படவும் வேண்டும்.

புலிகள் ஆயுதங்களைக் கைளிக்க முன்பு இடைக்கால நிர்வாகம் அமைக்க முடியாது என்றே நான் சொல்வேன். எல்லா மக்களின் பாதுகாப்பும் ஸ்ரீலங்கா அரசாங்கத்தில் தங்கியிருக்கிறது.

ஆயுதங்களைக் களைவது பற்றிய நிலையான உறுதிப்பாடு மக்களுக்குத் தேவைப்படுகிறது. வடக்கு கிழக்கில் உள்ள சிங்களமக்களின் நிலைப்பாடு பற்றி அரசு இதுவரை எத்தகைய ஒரு அறிக்கையையும் வெளியிடவில்லை. சிங்களவர்கள் மிகவும் பாதுகாப்பற்ற நிலையில் அப்பகுதிகளில் வாழ்கிறார்கள் என்பது கவனத்தில் எடுக்கப்படவேண்டியதாகும்.

---

## காலமெல்லாம்.....

(13ம் பக்க தொடர்ச்சி)

தியின் தூய்மையான அன்பு வெறுப்பை ஏற்படுத்தியது. அவளை வாய்க்கு வந்தவாறெல்லாம் திட்டிவிட்டு இனி என்னைப் பார்க்க வராதே என்று கூறிவிட்டு சென்றுவிட்டான். ஆனால் இப்படியெல்லாம் நடக்கும் என்று ராசாத்தி சற்றும் எதிர்பார்க்கவில்லை. அவன் கூறிய வார்த்தைகளை கேட்டுத் துடித்துப் போனாள். அவனை அடையவும் முடியாமல், வெறுக்கவும் முடியாமல் தன்னைத்தானே நொந்தபடி வீடு சென்றாள். அதன் பின்னெல்லாம் ராசாத்தியை நினைததாலே செல்வனுக்கு அருவருப்பாக இருக்கும். இவ்வளவு நாளும் அவளுடனா சுற்றித் திரிந்தேன் என்று வெறுப்பாக நினைப்பான்.

திடீரென ஒரு நாள் சாந்தி செல்வனிடம் வந்தாள். 'உன்னிடம் ஒரு கவலையான விஷயம் கூற வேண்டும்'' என்று கூறி ஆரம்பித்தாள். ''எனக்கு அப்பா வெளிநாட்டில் ஒரு மாப்பிளை பார்த்திருக்கிறார். மாப்பிளை அமெரிக்காவில் எஞ்சினியராக இருக்கிறாராம். அங்கே போனால் என் வாழ்க்கை சிறப்பாக அமையும் என்று அப்பா சொல்லுகிறார். அப்பாவின் சொல்லை என்னால் தட்டமுடியாது. தயவு செய்து நீ என்னை மறந்திட்டு வேறொரு பெண்ணைக் கல்யாணம் செய்து சந்தோசமாய் இரு'' என்று கூறினாள். செல்வன் எவ்வளவோ கெஞ்சியும் அவள் கேட்கவே இல்லை. செல்வனுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. அவ் அதிர்ச்சியை அவனால் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை. அப்போதுதான் ராசாத்தியின் தூய்மையான அன்பு அவனுக்கு புரிந்தது. 'காலமெல்லாம் எனக்காக காத்திருப்பேன்'' என்று கூறிய வளை நோகடித்துவிட்டேனே. என எண்ணி அழு தான். இப்போதே ராசாத்தியின் காலில் விழுந்து மன்னிப்பு கேட்க வேண்டும் என்று எண்ணி ஊருக்குப் புறப்பட்டான். பஸ் பயணத்தில் காணும் இனிய இயற்கைக் காட்சிகளெல்லாம் அவனுக்கு வெறுப்பளித்தன. ஒருவாறு பஸ் ஊரை வந்தடைந்ததும் இறங்கி ஓட்டமும் நடையுமாய் ராசாத்தியின் வீட்டையடைந்தவன் ஒரு நிமிடம் அதிர்ந்து போய் நின்றான். ராசாத்தியின் வீட்டு வாயிலில் வாழைமரமும் தோரணங்களும் கட்டப்பட்டிருந்தன. உள்ளிருந்து கேட்ட அழுகுரல் அவனை ஒரு நிமிடம் ஏங்க வைத்தது. ஒரு வேளை ராசாத்தியின் தாயார் இறந்து விட்டாரோ என எண்ணி ராசாத்திக்கு ஆறுதல் கூறுவதற்காக உள்ளே சென்றவனுக்கு அங்கே பேரதிர்ச்சி காத்திருந்தது. மணமகள் போல் அலங்கரிக்கப்பட்ட நிலையில் ராசாத்தி படுத்திருந்தாள். அவன் கண்களை அவனால் நம்பவே முடியவில்லை. அப்போது ஒரு பெண் அழும் குரல் அவன் காதில் விழுந்தது. ''நீ காதலிச்சவன் உன்னை ஏற்க மறுத்துட்டான்னு இப்படிப் பண்ணிட்டியே அம்மா'' இதை கேட்டதும் அவனால் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை. ஓடிச் சென்று அவள் காலடியில் விழுந்து கதறினான். ''என்னை மன்னிச்சிடு'' என்று புலம்பின்ான். அருகிலிருந்தவர்கள் அது நட்பின் கதறலென வியந்தனர். ஆனால் அதன் உண்மையான அர்த்தம் அவளைத் தவிர வேறு யாருக்கும் புரிவதற்கு சாத்தியமில்லை.

(முற்றும்)

---

## சலரோகம்......

(4ஆம் பக்க தொடர்ச்சி)

**4. ஊசியினை உடலினுள் ஏற்றல்**

ஊசி ஏற்றப்படும் இடத்தில் உள்ள தோலினை surgical sprit ஆல் துடைக்கவும்.

ஊசி ஏற்றப்படும் பகுதியை பெரு விரலாலும் சுட்டு விரலாலும் நன்றாகப் பிரித்துப் பிடிக்கவும். இதனால் ஊசி ஏற்றப்படும் போது ஏற்படும் வலியைக் குறைக்கலாம்.

பின் ஊசியை தோலுக்கு செங்குத்தாகப் பிடித்து, உட்செலுத்திய பின் இன்சுலினை உட்செலுத்தவும்.

ஊசியினை வெளியே எடுத்தபின் ஊசி குற்றிய இடத்தை பஞ்சினால் அழுத்திப் பிடிக்கவும்.

5. ஊசி, சிறிஞ்ச் இரண்டையும் தொற்று நீக்கிய பின்னரே மீண்டும் பாவித்தல் வேண்டும்.

ஒரே இடத்தில் தொடர்ந்து ஊசி போடும்போது தோல் தடித்தல், கட்டிகள் உருவாதல் போன்ற விளைவுகள் ஏற்படலாம். எனவே ஊசி போடப்படும் இடங்களை மாற்றுதல் அவசியம். தொடையின் முற்பகுதி, அடிவயிற்றுப் பகுதி, புட்டப் பகுதி, மேற்கைப் பகுதி போன்ற இடங்களில் மாறிமாறிப் போடலாம்.

**சலரோகமும் மயக்கநிலையும்**

மயக்கநிலையானது இரத்தத்தில் குளுக்கோசின் அளவு குறித்த அளவை விட கூடுவதனால் (HYPERGLYCAEMIA) அல்லது குறைவதனால் (HYPOGLYCAEMIA) ஏற்படுகின்றது.

(A) பின்வரும் நிலைகளில் குருதியில் குளுக்கோசின் அளவு குறையலாம்.

1. மாத்திரை அல்லது இன்சுலின் ஊசி எடுத்த பின்னர் உணவு உட்கொள்ளாத பொழுது உண்ண தாமதமாகும் பொழுது குறைந்தளவு உண்ணல்.
2. இன்சுலின் அல்லது மாத்திரையின் அளவு கூடுதல்

(மறு இதழில் தொடரும்)

பெ.பிரதீபன்
4ஆம் வருடம்
மருத்துவ பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்



# சிறுவர் அரங்கம்

## உலகிலே மிகப் பெரியவை

மிகப் பெரிய சமுத்திரம் - பசுபிக் சமுத்திரம்
மிகப் பெரிய கடல் - தென் சீனக் கடல்
மிகப் பெரிய வளைகுடா - மெக்ஸிக்கோவளைகுடா
மிகப் பெரிய விரிகுடா - ஹட்சன் விரிகுடா
மிகப் பெரிய தீவு - கிறீன்லாந்து
மிகப் பெரிய மைதானம் - ஸ்ரோஹேவ் மைதானம்

*றெ. நிசாந்தன்,*
*புனித.பத்திரிசியார் கல்லூரி.*

## நோபல் பரிசு பற்றி

★ பௌதிகம், இரசாயனம், மருத்துவம், இலக்கியம், சமாதானம், பொருளாதாரம் ஆகிய ஆறு துறைகளில் அரிய சாதனைகளைப் புரிந்தவர்களுக்கு உலகிலேயே மிக உயர்ந்த விருதாக கருதப்படுகின்ற நோபல் பரிசு வழங்கப்படுகிறது.

★ சுவிடன் நாட்டைச் சேர்ந்த அல்பிரட் நோபெல் (Alfered nobel) எனும் அறிஞர் டைனமட் வெடி மருந்துகளைக் கண்டு பிடித்து பெரிய செல்வந்தரானார். ஆக்க வேலைகளுக்கு கண்டு பிடித்த வெடிமருந்துகள் போர் முதலிய அழிவு வேலைகளுக்கு பயன்படுத்தப்பட்டு வருவதைக் கண்டு மனம் வருந்தினார் அதனால் மக்களின் நன்மைக்குத் தொண்டு செய்வோரை ஊக்குவிக்கப் பரிசுகள் வழங்க எண்ணினார்.

★ இதற்கென "நோபெல் நிறுவனம்" (Nobel Foundation) என்பதை நிறுவி அதற்குப் பெரும் பகுதி நிதியை ஒதுக்கி வைத்தார். இதிலிருந்து வரும் வருமானத்தைக் கொண்டு அவர் பெயரிலே பரிசுகள் வழங்கப்படுகிறது. அவரது உயிலை (1896) இல் வாசித்த போதுதான் அவர் இத்தகைய பரிசை நிறுவியுள்ளார் என்பது தெரிய வந்தது. 1901 முதல் நோபல் பரிசு வழங்கப்பட்டு வருகின்றது.

*சி. திருச்செந்தூரன்,*
*யா/ நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்.*

## நொடிப் பொழுது

★ அவனுக்கு அது வீடு மற்றவர்களுக்கு வலை. அது என்ன?
சிலந்தி

★ வாசல் காப்பான். விசுவாசமாய் இருப்பான். கடிக்கவும் மாட்டான். குரைக்கவும் மாட்டான். கதவருகே ஒட்டிக்கிடப்பான் அவன் யார்?
தாழ்ப்பாள் (வார்த்தடி)

★ தலையை சீவினால் கறுப்பு நாக்கை நீட்டுவான் அவன் யார்?
பென்சில்

★ பகலெல்லாம் ஊரை சுற்றுவான் இரவில் கதவோரம் கிடப்பான் அவன் யார்?
செருப்பு

★ வால் நீண்ட குருவிக்கு வாய் உண்டு வயிற்றில் அது என்ன?
அகப்பை

*வி. கஸ்தூரி.*
*யா/வட்டு மத்திய கல்லூரி*

## நிறந்தீட்டுவோம் வாருங்கள்



அன்புக் குழந்தைகளே! விதம் விதமாக உங்களிற்கு வர்ணம் தீட்ட ஆசை தானே? இதோ இங்கு தரப்பட்டிருக்கும் படத்தில் உங்கள் கைவண்ணத்தைக் காட்டுங்கள் பார்க்கலாம். என்ன நீங்கள் நிறந்தீட்டத் தயார் தானே?



## ஆலமரம்



அதோ பார் ஆலமரம்
அழகு மிக்க ஆலமரம்

களைப்பு மிகுந்து வருவோருக்கு
கருணை நிழலாம் ஆலமரம்

வண்ண வண்ண பறவைகள்
வந்து தங்கும் ஆலமரம்

சிவப்பு வண்ண பழங்களை
சிரித்தே தாங்கும் ஆலமரம்


காற்றில் அசைந்து ஆடியே
இதம் தரும் ஆலமரம்

வலிமை வாய்ந்த விழுதினால்
வாழ்ந்து நிற்கும் ஆலமரம்

*சி.ரட்னதாஸ்,*
*நவாலி மகாவித்தியாலயம்.*

## வழி காட்டுங்கள்

Bயில் உள்ள மாம்பழத்தை உண்பதற்கு அணிலுக்கு வழி காட்டுங்கள் பார்க்கலாம்.




## கணிதப் புதிர்கள்

இடமிருந்து வலமாகவோ மேலிருந்து கீழாகவோ மூலை விட்டமாகவோ கூட்ட 65 வருமாறு வெற்றிடங்களை எண்களால் நிரப்புக.

| | | | | |
|---|---|---|---|---|
| | | | 20 | |
| | | 25 | | |
| | 5 | | | |
| 10 | | | | |
| | | | | 15 |

### விடைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| 11 | 24 | 7 | 20 | 3 |
| 4 | 12 | 25 | 8 | 16 |
| 17 | 5 | 13 | 21 | 9 |
| 10 | 18 | 1 | 14 | 22 |
| 23 | 6 | 19 | 2 | 15 |

*P. அன்ரன் ஜெயக்குமார்,*
*குருநகர்.*

## விந்தையான விநோதங்கள்



### பாம்பை விழுங்கும் தவளை

பாம்புகள் தானே தவளைகளை விழுங்கும்? ஆனால், தென் அமெரிக்காவில் வாழும் ஒரு பவுண்ட் எடை உள்ள இந்தத் தவளை, நாலரை அடி நீளம் உள்ள பாம்புகளைக் கூட, ஒரே நொடியில் லபக் செய்துவிடும்.

### நீந்தத் தெரியாத மீன்

போர்னியோ தீவுப் பகுதிகளில் வாழும் மீன்களுக்கு நீந்தத் தெரியாது. ஆற்றில் வெள்ளம் அதிகமாக வந்து விட்டால், உடலில் உள்ள பசையைத் தடவி, பாறையில் 'கம்' போட்டது போல் ஒட்டிக் கொள்ளும். ஏதாவது ஏமாளி மீன் வந்து அதன் வாயில் விழுந்தால் தான் அதற்கு ஆகாரம்.



## இறைவனின் அருள்

ஒரு துறவியிடம் வந்த சிறுவன் ஒருவன் "எல்லோருடைய விருப்பத்தையும் கடவுளால் நிறைவேற்ற முடியாது போல இருக்கிறதே?" என்றான்.

"சிறுவனே! நீ ஏன் அப்படிச் சொல்கிறாய்?" என்று கேட்டார் துறவி.

ஐயா! உழவனோ மழை பெய்ய வேண்டும் என்று வேண்டுகின்றான், ஆனால் கூலிவேலை செய்பவனோ வெயில் இருக்க வேண்டுமென்று வேண்டுகின்றான்.

பழவியாபாரி, மழையும் இருக்கக் கூடாது, வெயிலும் இருக்கக் கூடாது என்று வேண்டுகின்றான்"

அதனால், இதிலிருந்து கடவுளே நினைத்தால் கூட எல்லோருடைய வேண்டுதலையும் நிறைவேற்ற முடியாது என்று தெளிவாகிறதே" என்றான் அவன்.

"அது சரி! இப்பொழுது வானிலை எப்படி உள்ளது?" என்று கேட்டார் துறவி.

"வெயிலாக உள்ளது" என்றான் சிறுவன். மூன்று நாட்களிற்கு முன் எப்படி



இருந்தது" கேட்டார் துறவி.

"திங்கள், செவ்வாயில் மழை பெய்தது.புதனன்று மழையோ, வெயிலோ இல்லாமல் மிதமாக இருந்தது" என்று பதிலளித்தான் சிறுவன்.

"சிறுவனே! பார்த்தாயா? மூன்று நாட்களுக்குள்ளேயே கடவுள் எல்லோருடைய விருப்பத்தையும் நிறைவேற்றியுள்ளாரே! அப்படியிருக்க நீ கடவுளின் அருளை சந்தேகிக்கலாமா?" என்றார் துறவி.

உண்மையை உணர்ந்த சிறுவனும் துறவியை வணங்கி, மகிழ்ச்சியுடன் வீட்டிற்கு சென்றான்.

சிறுவர்களே! கதையைப் படித்தீர்களா? நீங்களும் இறை நம்பிக்கை கொண்டவர்களாக இருத்தல் வேண்டும். உங்கள் இறை நம்பிக்கை எப்போதும் வீண்போகாது.

*தொகுப்பு:- சுஜா*

# சுவீற் ஹனியின்

(வீடியோ & போட்டோ)

## இவரைத் தெரியுமா — பரிசுப் போட்டி இல:— 09

படத்தில் இருப்பவர் யார் தெரியுமா?

ஷாக் அடிக்கும் படத்தில் இரு கதாநாயகர்களுடன் நடித்த தென்னிந்திய பிரபல நடிகை இவள். இவளைத் தெரிந்தால் உங்கள் விடைகளை எழுதி எதிர்வரும் 04 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக நீங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:-



'இவரைத்தெரியுமா போட்டி இல:- 09'
சுவீற் ஹனி,
192/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(பெருமாள் கோவில் சந்திக்கு அருகாமை)

குறிப்பு:-
சரியான விடை எழுதும் மூன்று போட்டியாளர்கள் குலுக்கல் முறை மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசு வழங்கப்படும். பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகள் தமக்கான பரிசுகளை 'வலம்புரி' காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளவும்.


### இவரைத் தெரியுமா பரிசுப் போட்டி இல:— 09

படத்தில் உள்ளவரின் பெயர் :-.................................

அனுப்புபவரின் முழுப் பெயர் :-.................................

அனுப்புபவரின் முகவரி :-.................................
.................................
.................................

### இவரைத்தெரியுமா பரிசுப்போட்டி இல 08 சரியான விடை



நடிகை ஐஸ்வர்யாராய்

இவரைத்தெரியுமா பரிசுப்போட்டி இல. 08 இல் பங்குபற்றி பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகளின் பெயர் விபரம்:

முதற்பரிசு:— கா. காயத்திரி, சுன்னாகம் தெற்கு, சுன்னாகம்.

இரண்டாம்பரிசு:— மேரி சாளினி சாள்ஸ், இல.4, ஈச்சமோட்டை வீதி, யாழ்ப்பாணம்.

மூன்றாம்பரிசு:— G.சுபராஜி, ஐங்கர பதி, நெல்லியடி வடக்கு, கரவெட்டி.

சரியான விடைகளை எழுதி பாராட்டுப்பெறும் அதிர்ஷ்டசாலிகளின் பெயர் விபரம்:-

*ஜி. றீற்றா குருநகர், N.K.வாசன் வல்வெட்டித்துறை, ஜெ.ஜனார்த்தனன் பருத்தித்துறை, ஸ்ரீஜீவா சஞ்ஜீவன், வட்டுக்கோட்டை, S.கோகுலன் பல்கலைக்கழகம், இ.குலசிங்கம் நயினாதீவு, சி.திருச்செந்தூரன் கரவெட்டி, க. ஜெயந்தி கொக்குவில், கு.ராஜினி கோப்பாய், த.சுகிர்தா திருநெல்வேலி.*

## யோகம் பற்றி அறிந்து கொள்வோம்

# யோக முறையின் பிரிவுகள்


யோக முறைகளின் முடிவான நோக்கமெல்லாம் ஒன்றுதான். என்றாலும் அடையும் குறிக்கோளை அணுகிச் செல்கின்ற வழியில்தான் சற்று வித்தியாசப்படுகின்றன. ஏனெனில் மனிதர்களின் குணங்கள் ஆளுக்கு ஆள் மாறித்தானே அமைந்திருக்கின்றன. அவரவர்களுக்கு ஏற்ற வழிகளில், இயைந்த ஒன்றைத் தேர்ந்தெடுத்துப் பயிற்சி செய்து பயன் பெற வேண்டும் என்பதும், அவைகள் ஒன்றையொன்று ஒட்டித் தழுவியே ஒன்றிணைந்து போகின்றன என்பதையும் நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது.

இவ் யோகமுறையானது ராஜயோகம், ஹடயோகம், கர்ம யோகம், ஞானயோகம், பக்தி யோகம், மந்திரயோகம், கீதா யோகம் என்ற பல பிரிவுகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது.


மனதைப் பண்படுத்துவதற்கு ராஜயோகமும், உடலை பண்படுத்துவதற்கு ஹடயோகமும், கடமையே பிரதானம் என்பதற்கு கர்ம யோகமும், மெய்ஞ்ஞான அறிவிற்கு ஞானயோகமும், சரணாகதி பக்திக்கு பக்தி யோகமும், அறிவியல் ஈடுபாட்டிற்கு மந்திர யோகமும், இறைவனை உருகிப்பாடுவதற்கு கீதாயோகமும் யோகமுறை பயிற்சிகளுக்கு பயன்படுத்தப்படுகின்றன.

(தொடரும்..)





T.K.காந்தன்
வயது:- 18
கோண்டாவில் மேற்கு,
நெட்டிலிப்பாய், யாழ்ப்பாணம்.
வழமையானவை.




அ.ஷாஜித்,
வயது:- 20
மடத்தடி, சாவகச்சேரி.
கதைப்புத்தகம், பேனா நட்பு,
வானொலி, கவிதை.



யோ. அசாத்,
வயது:- 14
மாகியப்பிட்டி
சண்டிலிப்பாய்.
கவிதை, வானொலி.



அ.வி.போ.பகீரதன்,
வயது:- 19
338, கொழும்புத்துறை வீதி,
கொழும்புத்துறை.
யாழ்ப்பாணம்.
T.V பார்த்தல்



ச.சதீஸ்,
வயது:- 21
பழைய டச்சு வீதி,
கல்வியங்காடு.
T.V, கிரிக்கெட், பேனா நட்பு.


'பேனா நண்பர்கள்' பகுதியில் இணைந்து கொள்ள விரும்பும் வாசகர்களுக்கு!

நீங்கள் உங்கள் சுயவிபரங்களுடன், அடையாள அட்டையின் நிழற்பிரதியையும் இணைத்து சங்குநாதத்தின் பேனா நண்பர்கள் பகுதிக்கு அனுப்பிவையுங்கள்.

ஆசிரியர்

# குறுக்கெழுத்துப் போட்டி

## இல. 10



*அனுப்ப வேண்டிய முகவரி*

**குறுக்கெழுத்துப் போட்டி இல-10**
**ஸ்ரீ வாணி நகை மாடம்,**
**இல.173, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

பெயர் :- .................................
விலாசம் :- .................................
.................................
.................................

.................✂ இங்கே வெட்டுக.................................

## இடமிருந்து வலம்

(1)உலகம் (3)சரிநிலையான (5)உயிரற்ற (வலம்மாறி) (6)பெண் (7)சனக்கூட்டமான (8)எங்களுடைய(வலம்மாறி) (9)அழகு (11)ஆடை (வலம்மாறி) (13)பகை (வலம்மாறி) (15)வருத்தம் (16) நறுஞ்சுவை கொண்ட (17)அறக்கட்டளை (19)பாடல் (வலம்மாறி)

## மேலிருந்து கீழ்

(1)மலை மல்லிகை (2)உரை நடை (4)சந்தனம் (9)முன்னைய(கீழிருந்து மேல்) (10)குடிசை(கீழிருந்து மேல்) (11)பூரணசந்திரன் (12)இதயம்(கீழிருந்து மேல்) (14)பேணு/சொற்பொருள் (18)சூல்(கீழிருந்து மேல்) (19)பக்தி நிறைந்தவன்(கீழிருந்து மேல்) (20)வடக்கே செல்லும் பாதை

### குறுக்கெழுத்துப்போட்டி 9 இற்கான விடைகள் இடமிருந்து வலம்

1) அசாவாமை 4) நகுக 6) வரன் 7) கொல்லர் 8) தூம்பு 9) அவ 10) கபடம் 12) வாழ்க்கை 14) அலி 15) மீகம் 16) பலவந்தமாக 17) இன்பம் 19) ஏனம்

### குறுக்கெழுத்துப்போட்டி 9 இற்கான விடைகள் மேலிருந்து கீழ்

1) அவதூறு 2) சாரம் 3) வான் புகழ் 4) நல் 5) கர்வம் 7) கொட்டகை 9) அலகு 11) பக்குவம் 12) வாலிபன் 13) சுகமான 15) மீதம் 18) பல 19) ஏகம்

**பல வாசகர்கள் இக் குறுக்கெழுத்துப்போட்டியில் ஆர்வத்துடன் இணைந்து கொண்டுள்ளனர். அவர்களில் அதிர்ஷ்ட சீட்டிழுப்பு மூலம் தெரிவு செய்யப்பட்ட முதல் மூன்று அதிர்ஷ்டசாலிகளின் விபரம்:-**

1ம் பரிசு - க. சயந்தினி, நிகரை வீதி, சங்கானை.

2ம் பரிசு - க. கவிதா, நூலக உதவியாளர், பொதுசன நூலகம், சங்கானை.

3ம் பரிசு - த. யோகராசா, சரசாலை தெற்கு, சாவகச்சேரி.


**போட்டியில் கலந்து கொண்டு பாராட்டுப்பெறும் அதிர்ஷ்டசாலிகளின் விபரம்**

*வி. கங்கேஸ்வரி வட்டுக்கோட்டை, ஸ்ரீ. பரமானந்தவல்லி பண்ணாகம், எஸ். இராகுலன் சங்கானை, இ. குலசிங்கம் நயினாதீவு, க. ஜீவகாருண்யம் காரைநகர், அ. மேரிலூட்டஸ் நாவாந்துறை, பாரதி யாழ்ப்பாணம், ச. கிருஷ்ணவத்சன் சுன்னாகம், க. ஜெகதீபன் மானிப்பாய்.*

**குறிப்பு:- பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகள் தமக்கான பரிசுகளை ஸ்ரீ வாணி நகை மாடத்தில் பெற்றுக் கொள்ளவும்.**

குறுக்கெழுத்துப் போட்டிக்கு விடைகள் அனுப்பும் போது கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "குறுக்கெழுத்துப் போட்டி இல.10" எனத் தவறாது குறிப்பிடவும். அனுப்ப வேண்டிய முடிவுத்திகதி 04-05-2002.


| | |
|---|---|
| முதற் பரிசு:- | 150.00 |
| இரண்டாம் பரிசு:- | 100.00 |
| மூன்றாம் பரிசு:- | 50.00 |





## ரம்பா- ஜோதிகா- லைலாவிடம் பணம் கேட்டு மிரட்டிய தாதா



சாரு, நந்து, பூஜா மூவரும் மியூசிக் ஆல்பம் போட்டு நகரத்தில் மிகவும் பிரபலமான பெண்கள். அவர்களை ஒரு கொலை வழக்கில் காட்டிக் கொடுத்து விடு வேன் என் று ராம் என் ற ஆசாமி மிரட்டிக் கொண் டிருந்தான். மூ வ ரு ம் என்ன செய் வது என் று தெரி யாமல் தவித்துக் கொ ண் டிருந்தார்கள். அவர்களின் தவிப்பை பயன் படுத்திக் கொண்ட ராம், "முப்பது லட்ச ரூபாய்




கொடுத்து ட்டா, உங்களை விட்டுடறேன். இன்னிக்கு மாலை மூன் று மணிக்குள் முப்பது லட்ச ரூபாயை எடுத் துட்டு, மவுண்ட்ரோடு பக்கத் திலே உள்ள பாழடைந்த பங்களாவுக்கு வந்துடுங்க... தவறி போலீசுக்கு போனா... போய்க்கு ங்க நீங்களே மாட்டிக்கு ங்க" என்றான். அன்று மாலையே வில்லன் ராம் சொ ன்ன இடத்தில் அவனை சந்தித்தா ர்கள். பணம் எடுத்துட்டு வருவார் கள் என்று எதிர் பார்த்துக் காத் திருந்த அவனை, மூ வ ரு ம் சேர்ந்து அடித் து உதைத்து க ட் டி ப் போட்டனர். போலீசுக் கு போன் செ ய் து அவனை பி டி ட் டு கொடுத்த னா. இப்ப டியொரு காட்சி போகஸ் இன் பிர நிறுவ னம் டமான மா ண்



முறையில் தயாரிக்கும் 'திரி ரோசஸ்' படத்துக்காக சென்னை ரோட்டில் படமாக்கப்பட்டது.சாரு, நந்து, பூஜாவாக ரம்பா, லைலா, ஜோதிகாவும் வில்லன் ராமாக ராம் கோபாலும் நடித்தனர். மற் றும் ரேகா, விவேக், ராஜன், பி. தேவ், தேவன், மனோபாலா, மதன் பாப், அனுமோகன், ஜெயா முரளி, சிட்ரா, குயிலி, ஆகியோரும் நடிக்கிறார்கள். கார்த்திக் ராஜா இசை அமைக்கிறார். வசனம் – பாண்டியன். திரைக்கதை அமைத்து டைரக்டு செய்கிறார் பாமேஸ்வா. தயாரிப்பு நிர்வாகம் – ஜெயராம் அபி, தயாரிப்பு – உஷா ராணி, வாசு.

## "சித்தி" சி.ஜே. பாஸ்கருக்கு விஜய்காந்த் வைத்த செக்!


விஜய்காந்த் ஹீரோ. இசை – இளையராஜா, பாடல்கள் – வைரமுத்து, கதை, திரைக்கதை, இயக்கம் – ஜி.ஜே. பாஸ்கர் என புதுக்கூட்டணி போட்டு. . . நீண்டகாலமாக பிரிந்திருந்த கவிஞரையும் இசைய மைப்பாளரையும் சேர்த்துவைக்க பக்காவாக ப்ளான் பண்ணி வைத்திருக்கிறார் தயாரிப்பாளர் ஜி.வி.தேசிய ஜனநாயகக் கூட்டணி மாதிரி ஏக குழப்பம் நடந்து கொண்டிருக்கிறது! ராஜ்ஜியம் படம் எதிர்பார்த்த படி போகாததால் அடுத்தபடத்தில் அதிக கவனம் செலுத்த வேண்டிய கட்டாயத்திற்கு வந்திருக்கிறார் கேப்டன். ஸோ. . . சீரியல் பண்ற ஆள் படம் பண்ணும்போது சொதப்பிட்டால் என்ன பண்றது? யோசனை வர டைரக்ட ராக வேறொரு ஆளைப் போடச்சொல்லி ஜி.வியைக் கூப்பிட்டு சொல்லிவிட்டாராம் கேப்டன். அண்ணாமலை சீரியல் ஷூட்டிங்கிலிருந்த பாஸ்கரைக் கூப்பிட்டு கூலாக விஷயத்தைச் சொல்லியிருக்கிறார் தயாரிப்பா ளர். பாஸ்கருக்கு பதிலாக யார் இயக்குநர் என்பது இன் னும் முடிவாகவில்லை இதற்கு நடுவே இந்தப் பிரச்சி னையை வேறுமாதிரி திரி கொளுத்திப் போட்டுக்கொண்



டிருக்கிறார்கள் சித்தி ஆட்கள். சமீபகாலமாக சித்திக்கும், கேப்டன் குரூப்புக்கும் அறிக்கைப் போர் நடந்துகொண்டிருக்கிறதல்லவா. . . அதை மனசுல வச்சிக்கிட்டு பாஸ்கரைக் கழட்டி விட்டுவிட்டார் கேப்டன் என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். ஒண்ணும் பிரச்சினை இல்லை, அதே கதையை வைத்து, சாத்தவைத்து புதுப்படம் பண்ணலாம். அதை ராடன் டி.வியே தயாரிக்கும் என்று பாஸ்கருக்கு ஆறுதல் சொல்லியிருக்கிறார் சித்தி! சபாஷ் சரியான போட்டி!

## சினேகாவின் உதட்டைக் கடித்த ஷாம்!!!


இளம் ஹீரோக்களுக்கு நடுவே ஏகப்பட்ட போட்டிகள் நடந்து கொண் டிருக்கிற நேரத்தில் நம்பிக்கையான இளைஞர் என் று சொல்லப்பட்டவர் '12B' ஷாம். கைவசம் இரண்டு மூன்று படங்கள் வைத் திருக்கிறார். இரண்டாவது படம் இன்னும் ரிலீஸாகவில்லை. அதற் குள் கதையை மாட்து. . ஷாட் இப்படி வை என் று இயக்குநர்களுக்கு அட்வைஸ் பண்ணுகிறார் என் று கோடம்பாக்கத்தில் பொரிந்து தள்ளிக்கொண்டிருக்கிறார்கள். இதுவாவது பரவாயில்லை. . லேட்டஸ்டாக அவர் மீது சொல்லப்படுகிற கம்ப்ளைண்ட், காரக்டரையே ஆட்டிப் பார்க்கிறதாக இருப்பதுதான் கொடுமை! என் ன? 'ஏய்! நீ ரொம்ப அழகா இருக்கே' படட் துக்கான பாடல் காட்சிக்காக வைசாக் போகியிருக்கிறது மண்டை காய்கிற வெயில் நேரம். . . பாட லுக்கு நடுவே கடலலைக் குள் விழுந்து புரண்டு சினேகா ஓடிவரு கிற மாதிரி காட்சி. காடசியை விளக்கி விட்டு சினேகா போட வேண்டிய காஸ்ட் யூமை எடுத் துக் கொடுக்கச் சொல் லி யி ரு க் கி றா ர் இயக்குநர். காஸ்ட் யூமர் எடுத் துக் கொடுத்த ட்ரெஸ் ஸைப் பார்த் த சி னே கா வு க் கு



அதிர்ச்சி கொசுவலையை விட மெல்லிய ஆடை அது. இதெல்லாம் நான் போடமாட்டேன் என்று அடம்பிடிக்க ஏக ரகளை. "நான் யார் தெரியுமா? இண்டஸ்ட்ரிலயே இருக்கமுடியாமப் பண்ணிடுவேன் என்று கத்த. . . ஒரு வழியாக. . . இப்போதுள்ள போட்டிகளை எடுத் துச் சொல்லி சம்மதிக்க வைத் திருக்கிறார்கள் யூனிட் ஆட்கள். மறுபடியும் காட்சியை விளக்குகிறார். அப்படியே எழுந்து ஓடிவாறீங்க. . . பின் னாலயே ஷாம் விரட்டிட்டு வர்றார், ஆனால் கையில் சிக்காம பாவலா காட்றீங்க. . . எட்டிப் புடிச்சிடறார். 'சட்'ன் னு கட்டிப்புடிச்சு உதட்டில் முத் தம் கொடுக்கிறார். ஓகேவா. . !சொல்லிவிட்டு, 'காமிராமேன் ரெடியாப்பா' எனக்கேட்கிறார். காமிரா ஓட ஆரம்பிக்கிறது. சினேகா ஓடிவருகிறார், இயக்குநர் சொன்னபடி கரெக்டாக நடக்கிறது. காட்சி ஓகே என குரல்கொக்கும்போது 'பளார்' என்றொரு சப்தம். திரும்பிப் பார்த்தால் ஷாம் கன்னத்தைட் தடவியபடி நின்று கொண்டிருக்கிறார். உதட்டில் மென்மையாக முத் தம் கொடுக்கச் சொன்னால் சினேகா இருந்த கோலத்தைப் பார்த்து உணர்ச்சிவசப்பட்டு உதட்டைக் கடித்துவிட்டாராம் ஷாம்! சினோகா ஏக டென் ஷனாகி கத்தி, படத்தில் இந்தக் காட்சி வரக்கூடாது எனச் சொல்லி சண்டைக்கு நிற் க. . . மறுபடியும் ஓடவிட்டு கன் னத்தில் முத்தமிடறமாதிரி காட்சியை எடுத்து முடிட்திருக்கிறார்கள்.அந்தப் பாடல் காட்சியை எடுட்து முடிக்கிறவரை ஷாம், சினேகா இருவரும் 'உம்' என் றிருந்தது தனிக்கதை.ஷாமிடம் யாராவது பேட்டி என் று போனால் எனக்கு ரொம்ப பிடித்த நடிகை என் று அடிக்கடி சினேகாவைப் பற் றிச் சொல்வார். கடைசியில் 'ஏய்! உன் மனசு ரொம்ப அழுக்கா இருக்கே' எனச் சொல்கிறமாதிரிப் பண்ணிட்டீங்களே ஷாம்?!

## இளமை சொட்டும் காதல் கதை ஐஸ்!

காயத்ரி ரகுராம் கதாநாயகியாக நடிக்கும் புதிய படம். பல படங்களில் தயாரிப்பு நிர்வாகியாக பணிபுரிந்த ஜே. நேதாஜி, ஜாப் எண்டர்டெயின் மென்ட் என் ற சொந்த பட நிறுவனத்தை தொடங்கி, ஒரு படம் தயா ரிக்கிறார். இந்த படத் துக்கு ஐஸ் என்று பெயர் சூட்டப்பட்டிருக்கிறது. கதாநாயகனாக புதுமு கம் அசோக் அறிமுக மாகிறார். கதாநாயகி, காயத்ரிரகுராம், முக்கிய வேடத்தில் குஷ்பு நடிக் கிறார். இவர்களுடன் விவேக், விசு, தேவன், ஆர். சுந்தர்ராஜன், மதன் பாப் மற்றும் பலர் நடிக்கிறார்கள்.கதை, திரைக்கதை, வசனம்



எழுதிய டைரக்டு செய்கிறார் ஆர். ரகுராஜ். இவர், வினிட் நடித்த 'சக்தி' படத்தை டைரக்டு செய்தவர். பிரதியுஷா நடித்து, ஆந்திராவில் வெற்றிகரமாக ஓடிக் கொண்டிருக்கும் கலுசுகோவாலனி படத்தையும் டைரக்டு செய்துள்ளார். மைனஸ் 20 டிகிரி குளிர் பிரதேசமான ஆஸ்த்திரேலியாவில் படத்தின் கதாநாயகனும், நாயகியும் பனியினால் சந்தித்துக் கொள்கிறார்கள். அவர்களின் இதயங்களை இணைத்த அதே பனி அவர்கள் பிரிவுக்கும் காரணமாக அமைகிறது. தாயகம் திரும்பிய அவர்கள், ஒருவரையொருவர் தேடுகி றார்கள். அருகருகே இருந்தும் இயற்கையின் சதியால் ஒருவர் மூச்சுக் காற்றை ஒருவர் சுவாசித்தும் நேரில் சந்திக்க முடியாமல் போய் விடுகிறது. மீண்டும் அதே பனியினால் இருவரும் இணைகிறார்கள். பி.சி. ஸ்ரீராமின் உதவியாளர் ஸ்ரீ ஒளிப்பதிவில், அறிவுமதி பாடல்கள் எழுத, இசை அமைப்பாளராக அறிமுகம் ஆகிறார் தயாரிப்பு நிர்வாகம் : ஜே. பாஸ்கர், கே. குமார், ஈஸ்வர் பாண்டியன் தயாரிப்பு மேற்பார்வை : எஸ். வெங்கடேஷ்படப்பிடிப்பு ஜெர்மனி, வியட்நாம், இத்தாலி ஆகிய நாடுகளில் நடக்கிறது.




இப் பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தினரால் இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம். எனும் விலாசத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 01.05.2002 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது